ஓம்

# திருமந்திரம் அடிப்படையில் யோகர் சுவாமிகள் அறிவுரைகள்

- S. இராமநாதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப் பா

1. தமிழ் கூறும் நல்லுலகம் ஓதி உய்திபெற
அமிழ்தத் தமிழில் மூலன் ஆக்கிய திருமந்திரம்
ஆரும் அறியா மறைபொருள் கருத்ததை
அகிலம் அறியத்தந்த ஐயனே வாழ்க.

2. திரிகால ஞானியாம் சிவயோக சுவாமி
திருமந்திரத்தை "நற்சிந்தனை" ஆக
அரிய தமிழில் அருளிய பெற்றியை
ஆராய்ந்துரைத்த ஐயனே வாழ்க.

3. திருமூலர் வாக்கும் சிவயோகர் வாக்கும்
இருநூலாயினும் ஒரு வாக்கென்ற
பெருமையை விளக்கும் பேறுபெற்றுய்ந்த
பெருமகன் இராமநாதன் புகழ் என்றும் பொலிக.

4. சைவத்தை வகுத்த தனிப் பெரும் நூலை
பல்வேறு கோணத்தில் அலசி ஆராய்ந்து
சொல்வேறு பொருள் வேறு கேண்மை நயந்து
நல்லோர் போற்றவாழ் நாதனே வாழ்க.

5. தள்ளாத வயதிலும் கொள்ளாத வாஞ்சையுடன்
அள்ளிக் கொடுக்கும் அமுதக் கருத்துக்கள்
கொள்ளக் கிடைக்கா கொள்முதல் கொடையாம்
வள்ளன்மை பூண்ட வள்ளலே வாழ்க.

– திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் ஒன்று

ஓம்

# நாம் அறியோம்

எம்மையும் இப்பிரபஞ்சத்தையும் படைத்துக் காத்து அழிக்கும் மெய்ப் பொருளை நாம் அறியோம். உலகில் வாழும் நாம் சேகரிக்கும் அறிவுகளெல்லாவற்றையும் இரு கூறாகப் பிரிக்கலாம். ஒன்று எமது உடம்பையும் நாம் வசிக்கும் உலகத்தையும் சராசரங்களையும் பற்றியது. மற்றது இத்தூலப் பொருட்களையெல்லாம் படைத்து இயக்கும் சூக்குமப் பொருளான இறைவனைப் பற்றியது. இப்பொருளையே அறியாத நித்தியமான மெய்ப்பொருளென்றும், வேதப் பொருளென்றும் சிவபெருமானென்றும் கடவுளென்றும் ஞானிகள் கூறி விளக்கியுள்ளார்கள். பிரபஞ்ச உற்பத்திக்கு மூலகாரணமான விந்து (பிந்து) வின் தாள் இறைவனின் திருவடி, திருப்பாதம், பூங்கழல், சேவடி, இணையடியெனத் திருமந்திரம் பல பாடல்களால் கூறியிருக்கின்றது.

1279 விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்த விஞ்ஞானம்
விரையது விந்து விளைந்த அவன் தாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்துவில் விளைந்த அவன் தாளே கருவில் மிதித்த கமலப் பாதமாய், நாதமாய் சக்கரங்களாய் விரிந்து சகல தோற்றங்களுக்கும் காரண கர்த்தாவாய் ஆத்மசக்கரமாய் உயிராய் இயங்குகின்றது. கருவில் மிதித்த இறைவனின் தாளை அகார எழுத்தென்றும் அதிலிருந்து எழுந்த ஆத்ம சக்கரத்தை அகாரம் இகாரம் உகாரம் ஓங்காரம் மகாரமென்று ஐந்தெழுத்தாய் பிரித்து வேதாந்த சித்தாந்த உண்மைகளை நந்தியென்னும் ஓர் ராஜரிஷி தனது எட்டுச் சீடர்களுக்கும் கூறி விளக்கியுள்ளார். திருமூலர் அருளிச் செய்த திருமந்திரத்திலும் பதஞ்சலி அருளிச் செய்த யோக சூத்திரத்திலும் ஆத்ம சக்கரத்தை இதே எழுத்துக்களால் பிரித்துள்ளார்கள். அகார எழுத்திலிருந்து எழுந்த பிராண வாயு ஐந்தெழுத்தில் இயங்குவதால் ஓமெனும் சிவநாமத்தை ஓதுகின்றது. திருமந்திரம்

**2798 மருவும் துடியுடன் மன்னிய வீச்சு**
**மருவிய அப்பு மன்னுடனிசையும்**
**கருவில் மிதித்த கமலப் பதமும்**
**உருவில் சிவாயநம வென ஒதே.**

பிராணவாயுவில் நூல்போல் நீராவியும் கலந்து மனத்தோடு அகார எழுத்தில் எழுந்த ஓமெனும் இசையே சிவனின் நாமம் என்று உணர்வால் ஓது.

**1258 மேல்வரும் விந்துவும் அவ்வெழுத்தாய் விடும்**
**மேல்வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்**
**மேல்வரும் அப்பதி அவ்வெழுத்தே வரின்**
**மேல்வரும் சக்கரமாய் வரும் ஞாலமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1259 ஞாலமதாக விரிந்தது சக்கரம்
ஞாலமதாய் விடும் விந்துவும் நாதமும்
ஞாலமதா யிடும் அப்பதி யோசனை
ஞாலமதாக விரிந்தது எழுத்தே.

1260 விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கரமாக
விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே.

1261 அப்பது வாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ் அனலாயிடும்
அப்பினில் அப்புறம் மாருதமாயெழ
அப்பினில் அப்புறம் ஆகாசமாமே.

1280 விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கரமாகும்
விளைந்த எழுத்தவை மெய்யினில் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரமாமே.

*விளைந்த ஐந்தெழுத்தையே பதஞ்சலி பஞ்சாக்சர (பஞ்ச + அக்சரம்) மந்திரமென கூறியுள்ளார்.*

966 அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத்தால் பல யோனி படைத்தனன்
அஞ்செழுத்தால் இவ்வகலிடம் தாங்கினன்
அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே.

*இறைவனாக பரமாத்மாவாகத் திரளும் வல்லமையுள்ள ஆத்மாவும் ஐந்தெழுத்துச் சக்கரத்திலேயே அமர்ந்திருக்கின்றான். கருவில் மிதித்த இறைவனின் திருத்தாளே,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாதமே, திருவடியே ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்ம சக்கரத்துக்கு இணை அடியாய் நிற்கும் அகார எழுத்து.

திருவள்ளுவரும் தனது நூலுக்கு முதலாம் அதிகாரத்தில் கடவுள் வாழ்த்துக்கு கீழ் முதல் திருக்குறளாய்க் கூறியிருப்பது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன்
முதற்றே உலகு.

அகார எழுத்தே இறைவனென்றும் அதன் பர்ணமிப்பே இவ்வுலக மென்றும் கீழ்க் காணும் திருமந்திரங்கள் இவ்வுண்மையை உறுதிப்படுத்து கின்றன.

1753 அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்
உகார முதலாய் உயிர்ப்பெய்து நிற்கும்
அகார உகாரம் இரண்டும் அறியில்
அகார உகாரம் இலிங்கம தாமே.

அகார உகாரத்தில் இயங்கும் பிராண வாயுவின் பிரணவத் தண்டே, கோதண்டமே, தனிக் கம்பமே, ஆத்மலிங்கமாய் சிவலிங்கமாய் உணர்ச்சி அளிக்கும்.

1751 ஆரும் அறியார் அகாரம் அவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுவது மாய்
மாறி எழுந்திடும் ஓசைய தாமே.

அகார உகாரமாய் நிற்கும் சிவனும் பராசக்தியுமே பிரபஞ்சம் முழுவதிலும் பல பல தோற்றங்களைப் படைத்து இயங்கும் ஒமெனும் ஓசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2180 தத்துவமானது தன்வழி நின்றிடில்
வித்தகனாகி விளங்கி இருக்கலாம்
பொய்த் தவமாம் அவை போயிடும் அவ்வழி
தத்துவமாவது அகார எழுத்தே.

மெய்ப்பொருளாவது ஓமெனும் சிவநாமத்தை ஓதி நின்றிடில் பெரும் ஞானியாக பிரகாசிக்லாம். உலக மாயை அற்று விடும். மெய்ப் பொருளாய் நிற்கும் அகார எழுத்தே இறைவனின் தாள்.

அகார எழுத்தாய் நிற்கும் கருவில் மிதித்த கமலப் பாதமே ஆத்மாவின் இணை அடியான தாள், இறைவனின் திருவடி. இத்தாளை அறிந்து உணர்ந்து அதில் அடங்குவதே மானிடப் பிறப்பின் நோக்கம். திருவள்ளுவர் பல திருக்குறள்களால் இதன் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்.

2 கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன்
நற்தாள் தொழாரெனின்

சொற்பகால உலக வாழ்க்கையை சிறப்போடு வாழ்வதற்கு சேகரிக்கும் அறிவைக் கருவில் மிதித்த கமலப் பாதத்தை நினைந்து வணங்காமல் கற்பதனால் ஒரு பயனும் அளிக்காது.

3 மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

கருவில் மிதித்த தாமரை மலரில் வீற்றிருக்கும் மாண்புமிக்க இறைவனின் திருவடி உணர்ந்தவரின் ஆத்மா தனது சிவபூமியில் நீடு வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 **வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

*விருப்பு வெறுப்பு இல்லாத திருப்பாதமாகிய அகார எழுத்து சேர்ந்தவர்களுக்கு துன்பம் ஒரு பொழுதும் தாக்காது.*

5 **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

*மெய்ப்பொருளான கருவில் மிதித்து இறைவனின் திருப்பாதத்தைச் சேர்ந்து ஐந்தெழுத்தை ஓதிப் புகழ்ந்தவர் அஞ்ஞானம் சேரும் நல்வினை தீவினைகளில் ஈடுபட மாட்டார்.*

6 **பொறிவாயில் ஐந்தவித்தார் பொய்தீர் ஒழுக்க**
**நெறி நின்றார் நீடு வாழ்வார்.**

*ஐம்புலன்களின் ஆசைகளை அறுத்து பொய்யான மாயையை வெல்லும் சன்மார்க்கமான அகார எழுத்து ஏறும் ஐந்தெழுத்து வழி கடைப்பிடித்தால் நெடுங்காலம் வாழலாம்.*

7 **தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

*ஒப்பு உவமை இல்லாத இறைவனின் கமலப் பாதம், அகார எழுத்து அறிந்து ஓதி உணர்ந்தவர்க்கல்லால் உலக வாழ்வில் பிணியாலும் நோயாலும் எழும் மனக்கவலைகள் மாற்றல் அரிது.*

8 **அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்**
**பிறவாழி நீத்தல் அரிது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பிராணாயாமம் செய்யும் ஆத்மாவின் இணை அடியான அகார எழுத்து அறிந்து ஓதி உணர்ந்தவர்க்கல்லது புறக்கடை இச்சைகளிலிருந்து நீங்குவது மிகக் கடினம்.*

9 கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

*எண்குணத்தானாகிய ஆத்மாவை பின்வரும் திருமந்திரங்கள் விளக்குகின்றன.*

2123 அத்தன் அமைத்த உடல் இருகூறினிற்
சுத்தமதாகும் சூக்குமம் சொல்லிடில்
சத்தம் பரிசம் ரூபம் ரசகந்தம்
புத்தி மனம் ஆங்காரம் புரி அட்டகாயமே.

*மெய்ப்பொருளாகிய இறைவன் அமைத்த உடம்பை உடல் உயிரென்று இரு கூறுகளாகப் பிரிக்கலாம். உடல் நிலையற்ற அழியும் தூலப் பொருள். உயிரானது எட்டுப் புரியையுடைய புனிதமான நிலையான சூக்குமப் பொருள். அது கருவில் மிதித்த இறைவனின் கமலப் பாதத்திலிருந்து முளைத்ததனால் சீவனுக்கும் சிவனுக்கும் ஒருவேறுபாடில்லை. திருமந்திரம் ;*

1932 வித்தினிலன்றி முளையில்லை அம்முளை
வித்தினிலன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையும் உடனல்ல வேறில்லை
அத்தன்மையாகும் அரன் நெறி காணுமே.

*வித்தை "சத்" என்றும் சிவன் என்றும் இறைவன் ஈசன் பராபரனென்று ஆண்பாலாகக் குறித்தும் வித்திலிந்து எழுந்த உயிரை சத்தி என்றும், இறைவி ஈஸ்வரி பராபரையென்று பெண் பாலாகக் குறித்து மெய்ப்பொருளான*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதப்பொருளை அர்த்த நாரீஸ்வரனென்று விளக்கி-யுள்ளார்கள்.

கீழ்க்காணும் திருமந்திரமும் எட்டுக் குணங்களை கூறுகின்றது.

1 ஒன்றவன் தானே இரண்டு அவன் இன் இருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்
சென்று அவன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே.

அத்வைதப் பொருளான அவன் சிவனும் சக்தியுமாய் ஓமெனும் முப்பதத்தில் நின்று பிரம்மாவின் நான்கு முகங்களான சப்த பிரமம், நாத பிரமம், சோதி பிரமம், அமுத பிரமம் ஆகியவற்றை உணர்ந்து ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி முதலியனவென்று, குண்டலினி சக்தியில் மூலாதாரம் சிவஸ்தித்தானம், மணிப்புரம் அனகத்த விசுத்த, அஞ்ஞை முதலிய படிகளில் விரிந்து ஏழாம் இடமாகிய சகஸ்றார ஏறி ஆத்மா அடைய வேண்டிய எட்டாம் ஸ்தானமாகிய சமாதி, நிர்வாண நிலை உணர்ந்து நின்றான். இந்நிலையில் மனம் புத்தி ஆங்காரமாகிய பொறிகள் அடங்கிவிடும்.

10 பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா தார்.

எண்பத்து ஈராயிரம் யோனிகள் வெவ்வேறு உருவங்களில் பிறப்பதும் இறப்பதுமாய் வாழும் சீவராசிகளுக்குள் மானிடப் பிறப்பு எடுத்து வாழும் எமக்கே கருவில் மிதித்த இறைவனின் திருவடியில் நின்று பிறவிப் பெருங் கடல் நீந்தி பிறப்பை அறுப்பர். இறைவன் அடி சேராதவர் பிறப்பு இறப்பு வலயத்தில் சிக்குப்பட்டு நின்று அழுந்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140 உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றுங்
கல்லார் அறிவிலாதார்.

மெய்ப்பொருளான ஆத்மாவோடு ஒட்டி வாழாமல் அழியும் உலகப் பொருள்களோடும் சிற்றின்பங்களிலும் ஒட்டி வாழ்பவர் பல கற்று இருந்தாலும் கல்லாத அஞ்ஞானிகளாய் இருப்பர். கீழ்க்காணும் திருமந்திரங்கள் விளக்கமாகக் கூறுகின்றது.

760 உயருறுவார் உலகத்தொடுங் கூடிய
பயனுறுவார் பலர் தாமறியாமற்
செயலுறுவார் சிலர் சிந்தையிலாமற்
கயலுறு கண்ணியைக் காணகிலாரே.

நெற்றிக் கண்ணில் வெளிப்படும் பராசக்தியின் சோதியைக் காண்கிலார்.

1626 பிறப்பை அறியார் பல பிச்சை செய்மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பிலராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றாரே.

ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்ம சொரூபத்தில் மனத்தை பதித்து தியானம் செய்தலே தவம்.

திருக்குறள் ;

266 தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட் பட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாவர சங்கமத்துள் எத்தனையோ பிறப்புக்கள் எடுத்து இழைத்து இப்போ கிடைத்தற்கு அரிய மானிடப் பிறப்பு எடுத்து வாழ்கின்றோம். இப்பிறப்பில் நாம் செய்ய வேண்டிய கருமம் தவம் செய்து எம் உயிரை பிறப்பு, இறப்பு வலயத்திலிருந்து மீட்பது. திருமந்திரம் அழகாக விளக்கு கின்றது.

1677 உடலிற் துவக்கிய வேடம் உயிருக்காக
உடல் கழன்றால் வேடம் உடனே கழரும்
உடல் உயிர் உண்மை ஓர்ந்து கொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே.

கடலில் அகப்பட்ட கட்டை அலைகளில் சிக்குப்பட்டு தாழுவதும் மிதப்பதுமாய் அமைதியற்று அல்லல்படும். அது போல் உயிரை அறிந்து ஒன்றி உணராதவர்களின் உலக வாழ்வு துன்பகரமாய் அமையும்.

2106 இக்காயம் நீக்கி இனி ஒரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம் வழி தேடுமின்
எக்காலத்திவ்வுடல் வந்தெமக்காவதென்று
அக்காலம் முன்னம் அருள் பெறலாமே.

இப்பிறவி தப்பினால் பிறகு எப்ப இப்பிறவி வாய்க்குமோ நாம் அறியோம். இப்பிறவியை மிருகங்கள் போல் வாழ்ந்து வீணாக்காமல் மெய்ப்பொருளை உணரும் சன்மார்க்கத்தை கடைப்பிடித்து அருள் பெறுவோம்.

2090 பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரான் அடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறு இழந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுதற்கரிய மானிடப் பிறப்பை பெற்றும் பிறப்பின் நோக்கத்தை மறந்து அடைய வேண்டிய பெரும் பேற்றை இழந்தார்கள்.

178 ஆண்டு பலவும் கழிந்தன அப்பனை
பூண்டு கொண்டாரும் புகுந்து அறிவாரில்லை
நீண்டன காலம் நீண்டு கொடுக்கினும்
தூண்டு விளக்கின் சுடர் அறியாரே.

தாயின் கருவில் உறைந்து எம்மை படைத்த அப்பன் ஆத்மா எமக்குள் குடியிருந்து பல வருடங்கள் கழிந்து விட்டன. அப்படி இருந்தும் நாம் அவனுக்குள் புகுந்து அவனை உணரவில்லை. நெடுங்காலம் எம்மோடு இருந்த போதிலும் இன்னும் எமது வாழ்நாட்களைக் கூட்டித் தந்தாலும் ஒளிவளர் விளக்கான அவனின் சுடர்ச் சோதியை அறியும் நோக்கம் இல்லை.

12. கண்ணுதலான் ஒரு காதலன் நிற்கவும்
எண்ணிலி மாந்தர் இறந்தாரெனப் பலர்
மண்ணுறுவார்களும் ஊனுறுவார்களும்
அண்ணல் இவனென்று அறியகில்லாரே.

நெற்றிக் கண்ணில் வெளிப்படும் சோதி பரஞ்சோதி யாகிய இறைவன். அவன் உயிரைக் காதலித்து நின்றும் கணக்கற்ற மனிதர் அவனை அறியாமல் இறக்கின்றார்கள். உலகத்தையும் உடலையும் நம்பி வாழ்பவர்கள் நெற்றிக் கண்ணில் வெளிப்பட்ட சோதி இறைவனென்று அறியார்கள்.

1530 ஆயத்துள் நின்ற அறு சமயங்களுங்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலார்
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்திலுற்றுப் பதைக்கின்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக் கட்டுப்பாட்டுக்குள் நின்ற ஆறு சமயத்தவர்களும் உடம்புக்குள் நின்ற ஆத்மாவாய் நிற்கும் கடவுளைக் காண்பதில்லை. இவ்வுலக மாயையில் சிக்குப்பட்டு மனைவி மக்களுடன் ஆசாபாசத்துள் அகப்பட்டு நிம்மதியற்று பதைபதைப்பான வாழ்க்கை வாழ்வர்.

2071 காயக்குழப்பனை காய நன்னாடனை
காயத்தினுள்ளே கமழ்கின்ற நந்தியை
தேயத்துள்ளே எங்கும் தேடித் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறியார்களே.

உடம்பையும் அதன் அவயவங்களையும் இயக்குபவனை உடம்புக்குள் நடம் ஆடுபவனை உடம்புள் இயங்கும் நந்தியென்னும் நாமம் பூண்ட ஆத்மாவை உட்புகுந்து அறிவாரில்லை. தேசத்திலே எல்லா இடங்களிலும் தேடுவர் உடம்புள் நிற்கும் அறிவை அறியார்கள்.

2982 மாயனை நாடி மன நெடுந்தேர் ஏறி
போயின நாடு அறியாதே புலம்புவர்
தேயமுந் நாடும் திரிந்து எங்கள் செல்வனை
காயமின் நாட்டிடைக் கண்டு கொண்டேனே.

மாயமான இறைவனைத் தேடி மனத்தேர் ஓடும் வழியே சென்று பல நாடுகள் போய் அலைந்து காணாமல் புலம்புவர். இப்படியெல்லாம் அலைந்து திரிந்த பின் எங்கள் வள்ளற் பிரானை எமது உடம்பாகிய நாட்டுக்குள் கண்டுகொண்டேன்.

2012 ஏனோர் பெருமையனாயினுந் எம் இறை
ஊனே சிறுமையில் உட்கலந்தங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தோற்றங்களும் பெரும் பொருட்களாய்க் காட்சி அளித்தாலும் எம் இறைவன் உடம்புக்குள் அணுவில் அணுப்போல் உட்கலந்து இருக்கின்றான். யோகிகள் அறியும் அளவல்லன் மாதேவன். தன் ஆத்மாவே தவம் புரிந்த அளவுக்கு அறிவன்.

725 உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தென்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுக்குள்ளே உத்தமன் கோயில் கொண்டான்
உடம்பினுள் யான் இருந்து ஓம்புகின்றேனே.

மெய்ப்பொருளை உணருவதற்கு உடம்பு தடையென முன் நினைத்தேன். உடம்பினுக்குள்ளே மெய்ப்பொருளான பிரணவப் பொருளைக் கண்டேன். உடம்புள்ளே, இறைவன் தனது இல்லமென்று குடி ஏறினான். உடம்புள்ளே நான் நின்று ஐந்தெழுத்தை முப்பதமான அகார, உகார, மகாரத்தில் நின்று ஓம் ஓம் என்று ஓம்புகின்றேன்.

2650 இவன் இல்லமல்லது அவனுக்கு அங்கில்லை
அவனுக்கும் வேறுஇல்லம் உண்டா அறியில்
அவனுக்கு இவன் இல்லமென் றென்றறிந்தும்
அவனைப் புறம்பென்று அரற்றுகின்றாரே.

ஐந்தெழுத்துச் சக்கரமே ஆத்மாவின் இல்லம். இறைவனுக்கும் இதே இல்லம். வேறு இருப்பிடம் இல்லை. அப்படி இருந்தும் ஆத்மாவே இறைவன் என்று அறியாமல் இறைவனை வேறு பொருளென்று அஞ்ஞானிகள் அரற்றித் திரிகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017 சீவனென்ன சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்தபின்
சீவனார் சிவனாயிட்டிருப்பரே.

*இறைவன் அத்வைதப் பொருள். அவன் ஐந்தெழுத்தில் சீவனாக இயங்குகின்றான். ஐந்தெழுத்தை ஓதி கருவில் மிதித்த இறைவனின் திருவடியில் அடங்கினால் சமாதி அடைந்து சிவனாவான்.*

1817 உற்ற பிறப்பும் உறுமலமாவதும்
பற்றிய மாயாப் படலமெனப் பண்ணி
அத்தனை நீயென்று அழவைத்தான் பேர் நந்தி
கற்றன விட்டேல் கழல் பணிந்தேனே.

*எம்மைப் பீடித்த பிறப்பும், பொருந்திய ஆணவம், கர்மம், மாயையென்னும் மும்மலமும் நிரந்தரமானவையல்ல என்று மெய்ப்பொருளாகிய இறைவன் நீயென்று குரு பாதத்தை வைத்தான். தூலப் பொருள்களைப் பற்றி படித்த படிப்பெல்லாம் அகற்றிவிட்டு, கருவில் மிதித்த திருவடியை, பூங்கழலை ஓதிப் பணிந்தேன்.*

2355 தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.

*தனக்குள் இயங்கும் ஆத்மாவை அறியத் தனக்கொரு இடரும் நேரிடாது. அறியாமல் நரகப் பாதையில் செல்கின்றான். தன்னை வணங்க உடம்புள்ளேயே இருக்கின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164 இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சு இருளாவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

*உடம்பு இருக்க எரியும் ஒளியான ஆத்மாவை கவர்ந்து விடுவான் யமன். இறந்தது அறியாமல் மூடர் அழுது புரளுவர். விடிஞ்சு பகலாவதும், இருண்டு இரவாகுவதும் உணராத உலக மக்கள், நடப்பதை எல்லாம் படிஞ்சு பணிந்துகிடந்து, அனுபவித்து, பதைபதைத்து வாழ்கின்றார்.*

261 ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளும் குறுகிப்
பிழிந்தன போலத் தம் பேரிடராக்கை
அழிந்தன கண்டும் அறம் அறியாரே.

*வாழ் நாட்கள் முடிவுற்றது. வினைப்பயன் படி எடுத்த உடம்பும் அழிந்தது. மனக் கற்பனைகளும் நிறை வேறாமல் கழிந்தது. சாறு பிழிந்தெடுத்த பழம் போல் தன் உடம்பு அழிந்தது கண்டும் மெய்ப்பொருளை உணர்வதற்கு ஐந்தெழுத்தை ஓதிப் பிராணாயாமம் செய்யும் அறிவு அறியார்.*

262 அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந்
திறம் அறியார் சிவலோக நகர்க்குப்
புறம் அறியார் பலர் பொய்மொழி கேட்டு
மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே.

*கருவில் மிதித்த இறைவனின் கமலப்பாதத்தை அகார எழுத்தை நினைந்து அதிலிருந்து எழும் ஆத்ம சக்கரம் இயங்கும் ஐந்தெழுத்தை, பஞ்சாக்சர மந்திரத்தை ஓதி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணாயாமம் செய்யும் நெறி அறியார். விண்ணுலகில். தில்லைவெளி அறியார். அஞ்ஞானத்தை வளர்க்கும் பொய்யான உபதேசங்கேட்டு பலர் மாயைத் தோற்றங்களை கற்று அறிந்து வணங்கும் பொய்யரைத் துள்ளி விழுத்தி பகை மன்னி நிற்கும். திருமந்திரம் விளக்குகின்றது.

564 ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக் கொண்டு ஏறும் குதிரை மற்றொன்று உண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாது போய்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே.

உயிருக்கு நாயகன் பரஞ்சோதி மெய்ப்பொருளான ஆத்மாவோடு நிற்பவர்க்குப் பற்று கொடுக்கும். மற்றவர் களைத் துள்ளி விழுத்தும்.

1303 ஆமே ஐந்தெழுத்துமாம் வழியேயாக
போமே அது தானும் அவ்வழியே போனால்
நாமே நினைத்தன செய்யலுமாகும்
பார் மேல் ஒருவர் பகையில்லைத் தானே.

இயங்கிக் கொண்டிருக்கும் ஐந்தெழுத்து வழியாக ஆத்மா ஓடுகின்றது. அவ்வழியே தன் மனத்தையும் ஓட விட்டால் நாம் நினைத்தன கைகூடும். உலகில் எதிர்ப்பு இருக்காது.

1305 ஆரும் உரை செய்யலாம் அஞ்செழுத்தாலே
ஆரும் அறியாத ஆனந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலும் மதியதி
ஊனும் உயிரும் உணர்வது வாமே.

ஆத்மா ஓடும் உணர்வால் அஞ்செழுத்தை ஓதலாம். ஆனந்த மயமான பிரணவ சொரூபத்தை ஒருவரும் அறியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தையும், பரம வெளியையும், ஞான சூரியனையும், சந்திரனையும், உடலையும், உயிரையும் உணரலாம்.

1362 அண்டத்தினுள்ளே அளப்பரிதானவள்
பிண்டத்தினுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தினுள்ளே குணம் பல காணினும்
கண்டத்தினின்ற கலப்பு அறியார்களே.

பிரபஞ்சத்தில் அளக்க முடியாத ஒருவள். உடம்புள் பரமவெளி கண்டவள். வானுலகம் விண்ணுலகம் கண்டவள். மூலாதாரத்தில் குண்டலினி சத்தியின் பிரதிபலிப்புகள் கண்டவள். அகார எழுத்தில் சத்தியின் கலப்பு அறியார்.

1437 ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக
நின்று சமய நிராகாரம் நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே.

ஒன்றும் இரண்டும் = ஆத்மாவும் இறைவனும். பராபரை = பராசக்தி. நேயம் = நேசம். பாதம் = கருவில் மிதித்த தாள், திருவடி. அகார எழுத்து சென்று = ஐந்தெழுத்தை ஓதி உணர்வது அறிவின் அந்தம்.

1445 நாடும் நகரமும் நற்திருக்கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.

இது புகுத்தப்பட்ட பாடல். எமது சமயம் அடைந்திருக்கும் தற்போதைய நிலையில் இதனை பின்பற்றுவதே உசிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1482 கானுறு கோடி கடிகமழ் சந்தனம்.
வானுறு மாமலர் இட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்குழர் சேர வொண்ணாதே.

கானகத்தில் சேகரிக்கும் மிக வாசமான சந்தணம் வான் வெளியில் சேகரிக்கும் மலர்கள் இட்டு வணங்கினாலும் உடல் உணர்ச்சி நீக்கி உயிரை உணர்பவர்களுக்கு அல்லாது இறை சக்தி சேரமாட்டாள்.

8 தீயினும் வெய்யன் புன்லிலும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவாரில்லை
சேயினும் நல்லன் அணிய நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் நற்தாள் சடையோனே.

சேயினும் = மகனிலும். அணிய நல்லன்பர்க்கு = பிரணவப் பொருளை அணியும் ஞானிகளுக்கு. தாள் சடையோன் = விந்துவில் விளைந்த கமலப் பாதங்கள் பல பல தோற்றங்களாய் சடைத்து நிற்பவன்.

9 பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர் நந்தி
என்னாற் தொழப்படும் எம் இறை மற்றவன்
தன்னாற் தொழப்படுவா ரில்லை தானே.

விந்துவில் விளைந்த அவன்தாள் ஒலிச்சடை போல் பல தோற்றங்களாய் நிற்கின்றது. அவையின் பின் நிற்கும் இறை சக்திக்கு நந்தியென்னும் பேர் கொடுத்து அதுவே நான் வணங்கும் இறைவன். மற்ற உலக மக்கள் தங்களுக்குள் இயங்கும் ஆத்மாவைத் தொழுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33 பதி பல வாவது பண்டிவ்வுலகம்
விதி பல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதி பல தோத்திரம் சொல்ல வல்லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின்றாரே.

*பதி = விந்துநாதம் (பாடல் 1258) பலவாவது = பல தோற்றங்களாவது. விதி பல செய்து = விதிக்கப்பட்டபடி வாழ்ந்து. மெய்மை = மெய்ப்பொருளை. மதியிலர் = புத்தியில்லாதவர்.*

64 அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடுமாயினும்
அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

*அண்ணல் = அண்ணி நிற்கும் சிவன், சீவன். அறைந்த அறிவு = ஆத்மா ஒலிக்கும் ஓமெனும் அறிவு, இறைவனின் திருநாமம். எண்ணிலி கோடி = கணக்கற்ற ஆகம நூல்களும் ஒரு நன்மையும் அளிக்காது.*

96 பாட வல்லார் நெறி பாட அறிகிலேன்
ஆட வல்லார் நெறியாட அறிகிலேன்
நாட வல்லார் நெறி நாட அறிகிலேன்
தேட வல்லார் நெறி தேட கில்லேனே.

*நாட வல்லார் = மெய்ப்பொருளை நாட வல்லமையுள்ளவர்கள். தேட வல்லார் = மெய்ப்பொருளைத் தேட வல்லமையுள்ளவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95 ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறியாமை விளம்புகின்றேனே.

*அண்ணல் = அண்ணி நிற்கும் சிவன். அகலமும் நீளமும் = பிரபஞ்சத்தின் அகலம் நீளம். பெருஞ்சுடர் = பரஞ்சோதி.*

104 ஆதிப் பிரானும் மணி மணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை ஆயனுஞ்
சோதிக்கின் மூன்றுந் தொடர்ச்சி லொன்றெனார்
பேதித்து உலகம் பிணங்கு கின்றாரே.

*ஆதிப்பிரான் = சீவனாய் இயங்கும் சிவன். மணி மணி வண்ணன்= விஷ்ணு. கமலத்தலர்மிசை ஆயன் = கமலப் பாதத்தில் அமர்ந்து நிற்கும் பிரம்மா மூன்றுந் = சிவன், விஷ்ணு, பிரம்மா மூன்றும் ஒன்று.*

110 சோதித்த பேரொளி மூன்றைந்தென நின்ற
ஆதிக்குள் ஆவது அறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமாலய னென்று
பேதித் தவரைப் பிதற்றுகின்றாரே.

*மூன்றைந்தென = முப்பதமான ஓமாயும். ஐந்தெழுத்துச் சக்கரமாயும். ஆதிக்குள் = கருவில் மிதித்த இறைவன் அடிக்குள். ஆதர்கள் = மூடர்கள். நீதி = ஐந்தெழுத்து ஓதுதல்.*

129 தூங்கிக் கண்டார் சிவலோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமுந் தம்முள்ளே
தூங்கிக் கண்டார் நிலை சொல்வதெவ்வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கி = தவம் செய்து. சிவபோகம் = ஆத்மா கருவில் மிதித்த திருவடியுள் அடங்கி சமாதி நிலை அடைதல்.

148 அடப் பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்கமே யிறை நொந்ததே யென்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே.

அடப்பண்ணி = ஆயத்தப்படுத்தி. அடிசில் = உணவு. மடக்கொடி = மனைவி. மந்தணம் = இரகசியத் தொடர்பு. இடப்பக்கம் = இருதயம் இருக்கும் பக்கம். கிடந்து ஒழிந்தார் = கிடந்து உயிர் விட்டார்.

149 மன்றத்தே நம்பிக்கு மாடமெடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை பெற்று ஏறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்று அத்தா வென்னத் திரிந்திலன் தானே.

மன்றம் = உலகம். நம்பி = உலகை நம்பி வாழ்ந்தவன் மாடம் எடுத்தது = மாளிகை கட்டினான். சிவிகை = பல்லக்கு. அத்தா = இறைவன்.

177 கிழக்கெழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக் கண்டுந்தேறார் விழியிலா மாந்தர்
குழக் கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில்
விழக் கண்டுந் தேறார் வியனுலகோரே.

ஞாயிறு = சூரியன். விழி = ஞானக் கண், நெற்றிக் கண். தேறார் = உண்மையை விளங்கமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181 பாலன் இளையன் விருத்தனென நின்று
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலம் கடந்து அண்டம் ஊடறுத்தான் அடி
மேலும் கிடந்து விரும்புவன் நானே.

*விருத்தன் = கிழவன். அறிகிலார் = காரணகர்த்தாவை அறிகிலார். அண்டம் ஊடறுத்தான் அடி = வான் விண் ஊடறுத்த கருவில் மிதித்த திருவடி.*

184 கண்ணனும் காய்கதிரோனும் உலகினை
உள்நின்று அளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுறுவாரையும் வினையுறுவாரையும்
எண்ணுறு முப்பதில் ஈர்ந்தொழிந்தாரே.

*கண்ணனும் = நெற்றிக் கண்ணை உடையவனும், காய் கதிரோனும் = கதிர்ச்சோதிமயமானவனும். உள்நின்று = உடம்புள் நின்று. விண்ணுறுவார் = ஞானிகள். வினையுறுவார் = அஞ்ஞானிகள். எண்ணுறுமுப்பதில் = 30 வயதுள்.*

187 தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியாரவர் தாமே.

*தண்மலர் கொம்பில் இழைக்கின்றதெல்லாம் = குளிர்ச்சியான பூக்கள் மரக்கொப்பில் மலர்வதெல்லாம். இறக்கின்ற = வாடி அழிகின்ற. எம்பெருமான் அடி= கருவில் மிதித்த கமலப் பாதம். அழைக்கின்ற போது = யமன் உயிரைக் கவரும் போது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190 வெங்கடநாதனை வேதாந்தக் கூத்தனை
வெங்கடத்துள்ளே விளையாடுந் நந்தியை
வெங்கடமென்றே விரகறியாதவர்
தாங்க வல்லாருயிர் தாமறியாரே.

*வெங்கடநாதனை = வெறுங்குடமாகிய உடம்புள் இயங்கும் இறைவனை. விளையாடுந் நந்தி = நடமாடும் ஆத்மா. உடல் ஒரு வெறுங்குடமென்று உண்மை அறியாதவர் தம்மைத் தாங்கி நிற்கும் உயிரை அறியார்.*

191 சென்று உணர்வான் திசை பத்துந் திவாகரன்
நன்றுணர்வால் அளக்கின்றது அறிகிலர்
நின்றுணரார் இந்நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர்வாரிற் புணர்க்கின்ற மாயமே.

*திவாகரன் = சித்தாகாசப் பரவெளியில் ஆத்மசோதி ஞான சூரியனாய் பத்துத் திசையும் போய்வருவான். அவன் மண் வான் விண்ணாகிய மூன்று உலகங்களையும் அளப்பதை மனிதர் அறியார். அழிந்து போகும் நிலையற்ற பொருட்களில் மனத்தைச் செலுத்தி மாள்கின்றனர்.*

262 அறம் அறியார் அண்ணல் பாதம் நினையுந்
திறம் அறியார் சிவலோக நகர்க்குப்
புறம் அறியார் பலர் பொய் மொழி கேட்டு
மறம் அறிவார் பகை மன்னி நின்றாரே.

*அண்ணல் பாதம் = கருவில் மிதித்த கமலப்பாதம், அகாரம். நினையும் = ஓதும். பொய்மொழி = மெய்ப்பொருளைப் பற்றி அல்லாத உபதேசம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

270 அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

*அன்பும் அறிவும் அடக்கமுமாய் நிற்பது சிவனாகும் சீவன்.சிவமயம் உணர்வில் அன்பு மயமாய்த் தோன்றும்.*

276 முன்படைத்தின்பம் படைத்த முதலிடை
அன்படைத்து எம்பெருமானை அறிகிலார்
வன்படைத்து இந்த அகலிட வாழ்வினில்
அன்படைத்தான் தன் அகலிடந்தானே.

*முதலிடை = ஆதித் தலைவன். வன்படைத்து = மெய்ப் பொருள் அடைத்து.*

286 நம்பனை நானாவிதப் பொருளாகுமென்று
உம்பரில் வானவர் ஓதுந் தலைவனை
இன்பனை இன்பத்திடை நின்று இரதிக்கும்
அன்பனை யாரும் அறியகிலாரே.

*நம்பனை = மெய்ப்பொருளான இறைவனை. உம்பரில் = சித்தாகாசத்தில். வானவர் = யோகிகள். இரதிக்கும் = ஆனந்தம் அளிக்கும்.*

287 முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாமறியோம் என்பர்
துன்பப் பிறப்பும் இறப்பும் இலா நந்தி
அன்பில் அவனை அறியகிலாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா பிறந்து இறப்பதில்லை. உடம்புதான் பிறந்து இறந்து துன்பம் அனுபவிக்கும். அன்பில் ஆத்மாவை உணரரார்.

310 கல்லாதவருங் கருத்தறி காட்சியை
வல்லாரெனில் அருட்கண்ணால் மதித்துளோர்
கல்லாதார் உண்மை பற்றா நிற்பர் கற்றோரும்
கல்லாதார் பேரின்பங் காண்கிலாரே.

*கருத்தறி காட்சி = மெய்ப்பொருளை உணரும் பர்ணமிப்பு. அருட்கண் = நெற்றிக்கண். கல்லாதார் = ஐந்தெழுத்தை ஓதிக் கல்லாதவர். உண்மை = மெய்ப் பொருளாகிய இறைவன்.*

311 வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லாதவர்கள் அறிவு பல என்பார்
எல்லா இடத்தும் உளன் எங்கள் தம் இறை
கல்லாதவர்கள் கலப்பு அறியார்களே.

*வல்லார்கள் = ஆத்ம ஞானம் உள்ளவர்கள். வழி = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து வழி. அல்லாதவர்கள் = மூடர். கல்லாதவர்கள் = ஞான அறிவு பெறாதவர்கள்.*

313 கில்லேன் வினைத்துயராக்கும் மயலானேன்
கல்லேன் அரன்நெறி அறியாத் தகைமையில்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுட்
கல்லேன் கழிய நின்று ஆட வல்லேனே.

*கில்லேன் = ஐந்தெழுத்தை ஓதுகில்லேன். அரன்நெறி = இறைவனை உணரும் மார்க்கம். அறியாத தகைமை = அஞ்ஞானம். வழங்கும் பொருள் = எமக்குள் அளிக்கும் பிராண வாயு. கல்லேன் = ஓதி உணரேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

315 விண்ணினினுள்ளே விளைந்த இளங்கனி
கண்ணினினுள்ளே கலந்தங்கிருந்தது
மண்ணினினுள்ளே மதித்து மதித்து நின்று
எண்ணி எழுதி இளைத்து விட்டாரே.

*இளங்கனி = சீவனாய் இயங்கும் சிவன். கண் = நெற்றிக் கண். மண் = உலகுள்ளே மனிதர்.*

317 கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொற் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே.

*கல்லாத மூடர் = ஆத்ம ஞானம், இறை ஞானம் இல்லாத மூடர். கருத்து = பிறப்பின் நோக்கம்.*

318 கற்றுஞ்சிவ ஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பல திசை காணார் மதியிலோர்
கற்று அன்பின் நிற்போர் கணக்கறிந்தார்களே.

*கலதிகள் = வீணர்கள். வீடார் = விட்டு நீங்கார். துரிசு = மலம். பலதிசை = வான் விண்ணுலகங்கள். கணக்கு = மெய்ப்பொருள்.*

319 ஆதிப்பிரான் அமரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணர வல்லோம் என்பர் உள்நின்று
சோதி நடத்தும் தொடர்வு அறியாரே.

*முதல் ஆதிப் பொருளான விந்துவிலிருந்து விளைந்த சக்கரம் உயிராய்த் திரண்டு ஆதிப்பிரானாய் நிற்கின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சோதிமயம் ஐந்தெழுத்தில் ஓதி உணரலாம்.

320 நடுவு நின்றார்க் கன்றி ஞானமுமில்லை
நடுவு நின்றார்க்கு நரகமுமில்லை
நடுவு நின்றார் நல்ல தேவருமாவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே.

நடுவு நின்றார் = வடகலை பிங்கலையில் நிற்காமல் நடுநாடியாகிய சுழுனை நாடியில் நின்றார். அகார உகாரத் தண்டில், கோகழியில், கோதண்டத்தில், ஏகம்பத்தில் நின்றார்க் கன்றி.

328 உள் உண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணு மாந்தர் கருத்தறியாரே.

உள் உண்மை = இதயத்தை இயக்கும் மெய்ப் பொருளான ஆத்மா. வள்ளன்மை நாதன் = படைக்க, காக்க, அழிக்க சகல வல்லமையுள்ள மெய்ப்பொருளான இறைவன். தெள்ளுண்மை = தெளிவான உண்மை.

431 உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டு ஓர் அடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே.

உள்ளுறு சோதி = ஆத்ம சோதி. தானும் = ஆத்மாவும். உடனே = ஒருமித்து. அவனை உரு அறியார் = ஆத்மாவின் சொரூபத்தை அறியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

485 உருவம் வளர்ந்திடும் ஒண்திங்கள் பத்திற்
பருவம தாகவே பாரினில் வந்து
மருவி வளர்ந்திடும் மாயையினாலே
அருவம தாவது இங்கு ஆரறிவாரே.

*ஒண்திங்கள் பத்திற் = பத்து மாதத்தில் கருவில் சிசு வளர்ந்திடும். பருவமதாக = உருவம் பருவமடைந்த பின் பிறக்கும். மருவி = உடம்புள் முட்டாமல் அணைந்து நின்று. அருவம் = உருவமற்று.*

509 உள்ளத்தினுள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவர் இக்
கள்ள மனமுடைக் கல்வி இல்லோரே.

*பல தீர்த்தங்கள் = நீரோட்டங்கள். குடைந்து = உட்புகுந்து. வினை கெட = பாவம் அற. கல்வி = ஆத்ம ஞானம்.*

532 பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாய்ந்திடும்
சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே.

*பத்தினி = ஐந்தெழுத்தில் உயிராய் இயங்கும் சத்தி. மாய்ந்திடும் = மறைந்திடும்.*

534 ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நம் நந்தி ஆணையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஈசன் அடியார் = கருவில் மிதித்த கமலப் பாதமான இறைவனின் அடியைக் கண்டவர். வாசவன் = வசிக்கும் குடிகள். பீடம் = வீடு. மாமன்னர் = அரசாட்சி புரிபவர்.*

565 ஆரியன் அல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகு அறிவாரில்லை
கூரிய நாதன் குருஅருள் பெற்றால்
வாரிப் பிடிக்க வசப் படுந்தானே.

*ஆரியன் அல்லன் = அறிவுடையவனல்லன். குதிரை இரண்டு = வடகலை பிங்கலை நாடிகள். விரகு = உபாயம் வாரிப் பிடிக்க = சேர்த்து அடக்க சுழுனை நாடி வசப்படும்.*

571 ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவாரில்லை
காற்றைப் படிக்கும் கணக்கு அறிவாளர்க்கு
கூற்றை உதைக்குங் குறியது வாமே.

*ஏற்றி இறக்கி = பிராண வாயுவை அகாரத்திலிருந்து உகாரத்திற்கு ஏற்றி இறக்கி. கணக்கு = வகை. கூற்றை = யமனை (அகாரம் = கருவில் மிதித்த இறைவனின் கமலப்பாதம். உகாரம் = சென்னி)*

601 ஒரு பொழுதுன்னார் உடலோடு உயிரை
ஒரு பொழுதுன்னார் உயிருட் சிவனை
ஒரு பொழுதுன்னார் சிவனுறை சிந்தையை
ஒரு பொழுதுன்னார் சந்திரப் பூவையே.

*ஒரு பொழுதுன்னார் = ஒரு நேரமாவது உன்னிப் பார்க்கார். சந்திரப் பூ = சித்தாகாசப் பரவெளியில் பரஞ் சோதி சந்திரப் பூ போல் வெளிப்படுவதை உன்னிப் பார்க்கார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

603 எண்ணாயிரம் ஆண்டு யோகம் இருப்பினும்
கண்ணாரமுதனைக் கண்டறிவாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கிடிற்
கண்ணாடி போலே கலந்திடுவானே.

யோகம் = ஆத்ம சொரூபத்தில் மனத்தைப் பதித்து அகார, உகார, மகாரமாகிய முப்பதத்தில் ஓமெனும் திருநாமத்தை ஓதித் தியானம் செய்தலே யோகம். கண்ணாரமுதன் = நெற்றிக் கண்ணில் ஒளியாய் வெளிப்படும் அமுதனை. கண்ணாடி போலே = கண்ணாடியில் பிரதிவிம்பம் போல. கலந்திடும் = மனம் சோதியோடு கலந்து நிற்கும்.

604 நாட்டம் இரண்டும் நடு மூக்கில் வைத்திடில்
வாட்டமுமில்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமுமில்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமுமில்லை சிவனவனாமே.

நாட்டம் இரண்டும் = வடகலை பிங்கலை நாடிகளில் ஓடும் இரண்டு வாயுக்களையும், நடு மூக்கில் வைத்திடில் = சுழுனை நாடியில் ஓடச் செய்தால். வாட்டம் = மனக்கவலை. ஓட்டம் = பிராணனின் ஓட்டம். உணர்வு = உடல் உணர்வு. தானில்லை = பசுத் தன்மையில்லை.

606 மணிக்கடல் யானை வளர்குழன் மேகம்
மணிவண்டு தும்பிவளை பேரிகையாழ்
தணிந்தெழும் நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே.

வளர்குழல் = நாசின்னக்குழல். வளை = சங்கு. கையாழ் = வீணை. பணிந்தவர் = ஐந்தெழுத்தை ஓதிப் பக்தி செலுத்துபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

607 கடலொடு வேகக் களிறொடும் ஓசை
அடமொடு அவ்வினை அண்டா அண்டத்துச்
சுடர்மன்னு வேணுசுரி சங்கினோசை
திடமறி யோகிக் கல்லாற் றெரியாதே.

*வேகக் களிறு = மதமான யானை. அண்டத்துச்சுடர் = சித்தாகாச ஒளி. சுரிசங்கு = வலம்புரிச் சங்கு. திடமறி யோகி = திடமாக உணர்ந்த யோகி.*

678 தன்வழியாகத் தழைத்திடும் ஞானமும்
தன்வழியாகத் தழைத்திடும் வையகம்
தன்வழியாகத் தழைத்த பொருளெல்லாம்
தன்வழி தன் அருள் ஆகி நின்றானே.

*தன்வழி = தனது ஐந்தெழுத்துச் சக்கரம் இயங்கும் வழி தன்அருள் = தன் ஆத்மா அளிக்கும் அருள்.*

683 ஆன விளக்கொளி ஆவது அறிகிலர்
மூல விளக்கொளி முன்னே உடையவர்
கான விளக்கொளி கண்டு கொள்வார்கட்கு
மேலை விளக்கொளி வீடு எளிதா நின்றே.

*ஆன விளக்கொளி = நிரந்தரமான பரஞ்சோதி. மூல விளக்கொளி = ஆத்ம சோதி. மேலை விளக்கொளி = பரஞ்சோதி.*

751 ஓவியமான உணர்வை அறிமின்கள்
பாவிகள் இத்தின் பயன் அறிவாரில்லை
தீவினையாமுடன் மண்டலம் மூன்றுக்கும்
பூவிலிருந்திடும் புண்ணியத் தண்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஓவியமான உணர்வு = ஆத்மா இயங்கும் உணர்வு. மண்டலம் மூன்று = மண், வான், விண். கமலத்திலிருக்கும் ஆத்ம தண்டு.*

752 தண்டுடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டலம் மூன்றும் மகிழ்ந்துடல் ஒத்திடும்
கண்டவர் கண்டனர் காணார் – வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின்றாரே.

*தண்டுடன் ஓடி = ஆத்ம தண்டுடன் ஓமெனும் முப் பதத்தை ஓதி. தலைப்பெய்த = மெய்ப்பொருளை உணர்ந்த = மண்டலம் மூன்று = மண், வான், விண். பிண்டம் = உடல் உணர்ச்சி.*

760 உயருறுவார் உலகத்தொடுங் கூடிய
பயனுறுவார் பலர் தாமறியாமற்
செயலுறுவார் சிலர் சிந்தையிலாமற்
கயலுறு கண்ணியைக் காணகிலாரே.

*உயருறுவார் = உலகப் பொருட் செல்வம் தேடி உயர்வார். செயலுறுவார் = விடாமுயற்சியாய் தொழில் செய்வர். கயலுறு கண்ணி = நெற்றிக் கண்ணில் பராசக்தியின் சோதியைக் காண்கிலார்.*

761 காணகிலாதார் கழிந்தோடிப் போவர்கள்
காணகிலாதார் நயம் பேசித் திரிவர்கள்
காணகிலாதார் கழிந்த பொருளெல்லாம்
காணகிலாமற் கழிகின்ற வாறே.

*காணகிலாதார் = நெற்றிக் கண்ணில் சோதியைக் காணாதவர். கழிந்தோடிப் போவர் = மானிடப் பிறப்பின்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் அடையாமல் இறந்து அழிவர். நயம் பேசித் திரிவர் = உலகில் பொருள் சேகரிக்க பேசித் திரிவர். கழிந்த பொருள் = ஓமெனும் பூ.

764 நாட வல்லார்க்கு நமனில்லை கேடில்லை
நாட வல்லார்கள் நரபதியாய் நிற்பர்
தேட வல்லார்க்குத் தெரிந்த பொருளிது
கூட வல்லார்க்கு கூறலுமாமே.

நாடவல்லார் = மெய்ப்பொருளைத் தேட வல்லமை உடையவர்கட்கு. நரபதி = மனிதருக்குள் தலைவனாய் நிற்பர். கூட வல்லார்க்கு கூறலுமாமே = மெய்ப்பொருளோடு கூட ஆர்வம் உள்ளவர்களுக்கு ஆத்ம ஞானம் கொடுக்கலாம்.

765 கூறும் பொருளிது அகார உகாரங்கள்
ஏறும் பொருளிது சிந்தையுள் நின்றிட
கூறும் அகாரம் குழல் வழி ஓடிட
மாறும் அமர்ந்திடும் அண்ணலுமாமே.

கூறும் பொருள் = ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா ஓமென்று கூறும். ஏறும் பொருள் = வானுலகம், விண்ணுலகம் ஏறும். குழல்வழி = சத்தி ஓடும் வழி. அண்ணலுமாமே = சீவன் சிவனாகும்.

766 அண்ணல் இருப்பிடம் ஆரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்கட்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவனாமே.

ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா இயங்காமல் உள்ளே அகார எழுத்தில் அடங்கி சமாதி நிலை அடைந்து சீவன் சிவனாவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

767 அவன் இவனாகும் பரிசறிவாரில்லை
அவன் இவனாகும் பரிசதுகேள் நீ
அவன் இவன் ஓசை ஒளியினுள் ஒன்றிடும்
அவன் இவன் வட்டமதாகி நின்றானே.

*அவன் இவனாகும் பரிசு = சீவன்சிவனாகும் கொடை. இவன் ஓசை = ஆத்மாவில் எழும் நாதம். ஒளியினுள் ஒன்றிடும் = சித்தாகாசத்தில் பரஞ்சோதியினுள் கலந்திடும். ஆத்ம சக்கரத்துள் சிவன் அடங்கி நிற்பான்.*

768 வட்டங்கள் ஏழும் மலர்ந்திடும் உம்முளே
சிட்டன் இருப்பிடம் சேர அறிகிலீர்
ஒட்டியிருந்து உள் உபாயம் உணர்ந்திட
கட்டி இருப்பிடம் காணலுமாமே.

*வட்டங்கள் ஏழு = குண்டலினி சத்தி மூலாதாரத்திலிருந்து சகஸ்றாற வரை ஏழு வட்டங்கள் கடந்து மலரும். சிட்டன் = அறிவுப் பொருளான இறைவன். ஒட்டி இருந்து = ஆத்ம சொரூபத்தோடு ஒட்டி இருந்து. கட்டி இருப்பிடம் = கருவில் மிதித்த இறைவன் திருவடி.*

786 ஆரும் அறியார் அளக்கின்ற வன்னியை
ஆரும் அறியார் அளக்கின்ற வாயுவை
ஆரும் அறியார் அழிகின்ற அப்பொருள்
ஆரும் அறியா அறிவு அறிந்தேனே.

*வன்னி = குண்டலினி சத்தி. அளக்கின்ற வாயு = குண்டலினியை அளக்கும் பிராண வாயு. அப்பொருள் = மெய்ப்பொருளான ஓம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

804 ஊனூறல் பாயும் உயர்வரை உச்சி மேல்
வானூறல் பாயும் வகை அறிவாரில்லை
வானூறல் பாயும் வகை அறிவாளர்க்கு
தேனூறல் உண்டு தெளிதலு மாமே.

*ஊனூறல் = உடலில் ஊறும் ஊனீர். வானூறல் = வானத்தில் ஊறும் தேனூறல் அமிர்தம்.*

809 ஊனீர் வழியாக உள் நாவை ஏறிட்டு
தேனீர் பருகி சிவாய நம வென்று
கானீர் வரும் வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும் வழி ஆய்ந்து அறிவீரே.

*உள்நாவை = அண்ணாக்கு. தேனீர் = தேனூறல் அமிர்தம். கங்கை = தேனாறு. வானீர் வரும் வழி = அந்தர வானத்தமுதம் ஊறும் வழியைத் தேடிப் பாருங்கள்.*

869 உந்திக் கமலத் துதித்தெழும் சோதியை
அந்திக்கும் மந்திரம் யாரும் அறிகிலர்
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன் பிறந்தானே.

*உந்திக் கமலம் = கருவில் மிதித்த கமலம். அந்திக்கும் = போற்றும். தந்தை = சிவன். மகன் = ஆத்மா. பிறந்தானே = பரஞ்சோதிக்கு முன் ஆத்மசோதி சித்தாகாசத்தில் வெளிப்படும்.*

870 ஊதியமேதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லிரேல்
வேதியன் அங்கே வெளிப்படுந்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியம் = பயன். உரைப்பினும் ஓதியும் = ஐந் தெழுத்தை ஓதினாலும். ஊமர்கள் = செகிட்டு ஊமைகள். ஆதி = கருவில் மிதித்த கமலப் பாதம், அகாரம். அந்தம் = மகாரம். வேதியன் = வேதப்பொருள் இறைவன்.

918 மட்டவிழ் தாமரை மாது நல்லாளுடன்
ஒட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல்லார் உயிர் காக்க வல்லாரே.

இறைவனின் கருவில் மிதித்த கமலப் பாதத்தோடு இறைவி, சத்தி ஒட்டி இருக்கும் வகை மனிதர் அறியார். விடாத எழுத்தான அகார எழுத்தோடு விட்ட நாலு எழுத்துக்களையும் கட்டினால் சமாதி நிலை.

956 நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிகள் அத்தின் பயன் அறிவா ரில்லை
ஓவியராலும் அறிய வொண்ணாதது
தேவியுந் தானும் திகழ்ந்திருந்தானே.

நாவியின் கீழ் = மூலாதாரத்தின் கீழ். நல்ல எழுத்து = கருவில் மிதித்த கமலப் பாதமான அகார எழுத்து. தேவியுந் தானும் = சக்தியும் சீவனும்.

1031 அந்த மிலானுக்கு அகலிடந் தானில்லை
அந்த மிலானை அளப்பவர் தானில்லை
அந்த மிலானுக்கு அடுத்த சொற் தானில்லை
அந்த மிலானை அறிந்து கொள் பத்தே.

அந்த மிலானுக்கு = ஆதி அந்தமில்லா ஆத்மாவுக்கு. அடுத்த சொல் = ஐந்தெழுத்தைவிட வேறு சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1062 ஒத்தடங்குங் கமலத்திடை யாயிழை
அத்தகை செய்கின்ற ஆய பெரும் பதி
மத்தடைகின்ற மனோன்மணி மங்கலி
சித்தடைக்கும் வழி தேர்ந்து உணரார்களே.

*ஒத்தடங்கும் = மனமும் பிராணனும் ஒத்துக் கமலப் பாதத்தில் அகார எழுத்தில் அடங்கும். மத்து = பேரின்பம் சித்து = அறிவு.*

1132 தானே எழுந்த இத் தத்துவ நாயகி
வானேரெழுந்து மதியை விளக்கினள்
தேனேர் எழுகின்ற தீபத்தொளியுடன்
மானே நடமுடை மன்று அறியீரே.

*கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து தானே எழுந்த ஆத்மாவாய் இயங்கும் சத்தி. வான் = சித்தாகாசம். மதி = ஞானசந்திரன். தேன் = அமிர்தம். ஒளி = ஆத்மசோதி. மன்று = பரவெளி.*

1139 ஆறியிருந்த அமுத பயோதரி
மாறியிருந்த வழி அறிவாரில்லை
தேறியிருந்து நற்தீபத் தொளியுடன்
ஊறியிருந்தனள் உள் உடையார்க்கே.

*அமுத பயோதரி = அமுதம் அளிக்கும் சத்தி. வழி = ஓமெனும் முப்பத வழி. ஊறி = அமுதத்தில் ஊறி.*

1199 சத்தியென்பாள் ஒரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்பது அறிகிலர்
பத்தியைப் பாழில் உகுத்த அப்பாவிகள்
கத்திய நாய் போற் கதறுகின்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகார எழுத்திலிருந்து, உகாரத்துக்கு எழுந்த சக்தியை உணர்வினால் ஓதி முத்தி அடையலாம். பக்தியை வேறு பொருட்களில் செலுத்தினால் நாய் போல் குலைத்து திரிவீர்.

1231 அது இது என்று அவமே கழியாதே
மதுவிரி பூங்குழன் மங்கை நல்லாளை
பதிமது மேவிப் பணிய வல்லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிடலாமே.

மதுவிரி பூங்குழன் மங்கை = தேன் பொருந்திய கமலத்தில் இருக்கும் சிவனின் சத்தியைப் பணிந்து ஓத வல்லார்க்கு விதியையும் வெல்லலாம்.

1232 வென்றிடலாகும் விதிவழி தன்னையும்
வென்றிடலாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிடலாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கை தன் மெய்யுணர்வோர்க்கே.

விழைபுலன் = ஐம்புலன்கள் தூண்டும் ஆசைகள். மங்கை = சத்தி. மெய்யுணர்வோர் = சத்தி இயங்கும் ஐந்தெழுத்தை உணர்ந்தவர்.

1506 வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில் வீழ்கல்லாம் மனம் பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் அண்ணலை
நேசத்திருந்த நினைவு அறியாரே.

நூல்கள் வாசித்தும் பூசனை செய்தும் பூக்கள் கொய்து சாத்தி வணங்கினாலும் அழுக்குள்ள குளத்தில் கல்லு விழுந்ததை ஒக்கும். மனம் சித்தாகாசத்தில் பரஞ்சோதி நேசமாயிருப்பது அறியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1531 உள்ளத்துள்ளே தான் கரந்தெங்கும் நின்றவன்
வள்ளற் தலைவன் மலருறை மாதவன்
பொள்ளக் குரம்பை புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்தறியார்களே.

*கரந்து = வியாபித்து. வள்ளல் = கொடை வள்ளல். மலருறை மாதவன் = கருவில் மிதித்த கமலத்தில் இருந்து தவம் செய்பவன். பொள்ளக்குரம்பை = ஓட்டை உடம்பு. கள்ளன் = மறைந்து நிற்பவன்.*

1535 அண்ணலை நாடிய ஆறு சமயமும்
விண்ணவராக மிகவும் விரும்பியே ஏமம்
உள் நின்று அழிய முயன்றிலர் ஆதலால்
மண் நின்று ஒழியும் வகை அறியார்களே.

*அண்ணலை நாடிய = இறைவனைத் தேடும். எம்முள் நின்று = எமது நெஞ்சத்துள் நின்று. அழிய முயன்றிலர் = ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா அழிந்து சிவமாக அகாரத்தில் அடங்காததனால்.*

1538 கற்றுங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவன் எங்கும் தோய்வுற்று நிற்கின்றான்
குற்றம் தெரியாதார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேறி நாளும் பிறந்திருப்பாரே.

*கலதிகள் = வீணர்கள். கோதாட்டார் = போற்றார். பித்தேறி = மாயை உலகை நம்பி மனத் தெளிவு அற்று விசர் ஏறி.*

1540 சேயன் அணியன் பிணியிலன் பேர் நந்தி
தூயன் துளக்கற நோக்க வல்லார்கட்கு
மாயன் மயக்கிய மானிடராமவர்
காயம் விளைக்குங் கருத்தறியார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சேயன் = மகன். அணியன் = உடம்புள் கலந்து நிற்பவன். பிணியிலன் = பற்றாக்குறை இல்லாதவன். நோக்க = தியானிக்க.*

1556 ஓங்காரத்துள் ஒளி உள்ளே உதயமுற்று
ஆங்காரமற்ற அனுபவங் கைகூடார்
சாங்கார முன்னார் பிறவாமை சார்வுறார்
நீங்காச் சமயத்துள் நின்று ஒழிந்தார்களே.

*ஒளி = ஆத்மசோதி.*

1554 அறிவுடன் கூடி அழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம் பதி சிந்தும்
குறியது கண்டுங் கொடு வினையாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே.

*தோணி = அகார உகாரத்தில் ஓடும் பிராணவாயு. பழம்பதி = ஆதிப்பிரான். குறி = பிராணன் ஓடுங் குறி.*

1558 ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள்
என்றது போல இருமுச்சமயமும்
நன்றிது தீது இது என்று உரையாளர்கள்
குன்று குரைத்தெழும் நாயை ஒத்தார்களே.

*ஒன்றது பேரூர் = மோட்சம் ஒன்று. வழி ஆறு அதற்குள் = மோட்சம் அடைய ஆறு வழியுண்டு. இது நல்லது அது கூடாதென்று ஆறு சமயத்தவர்களும் மலையைப் பார்த்து நாயைப் போல் குலைக்கின்றார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1589 தரிக்கின்ற பல்லுயிர்க்கெல்லாம் தலைவன்
இருக்கின்ற தன்மையை ஏதும் உணரார்
பிரிக்கின்ற விந்து பிணக்கறுத் தெல்லாம்
கருக்கொண்ட ஈசனைக் கண்டு கொண்டேனே.

*தரிக்கின்ற = உலகில் தரித்து வாழ்கின்ற. தலைவன் = விரையமான விந்துவின் பொறியே கருக்கொண்ட இறைவனின் பாதம்.*

1604 மந்திரமாவதும் மா மருந்தாவதும்
தந்திரமாவதும் தானங்களாவதும்
சுந்தரமாவதும் தூய்நெறியாவதும்
எந்தை பிரான் தன் இணை அடியாமே.

*தூய் நெறி = தூய்மையான சன்மார்க்கம். எந்தை பிரான் = என்னைப் படைத்த கருவில் மிதித்த இறைவனின் கமலப் பாதம், ஆத்ம சக்கரத்தின் இணை அடி.*

1625 எம் ஆருயிரும் இருநிலத் தோற்றமும்
செம்மாதவத்தின் செயலின் பெருமையும்
அம்மான் திருவருட் பெற்றவர்க்கல்லாது
இம்மாதவத்தின் இயல்பு அறியாரே.

*இருநிலம் = பாரும் விசும்பும். அம்மான் திருவருள் = சிவனின் கடாட்சம். மாதவம் = ஐந்தெழுத்தை ஓதிச் செய்யும் தவம்.*

1681 மனத்தில் எழுந்ததோர் மாயக் கண்ணாடி
நினைப்பில் அதன் நிழலையும் காணார்
வினைப்பயன் போக விளக்கியும் கொள்ளார்
புறக்கடை இச்சித்து போகின்ற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாயக் கண்ணாடி = மாயப் பிரதிவின்பங்கள் அளிக்கும் இறைவன். வினைப்பயன் = பாவவினை. புறக்கடை = வெளிப்பொருள்கள்.*

1797 நான் அறிந்தன்றே இருக்கின்ற ஈசனை
ஊன் அறிந்தார் அறியாது மயங்கினர்
ஊன் அறிந்து உள்ளே உயிர்க்கின்ற ஒண்சுடர்
தான் அறியான் பின்னை யார் அறிவாரே.

*நான் அறிந்தன்றே = நான் ஆத்ம ஞானம் பெற்ற அன்றே. ஊன் அறிந்தார் = ஐம்புலன்களைப் பற்றி நின்றவர். உள்ளே= உடம்புள்ளே. உயிர்க்கின்ற ஒண்சுடர் = ஆத்ம சுடர்.*

1828 புண்ணியஞ் செய்வார்க்கு பூவுண்டு நீருண்டு
அண்ணல் அது கண்டு அருள் புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை
நண்ண அறியாமல் நழுவுகின்றாரே.

*புண்ணியஞ் செய்வார் = ஐந்தெழுத்து ஓதுபவர். பூ= ஓமெனும் பூ. நீர் = ஆவி. எம் இறை ஈசனை= கருவில் மிதித்த இறைவனின் திருவடியை.*

1823 உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் ஆளா மணி விளக்கே.

*வாய் = ஆத்மா புறப்படும் வாய். அகாரத்திலிருந்து உகாரத்துக்கு செல்லும் கதவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bible : **Man shall not live by bread alone but by every word that proceedeth from the mouth of God.**

1834 வெள்ளக் கடலுள் விரிசடை நந்திக்கு
உள்ளக் கடல் புக்குவார் சுமை பூக்கொண்டு
கள்ளக்கடல் விட்டுக் கைதொழ மாட்டாதார்
அள்ளற் கடலுள் அழுந்து கின்றாரே.

*வெள்ளக்கடல் = சித்தாகாச வெளி அருட் கடல். கள்ளக் கடல் = மாயா உலகம் அள்ளற் கடல் = துன்ப சாகரம். பூக்கொண்டு = "ஓம்" என்னும் பூ எடுத்து.*

1842 ஆவிக் கமலத்தினப் புறத்தின் புற
மேவித் திரியும் விரிசடை நந்தியைக்
கூவிக் கருதிக் கொடு போய்ச் சிவத்திடை
தாவிக்கும் மந்திரம் தாம் அறியாரே.

*ஆவிக்கமலம் = பிராணன் எழும் கருவில் மிதித்த கமலம். விரிசடை நந்தி = எங்கும் விரிந்து, சடைத்து நிற்கும் ஆத்மா. கூவி = ஓதி. மந்திரம் = ஓம் என்னும் மந்திரம்.*

1860 அகரம் ஆயிரம் அந்தணர்க்கு ஈயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகல் ஊண் பலத்துக்கு
நிகரில்லை என்பது நிச்சயந்தானே.

*அகரம் = ஆகாரம். சிகரம் = கோபுரம். பகரு ஞானி = ஐந்தெழுத்து ஓதும் யோகி. பகல் ஊண் = பகல் உணவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1872 . பெண்ணல்ல ஆணல்ல பேடல்ல மூடத்துள்
உள் நின்ற சோதி ஒருவர்க் கறியொண்ணா
கண்ணின்றிக் காணும் செவியின்றிக் கேட்டிடும்
அண்ணற் பெருமையை ஆய்ந்தது மூப்பே.

*ஆத்மா பெண்ணல்ல ஆணல்ல, பேடல்ல. மூடம் = உடம்பு. சோதி = ஆத்ம சோதி. கண்ணின்றி = நெற்றிக் கண்ணால். செவியின்றி = உட்செவியால் பரநாதம் கேட்கும்.*

1936 அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னை உடகாக்கலுந் தேரார்
அழகின்ற காயத்தழிந்து அயர்வுற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்தொழியாரே.

*அழிகின்ற விந்து = கழிந்து போகும் பிராண வாயு. தன்னை = தன் ஆத்மாவை. உட்காக்கலுந் = ஐந்தெழுத்தை ஓதி கருவில் மிதித்த திருவடியில் அடங்க.*

2084 வித்துப் பொதிவார் விரையிட்டு நாற்றுவார்
அற்ற தம் வாழ் நாள் அறிகிலாப் பாவிகள்
உற்ற வினைத்துயர் ஒன்றும் அறிகிலர்
முற்றொளி தீயின் முனிகின்ற வாறே.

*பொதிவார் = முளைக்க வைப்பார். நாற்றுவார் = நடுவார். அற்ற தம் வாழ்நாள் = தான் உலகில் வாழும் நாள் முடிந்தது. முற்றொளி = விட்டில் பூச்சி தீயில் விழுந்து மடியும்.*

2085 போது சடக்கென போவது கண்டும்
வாது செய்து என்னோ மனிதர் பெறுவது
நீதியுள்ளே நின்று நின்மலன் தாள் பணிந்து
ஆதியை அன்பில் அறிய கில்லார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது = உயிர். நீதியுள்ளே = ஐந்தெழுத்தின் ஓட்டத்துள். ஆதியை = இறைவனை.

2089 இன்பத்துள்ளே பிறந்து இன்பத்துளே வளர்ந்து
இன்பத்துள்ளே நினைக்கின்றது இது மறந்து
துன்பத்துளே சிலர் சோறொடுங் கூறையென்று
துன்பத்துளே நின்று தூங்குகின்றாரே.

துன்பத்துளே = துன்ப சாகரத்துளே. சோறொடுங் கூறையென்று = உணவுக்கும் உடைக்கும். தூங்குகின்றார் = வருந்துகின்றார்.

2148 உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு உயிரிடை நட்பு அறியாதார்
மடம் புகு நாய் போல் மயங்குகின்றாரே.

உலக மக்கள் உடம்போடு உடம்பைக் கட்டிப் பிடித்து உடல் உணர்ச்சியில் வாழ்கின்றார்கள். உள்நிற்கும் உயிரை அறியாமல் மடத்தில் சாப்பிட்டு எறிந்த இலைகள் நக்கும் நாய்கள் போலாவர்.

2158 ஊமை எழுத்தொடு பேசும் எழுத்துறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமய முற்றது உள் ஒளி பெற்றது
நாமய மற்றது நாம் அறியோமே.

ஊமை எழுத்து = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து. உள் ஒளி = ஆத்ம ஜோதி. நாமயமற்றது = ஐந்தெழுத்து, நாமம். அகாரத்தில் அடங்கி அற்றது. சமாதி நிலை அடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2318 முன்னை அறிவினிற் செய்த முது தவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்
தன்னை அறிவது அறிவாம் அஃதன்றி
பின்னை அறிவது பேயறிவாகுமே.

*அறிவினிற் = ஆத்ம ஞானம் பெற்று. தன்னை அறிவது = தன் ஆத்மாவை அறிவது. அறிவாம் = மெய்ப்பொருளை அறியும் அறிவாகும். மற்ற எல்லா அறிவும் பேயறிவாகும்.*

2228 தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனுமாமே.

*நட்டான் = நண்பன். மறுமையும் இம்மையும் = மறு பிறப்பும் இப்பிறப்பும். துய்ப்பான் = அனுபவிப்பான். தன் ஆத்மாவே தனக்குத் தலைவன். வேறு தலைவன் இல்லை.*

2348 தானென்று அவனென்று இரண்டென்பர் தத்துவம்
தானென்று அவனென்று இரண்டற்ற தன்மையை
தானென்றிரண்டுன்னார் கேவலத்தானவர்
தானின்றித் தானாகத் தத்துவ சுத்தமே.

*தான் = ஆத்மா. அவன் = இறைவன். தத்துவம் = மெய்ப்பொருள். இரண்டற்ற = அப்படி இரண்டு பொருள் இல்லை. தானென்றிரண்டுன்னார் = தன் ஆத்மாவே இரண்டுமென்று உணரார். தானின்றித் தானாக = ஆத்மா மாறி பசுத்தன்மை போய்ச் சிவனாகும். சீவன் சிவனாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2366 என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டிருத்தலும் கைவிடாது
என்னை இட்டு என்னை உசாவுகின்றானே.

என்னை = என் ஆத்மாவை. ஏதும் அறிந்திலேன். என் ஆத்மாவாய் இயங்கும் மெய்ப்பொருளே, எல்லாத் தோற்றங் களையும், பஞ்ச பூதங்களையும் படைத்து நிற்பதால், வேறு அறிவதற்கு ஒன்றும் இல்லை. உசாவுதல் = விசாரணை செய்தல்.

2580 அறிவு அறியாமை இரண்டும் அகற்றிச்
செறிவறிவாய் எங்கும் நின்ற சிவனைப்
பிறிவறியாது பிரானென்று பேணுங்
குறி அறியாதவர் கொள்ள அறியாரே.

செறிவறிவு = எல்லாப் பொருளிலும் கலந்து நிற்கும் அறிவு. பிறிவறியாது = மனத்திலிருந்து பிறியாமல். குறி = ஐந்தெழுத்து இயங்கும் குறி.

2614 மாடத்துளானலன் மண்டபத்தானலன்
கூடத்துளானலன் கோயிலிலுளானலன்
வேடத்துளானலன் வேட்கை விட்டார் நெஞ்சின்
மூடத்துளே நின்று முத்தி தந்தானே.

வேட்கை = ஆசாபாசம். மூடத்துளே = உடம்புளே. முத்தி = ஆத்மாவின் வீடு.

2620 அவன் இவன் ஈசன் என்று அன்புற நாடிச்
சிவன் இவன் ஈசனென்று உண்மையை ஓரார்
பவனிவன் பல்வகையாம் இப்பிறவி
புவனிவன் போவது பொய்கண்ட போதே.

அவன் இவன் = இறைவனே ஆத்மா. சிவன் இவன் = சிவனே ஆத்மா. பவன்= பாவம் செய்தவன். புவன் = பூமியில் பிறந்திருப்பவன்.

2721 பழுத்தன ஐந்தும் பழ மறையுள்ளே
விழித்தங்கு உறங்கும் வினை அறிவாரில்லை
எழுத்தறிவோமென்று உரைப்பார்கள் ஏதர்
எழுத்தை அழுத்தும் எழுத்து அறியாரே.

ஐந்தும் = ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மா. பழமறை = கருவில் மிதித்த இறைவன் அடியுள். விழித்தங்கு உறங்கும் = சமாதி நிலையில் ஆத்மா விழிப்புடன் உறங்கும். ஏதர் = மூடர். எழுத்தை அழுத்தும் எழுத்து = ஐந்தெழுத்தை ஒதும் அகார எழுத்தை.

2687 விளங்கொளி மின்னொளியாகிக் கரந்து
உளங்கொளி ஈசனைச் சொல்லும் எப்போதும்
உளங்கொளி ஊனிடை நின்று உயிர்க்கின்ற
வளங்கொளி எங்கும் மருவி நின்றானே.

விளங்கொளி = பரஞ்சோதி. உளங்கொளி = ஆத்ம சோதி. ஈசனைச் சொல்லும் = ஓமெனும் ஈசனின் திரு நாமத்தைச் சொல்லும். ஊனிடை = உடம்புள். வளங்கொலி = எல்லா வளங்களையும் படைத்த சோதி.

2690 உளங்கொளி ஆவது என்னுள் நின்ற சீவன்
வளங்கொளி யாய்நின்ற மாமணிச் சோதி
விளங்கொளியாய் மின்னி விண்ணில் ஒடுங்கி
வளங்கொளி ஆயத்துள் ஆகி நின்றானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உளங்கொளி = ஆத்ம சோதி. விண்ணில் ஒடுங்கி = விண்ணுலகில் விரயமாய் ஒடுங்கி ஆத்மசுடர்களாய். வளங்கொளி = எல்லா வளங்களையும் படைத்த சோதி.*

2723 சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பதமாம் அந்தச் சுந்தரக் கூத்தனை
பொற்பதிக் கூத்தனைப் பொற்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே.

*சிற்பரஞ் = சித்தாகாச. சொற்பதம் = ஐந்தெழுத்து. பொற்பதி = ஒளிமயமான விந்து நாதப்பதி. பொற்தில்லை = விண்ணுலகில் பிரகாசமான தில்லைவெளி.*

2740 அடியார் அரன் அடி ஆனந்தங் கண்டோர்
அடியாரானவர் அத்தருள் உற்றோர்
அடி ஆர்பவரே அடியவராமால்
அடியார் பொன்னம்பலத் தாடல் கண்டோரே.

*அரன் அடி = கருவில் மிதித்த கமலப்பாதம். ஆர்பவர் = ஆய்ந்து சோதித்துப் பார்ப்பவர். பொன்னம்பலம் = ஒளி மயமான தில்லை, அம்பலம் சித்தாகாச வெளி.*

2758 ஆறுமுகத்தில் அதிபதி நானென்றுங்
கூறுசமயக் குருபரன் நானென்றுந்
தேறினர் தெற்குத் திருவம்பலத்துளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே.

*ஆறுமுகம் = குண்டலி சத்தியின் ஆறுமுகங்கள்:- மூலாதாரம், சிவஸ்தித்தான, மணிப்புர, அநகத்த, விசுத்த, அஞ்ஞை ஆகிய ஆறுமுகங்கள். தேறினர் = சித்தி அடைந் தனர். வேறின்றி அண்ணல் = ஆத்மாவும் இறைவனும் வேறில்லாமல் ஒரு பொருளாய். விளங்கி = ஒளிமயமாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2798 மருவும் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பு மன்னுடனிசையும்
கருவில் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாயநம வென ஓதே.

*மருவும் துடியுடன் = பிராண வாயு உடம்பில் முட்டாமல் துடிதுடிப்பாய் மன்னி நிற்கும் காற்று வீச்சு. அத்துடன் நூல் போல் நீர் ஆவியும் சேர்ந்து ஓடும். மனதோடு அணைந்து இசையும்.*

2836 குலைக்கின்ற நீரிற் குவலய நீரும்
அலைக்கின்ற காற்றும் அனலொடு ஆகாசமும்
நிலத்திடை வானிடை நீண்டு அகன்றானை
வரைத்து வலஞ் செயுமாறறியேனே.

*குலைக்கின்ற = நிலையாய் நில்லாத. குவலய நீர் = கடல் பஞ்ச பூதங்களாய் நீண்டு அகன்று நிற்பவனை ஒன்று சேர்த்து வணங்கும் முறை அறியேன்.*

2840 உருவன்றியே நின்று உருவம் புணர்க்கும்
கருவன்றியே நின்று தான் கருவாகும்
மருவன்றியே நின்ற மாயப் பிரானை
குருவன்றி யாவர்க்கும் கூடவொண்ணாதே.

*உருவன்றி, கருவன்றி மருவன்றி நின்ற சூக்குமப் பொருளை குருவன்றி ஒருவர்க்கும் கூட வொண்ணாது.*

2841 உருவம் நினைப்பவர்க்கு உள்ளூறும் சோதி
உருவம் நினைப்பவர் ஊழியும் காண்பர்
உருவம் நினைப்பவர் உம்பருமாவர்
உருவம் நினைப்பவர் உலகத்தில் யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம் = ஆத்ம சொரூபம். ஊழி = வினைப்பயன். உம்பர் = தேவர்.

2883 பார்ப்பான் அகத்திலே பாற் பசு ஐந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே.

பாற்பசு ஐந்து = அமுதம் அளிக்கும் ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்ம வஸ்து. மேய்ப்பார் = ஓதுவார். பார்ப்பான் = உடம்புள் இயங்கும் ஆத்மாவைப் பார்ப்பவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் இரண்டு

ஓம்

# முழுதும் உண்மை

விந்துவென்னும் ஆதிப்பொருளே மெய்ப்பொருளாய் அதிலிருந்து எழுந்த நாதத்தோடு சேர்ந்து சக்கரங்களாய்த் திரண்டு பிரபஞ்சத்தையும் அண்டா அண்டங்களையும், பஞ்ச பூதங்களையும் சகல தோற்றங்களையும், வடிவங்களையும், படைத்துக், காத்து, அழித்து நிற்கின்றது. விந்துவின் விரயமே இறைவனின் தாள்களாய், கருவில் மிதித்த பாதங்களாய், உயிர்களாய், விரிந்து இயங்குகின்றன. கீழ்க்காணும் திருமந்திரங்கள் விளக்குகின்றன. "முழுதும் உண்மை" யென்னும் வேதவாக்கியத்தை நிரூபிக்கின்றது.

1279 விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்த விஞ்ஞானம்
விரையது விந்து விளைந்தது அவன்தாளே.

2798 மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பு மன்னுடனிசையும்
கருவில் மிதிந்த கமலப் பதமும்
உருவில் சிவாயநம வென ஓதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவில் மிதித்த அவன்தாளே அகார எழுத்தாய் நின்று ஐந்தெழுத்துச் சக்கரமாய் விரிந்து சகல தோற்றங்களையும் படைத்து மெய்ப்பொருளாய் நிற்பதைக் கீழ்காணும் திருமந்திரங்கள் கூறுகின்றன.

1280 விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கரமாகும்
விளைந்த எழுத்தவை மெய்யினில் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரமாமே.

உடம்புள் இயங்கும் ஆத்ம சக்கரம் பஞ்சாக்சர மந்திரத்தை ஓதுவதாக நந்தியின் இன்னொரு சீடரான பதஞ்சலி முனிவர் யோக சூத்திரத்தில் கூறியுள்ளார். இம் மந்திரம் ஒன்றே மெய்ப்பொருளாய் படைப்புகள் எல்லாவற்றிற்கும் காரணகர்த்தாவாய் முழுதும் உண்மையாய் நிற்கின்றது.

966 அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத்தால் பல யோனி படைத்தனன்
அஞ்செழுத்தால் இவ்வகலிடம் தாங்கினன்
அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே.

எமது ஆத்மாவும் அஞ்செழுத்துச் சக்கரத்திலேயே அமர்ந்து நின்று இயங்குகின்றான். இக்காரணத்தினாலேயே யோகர் சுவாமிகள் பார்ப்பதெல்லாம், பார்க்கும் எல்லாத் தோற்றங்களும் நீ யென்றும், என்னையன்றி ஈசன் வேறில்லை யென்றும், சீவன் சிவனென்றும் பல பாடல்களால் விளக்கியுள்ளார்.

123 அளித்தான் உலகெங்கும் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்து அருள்வெளி தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கருவில் மிதித்த கமலப் பாதமாகிய அகார எழுத்திலிருந்து எழுந்த ஐந்தெழுத்துச் சக்கரமே எமது ஆத்மாவாகிய மெய்ப்பொருள். கீழ்க்காணும் திருமந்திரங்கள் தானாகிய ஆத்மாவும் அவனாகிய இறைவனும் ஒரே பொருள் வேறில்லையென்று கூறுகின்றன.*

1607 தானென்று அவனென்று இரண்டாகும் தத்துவம்
தானென்ற அவனென்ற இரண்டுந் தனிற் கண்டு
தானென்ற பூவை (ஓமெனும் பூவை) அவன் அடிசாத்தினால்
தானென்று அவனெனன்று வேறில்லைத் தானே.

2348 தானென்று அவனென்று இரண்டென்பர் தத்துவம்
தானென்று அவனென்று இரண்டற்ற தன்மையை
தானென்று இரண்டு உன்னார் கேவலத்தானவர்
தானின்றித் தானாகத் தத்துவ சுத்தமே.

412 தானே திசையொடு தேவருமாய் நிற்கும்
தானே உடல் உயிர் தத்துவமாய் நிற்கும்
தானே கடல்மலை ஆதியுமாய் நிற்கும்
தானே உலகிற் தலைவனுமாமே.

686 தானே படைத்திட வல்ல வனாயிடும்
தானே அளித்திட வல்லவனாயிடும்
தானே சங்காரத் தலைவனுமாயிடும்
தானே அவனெனும் தன்மையனாமே.

2355 தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை, எனக்குள் இயங்கும் அழியாத மெய்ப் பொருளான ஆத்மாவை அறிந்து விட்டால் இவ்வுலகில் அறிவதற்கு அதன் அழியும் தோற்றங்களல்லால் வேறு ஒரு பொருளுமில்லை. "பார்ப்பதெல்லாம் நீ யென்றான் எங்கள் குருநாதன்" என்று முக்காலத்தையும் உணர்ந்த யோகர் சுவாமி நற்சிந்தனையில் கூறியுள்ளார். திருமூலரும் பின்வரும் திருமந்திரங்களால் விளக்கியுள்ளார்.

2366 என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்த பின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டிருத்தலுங் கைவிடாது
என்னை இட்டு என்னை உசாவு கின்றானே.

2363 அறிவறியாமையை நீவி அவனே
பொறிவாய் ஒழிந்து எங்குந் தானான போது
அறிவாய் அவற்றினுட் தானாய் அறிவின்
செறிவாகி நின்றவன் சீவனுமாமே.

404 ஒருவனுமே உலகேழும் படைத்தான்
ஒருவனுமே உலகேழும் அளந்தான்
ஒருவனுமே உலகேழும் கடந்தான்
ஒருவனுமே உடலோடு உயிர்தானே.

440 மண்ணொன்று தான் பல நற்கலமாயிடும்
உள்நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான் பல காணும் தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணமாகி நின்றானே.

675 மாலகுவாகிய மாயனைக் கண்ட பின்
தாளொளியாகித் தழைத்தங்கு இருந்திடும்
பாலொளியாகிப் படர்ந்தெங்குந் நின்றது
மேலொளியாகிய மெய்ப்பொருள் காணுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1361 தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமுமாகி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமே.

885 ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகி
ஈரெழுத்தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத்தாலே முளைத்தோங்கும் சோதியை
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே.

1753 அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்
உகார முதாலாய் உயிர்ப்பெய்தி நிற்கும்
அகார உகாரம் இரண்டும் அறியில்
அகார உகாரம் இலிங்கமதாமே.

1748 உணர்ந்தேன் உலகினில் ஒண் பொருளானை
கொணர்ந்தேன் குவலயங்கோயில் என் நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகலவன் பாட்டும் ஒலியே.

1775 ஒன்றெனக் கண்டேன் எம் ஈசன் ஒருவனை
நன்றென்று அடியிணை நான் அவனைத் தொழ
வென்ற ஐம்புலனும் மிகக் கிடந்தின்புற
அன்றென்று அருள் செயும் ஆதிப்பிரானே.

1809 தானே படைத்திடுந் தானே காத்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே இவை செய்து தான் முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனுமாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1811 ஒன்றது வாலே உலப்பிலி தானாகி
நின்றது தான் போல் உயிர்க்குயிராய் நிலை
துன்றியவை யல்லவாகுந் துணையென்ன
நின்றது தான் விளையாட்டென்னுள் நேயமே.

2318 முன்னை அறிவினிற்செய்த முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாந்
தன்னை அறிவது அறிவாம் அஃதன்றி
பின்னை அறிவது பேய் அறிவாகுமே

2517 நின்றும் இருந்தும் கிடந்துந் நிமலனை
ஒன்றும் பொருள்கள் உரைப்பவ ராகிலும்
வென்று ஐம்புலனும் விரைந்து பிணக்கறுத்து
ஒன்றாய் உணரும் ஒருவனு மாமே.

2775 அம்பலமாவது அகில சராசரம்
அம்பலமாவது ஆதிப் பிரான்அடி
அம்பலமாவது அப்புத் தீ மண்டலம்
அம்பலமாவது அஞ்செழுத்தாமே.

2962 ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்
ஒன்று கண்டீர் உலகுக்கு உயிராவது
நன்று கண்டீர் இனி நமசிவாயப் பழம்
தின்று கண்டேற்கு இது தித்தித்தவாறே.

9 பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர் நந்தி
என்னாற் தொழப்படும் எம் இறை மற்றவன்
தன்னாற் தொழப்படுவாரில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ஒன்றவன் தானே இரண்டு அவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்நதனன் ஏழு உம்பர்ச்
சென்று அவன் தானிருந்தான் உணர்ந்தெட்டே.

நாம் இப்பிரபஞ்சத்தில் காணும் தோற்றங்கள் எல்லாம் ஒரு அழியாத மெய்ப்பொருளால் படைக்கப்பட்டு அத்தோற்றங்களோடு கலந்து நிற்கின்றது. ஞானிகள் அநித்தியமான பொய்ப்பொருள்களைத் தாங்கி நிற்கும் உலகத்தோடு ஒட்டி வாழ்வதில்லை. திருவள்ளுவர் கீழ்க்காணுந் திருக்குறளால் விளக்குகின்றார்.

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்.

திருமூலரும் பின்கூறுந் திருமந்திரத்தால் மெய்ப் பொருளை உணர்ந்த வல்லவர்கள், அது இயங்கும் ஐந்தெழுத்து வழியோடு ஒன்றி வாழ்கின்றார் என்றும், அஞ்ஞானிகள் எல்லா இடத்திலும் கலந்து நிற்கும் உண்மைப் பொருளை அறியாரென்றும் கூறுகின்றார்.

311 வல்லார்கள் என்றும் வழி ஒன்றி வாழ்கின்றார்
அல்லாதவர்கள் அறிவு பல என்பார்
எல்லா இடத்தும் உளன் எங்கள் தம் இறை
கல்லாதவர்கள் கலப்பு அறியாரே.

நாம் அறியோம், முழுதும் உண்மையென்று யோகர் சுவாமி கூறின வேத வாக்கியங்களின் தத்துவப் பொருள் விளங்கி வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# எப்பவோ முடிந்த காரியம்

நாம் பிறக்கும் காலத்தையும், இறக்கும் காலத்தையும், எமது உலக வாழ்க்கை அமைய வேண்டிய விதி வழியையும், எமக்குள் இயங்கும் அழியாத மெய்ப்பொருளான ஆத்மா, ஏற்கணவே நிர்ணயித்து வைத்திருக்கும். இந்த உண்மையையே யோகர் சுவாமி "எப்பவோ முடிந்த காரியம்" என்று மூன்றாம் வேத வாக்கியமாக கூறியுள்ளார். திருமூலரும் கீழ்க்காணும் திருமந்திரத்தால் உறுதிப்படுத்துகின்றார்.

20. முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசன் உருவம்
கடிமலர்க் குன்றம் மலையது தானே.

உயிர்களாய் விரிந்து இயங்கும் கருவில் மிதித்த கமலப் பாதங்கள் உறையும் தவநெறி நாடில், விந்துவும், நாதமும் இறைவனின் உருவம். விண்ணுலகில் அடர்த்தியாய் மலர் பூத்திருக்கும் கயிலைமலையே உறையும் இடம். பட்டினத்துப் பிள்ளையாரும் விளக்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்செயலால் ஆவது ஒன்றில்லை இனித் தெய்வமே
உன்செய லேயன்றி வேறில்லை என்று உணரப் பெற்றேன்
ஊனெடுத்தபின் செய்ததீவினை யாதொன்றுமில்லை
பிறப்பதற்குமுன் செய்ததீவினையோ இங்ஙனம் வந்து
மூண்டதுவே.

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ
மூடனாய் அடியேன் அறிந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனை சென்மமோ
என் செய்வேன் கச்சி ஏகம்பனே

*ஆத்மா முற்பிறப்புக்களில் எடுத்த உடம்புகள் செய்த தீவினைகளின் கன்ம பலனே, இப்பிறப்பில் விதி வழியாய் நின்று செயல்படுகின்றது. திருமந்திரம் பின் கூறும் சில பாடல்களால் விதியை, எப்பவோ முடிந்த காரியமாக விளக்கி, அவையின் பலாபலன்களை அனுபவிக்கிறோம் என்கிறது.*

2848 தான் முன்னம் செய்த விதிவழி தானல்லால்
வான் முன்னஞ் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோன்முன்னம் சென்னி குறி வழியே சென்று
நான் முன்னம் செய்ததே நன்நிலமானதே.

*வானம் எமது வாழ்க்கையைச் செய்து எம்மை அதில் மாட்டவில்லை. எம்மை ஆளும் ஆத்மா, ஐந்தெழுத்துக் குறியில் அகாரம், உகார வழியே ஓதி, நான் செய்த நல்வினையே இப்பூமி எனக்கு நல்ல நிலமாயிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2228 தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனு மாமே.

*நான் செய்த பாவ வினைகளின் பலனாக என் ஆத்மா எனக்குப் பகைவனாயும் அறவினைகளால் நண்பனாகவும் நிற்கின்றது. என் வினைகளின் பலனாகவே எனது இப்பிறப்பும் நடந்து கொண்டிருக்கிறது. இவையெல்லாம் எப்பவோ முடிந்த காரியம். எமது அடுத்த பிறப்பும் எமது வினைகளாலேயே அமையும். ஒருவன் செய்த வினைகளின் பலனை அவன் எடுக்கும் பிறப்புக்களில் அனுபவிப்பான். தனக்குள் இயங்கும் ஆத்மாவே தனக்குத் தலைவனாய் நிற்கும் இறைவன்.*

33. பதி பலவாவது பண்டிவ்வுலகம்
விதி பல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரம் சொல்ல வல்லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின்றாரே.

*நாதவிந்துச் சக்கரத்தில் இயங்கும் பதி, பல உருவங்களாய் தோற்றங்களாய் இவ்வுலகில் அமைந்துள்ளது. ஆனால் மனிதரோ விதிக்கப்பட்ட நெறி முறைகளில் ஒன்றையாவது கடைப்பிடித்து மெய்ப்பொருளை உணரார். துதிக்கும் தேவாரம் திருவாசகம் முதலிய தோத்திரங்கள் பாட வல்லமையுள்ளவர்களும் புத்தியற்று மெய்ப்பொருளைக் காணாமல் நெஞ்சினுள் வாடுகின்றார்கள்.*

148. அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடியாளுடன் மந்தணங் கொண்டார்
இடப்பக்கமேயிறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அடப்பண்ணி வைத்தார் = சாப்பாட்டுப் பண்டங்களை தேடி வைத்தார். அடிசில் = உணவு. இடப்பக்கம் = இதயப்பக்கம். கிடந்து ஒழிந்தார் = கிடந்து உயிர் நீற்றார்.*

164 இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சு இருளாவது அறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

*இடிஞ்சில் = உடம்பு. விளக்கெரி = உயிர். முடிஞ்சது = இறந்தது. முழங்குவர் = அழுவர். படிஞ்சு = சகித்து.*

181 பாலன் இளையன் விருத்த னென நின்று
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலம் கடந்து அண்டம் ஊடறுத்தான் அடி
மேலும் கிடந்து விரும்புவன் நானே.

*விருத்தன் = கிழவன். அறிகிலார் = காரண கர்த்தாவை அறிகிலார். அடி = உயிராய் விரிந்த தாயின் கருவில் மிதித்த கமலப்பாதம்*

187 தழைக்கின்ற செந்தளிர் தண்மலர் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியாரவர் தாமே.

*கொம்பு = மரக்கொப்பு. இழைக்கின்ற = படைக்கின்ற இலை, காய், பூ முதலியன. இறக்கின்ற = அழிகின்ற. பெருமான் அடி = தாயின் கருவில் மிதித்த கமலப்பாதம். அழைக்கின்ற = யமன் கூப்பிடுகின்ற.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188 ஐவர்க்கு ஒரு செய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டாரே.

*ஐவர்க்கு = ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மாவுக்கு. செய் = உடம்பு. நாயகன் = இறைவன்.*

185 ஒன்றிய ஈரெண்கலையும் உடன்றன
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றியகாலன் கருக்குழி வைத்தபின்
சென்று அதில் வீழ்வர் திகைப்பொழியாரே.

*ஒன்றிய = உடம்போடு ஒன்றி நிற்கும். ஈரெண் கலை = பதினாறு கலை. உடன்றன = இயங்கிக் கொண்டு. நீதர்கள் = அஞ்ஞானிகள். கன்றிய = கொடூரமான. காலன் = யமன். கருக்குழி = மடிவதற்கு பொறி. வீழ்வர் = விழுந்து மடிவர்.*

261 ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளும் குறுகி
பிழிந்தன போலத் தம் பேரிடராக்கை
அழிந்தன கண்டும் அறம் அறியாரே

*கற்பனை நாளும் = மனக்கோட்டை கட்டிய வாழ் நாள். பிழிந்தன போல = சாறு பிழிந்தெடுத்தது போல. ஆக்கை = உடம்பு.*

267 இன்பம் இடர் என்று இரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையினாலே முடிந்தது
இன்பமது கண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம் அறியாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர் = துன்பம். முன்பவர் செய்கை = முற்பிறப்பில் செய்த வினை. ஈகிலா = ஐந்தெழுத்து ஓதாத வழங்காத, ஈயாத.

2085 போது சடக்கெனப் போகின்றது கண்டும்
வாது செய்து என்னோ மனிதர் பெறுவது
நீதியுள்ளே நின்று நின்மலன்தாள் பணிந்து
ஆதியை அன்பில் அறியகில்லார்களே.

போது = உயிர். சடக்கென = சடுதியாய். முன் அறி விப்பு இல்லாமல் வாது செய்து = இறைவனின் கோலங்கள், குணங்கள், இருப்பிடம் முதலியவற்றைப் பற்றி தர்க்கம் புரிந்து. நீதியுள்ளே = ஆத்மா இயங்கும் ஓமெனும் நாமத்துள்ளே. (பாடல் 15, 23, 555 பார்க்கவும்) நின்மலன் தாள் = மலத்தால் பீடிக்கப்படாத புனிதமான தாயின் கருவில் மிதித்த கமலப்பாதம், இறைவனின் திருவடி. ஆதியை = ஆதிப்பொருளான மெய்ப் பொருளை அன்பில் = தியானித்து, அன்பு செலுத்தி.

2084 வித்துப் பொதிவார் விரைவிட்டு நாற்றுவார்
அற்ற தம் வாழ்நாள் அறிகிலாப் பாவிகள்
உற்ற வினைத்துயர் ஒன்றும் அறிகிலார்
முற்றொளி தீயின் முளிகின்ற வாறே.

வித்துப் பொதிவார் = விதைக்கும் தானியத்தைக் கட்டி முளைக்க வைப்பார். நாற்றுவார் = நடுவார் அற்ற தம் வாழ்நாள் = இருதய நோயின் தாக்குதலாலோ அல்லது விஷப் பாம்பின் தீண்டுதலாலோ தனது உலக வாழ்வு முடிந்து விட்டதை பாவிகள் அறியார். பூர்வ சென்மத்தில் செய்த பாவ வினைகளால் விளைந்த துயரமான விதிவழி ஒன்றும் அறியார். விட்டில் பூச்சி தீயின் பிரகாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தைத் தரும் என்னும் நோக்கத்துடன் பறந்து அதில் விழுந்து மடிகின்றவாறே மனிதரும் உலக வாழ்வில் மயங்கி அழிகின்றனர்.

கர்ம வினையால் விளையும் விதிவழியை யாராலும் மாற்ற முடியாது. அனுபவித்தே தீர வேண்டும். அவரவர் தலை எழுத்து எப்பவோ முடிந்த காரியமென்பர். ஆனால் விதியை வெல்லும் மார்க்கமொன்றுண்டு. அவ்வழியைக் கீழ்க்காணும் திருமந்திரங்கள் கூறுகின்றன.

1186 அது இது என்னும் அவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிடலாகும்
மதிமலராள் சொன்ன மண்டலம் மூன்றே.

சுழியுற = குண்டலினி பற்றி மதிமலராள் = சந்திரப் பூவாய் சித்தாகாசத்தில் தோற்றுபவள் (பாடல் 601) மண்டலம் மூன்று = மண், வான், விண்.

1231 அது இது என்று அவமே கழியாதே
மது விரி பூங்குழன் மங்கை நல்லாளைப்
பதி மது மேவிப் பணிய வல்லார்க்கு
விதி வழி தன்னையும் வென்றிடலாமே.

மது விரி பூ = தேன் பொருந்திய கருவில் மிதித்த கமலப்பூ. மங்கை = ஐந்தெழுத்தில் இயங்கும் சத்தி.

1232 வென்றிடலாகும் விதி வழி தன்னையும்
வென்றிடலாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிடலாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கை தன் மெய் உணர்வோர்க்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழைபுலன் = ஐம்புலன்களில் எழும் ஆசைகள். மங்கை தன் மெய் = ஐந்தெழுத்துச் சக்கரமே சத்தியின் உடல்.

2611 தன்னை அறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே.

தன்னை = தன் ஆத்மாவை தத்துவ ஞானிகள் = மெய்ப் பொருளை, ஐந்தெழுத்தில் இயங்கும் பராசக்தியை உணர்ந்த வர்கள். முன்னை வினையின் முடிச்சு = முற்பிறப்பில் செய்த பாவவினையால் கட்டுப்பட்ட முடிச்சு பின்னைவினை = இப்பிறப்பில் செய்த பாவவினை. சென்னியில் வைத்த = உச்சியில் எழுந்த ஆத்ம சோதியால்.

292 நிற்கின்ற போதே நிலையுடையான் கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றலின்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன்றிலாத மணி விளக்காமே.

நிற்கின்ற போதே = உயிர்உடலுள் நிற்கும் பொழுதே நிலையுடையான் கழல் = அழியாத மெய்ப்பொருளான ஆத்மாவின் கருவில் மிதித்த கமலப்பாதம். கற்கின்ற செய் மின் = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதிக் கல்வி பயிலுங்கள். கழிந்தறும் பாவங்கள் = தீயவினைகளால் விழைந்த பாவங்களெல்லாம் கழிந்து அறுந்துவிடும். சொற் குன்றலின்றி = ஐந்தெழுத்து ஓதுவதைக் குறைய் விடாமல். தொழுமின் = ஓதித் தொழுங்கள். மற்றொன்றிலாத மணிவிளக்கு = பரஞ்சோதிக்கு வேறு உவமையான சோதி இல்லை. ஆத்ம சோதி பரஞ் சோதியின் ஒருதுகள். (Spark of the Divine)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் உதித்த முக்காலத்தையும் உணர்ந்த தத்துவஞானி யோகர் சுவாமி எமக்கு அளித்திருக்கும் அமுதவாக்குகளை அறிந்து உணர்ந்து எமது மானிடப் பிறப்பின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வோமாக.

தென்னை பனை சேர் இலங்கை வாழ் சிவநேயச் செல்வர்களே! தேரீர் சீவன் சிவன் என்னும் அவரின் போதனையை ஏற்று வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஒரு பொல்லாப்பும் இல்லை

யோகர் சுவாமி எமக்குப் போதித்த நான்காம் வேத வாக்கியம் "ஒரு பொல்லாப்பும் இல்லை". இந்த உண்மையைத் திருமூலர் பல திருமந்திரங்களால் நிரூபித்துள்ளார். அவற்றிற் சிலவற்றைக் கீழே கூறுகின்றோம்.

2355 தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே.

தன்னை = தன் ஆத்மாவை. அறிந்த பின் = ஆத்ம ஞானத்தைக் குரு மூலம் பெற்று அறிந்த பின். அர்ச்சிக்க = ஆத்ம சொரூபத்தோடு கோதண்டத்தோடு பொருந்தித் தியானிக்க. தான் இருந்தான் = தன் ஆத்மா உடம்புள்ளே இருக்கின்றான்.

1303 ஆமே எழுத்தஞ்சுமாம் வழியேயாக
போமே அது தானும் போம் வழியே போனால்
நாமே நினைத்தன செய்யலு மாகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமே எழுத்தஞ்சுமாம் வழியேயாக = அஞ்செழுத்து இயங்கிக் கொண்டிருக்கும் வழியாக. போமே அது = ஆத்மாவும் போய்க் கொண்டிருக்கும். தானும் போம் வழியே போனால் = தன் மனமும் அவ்வழியே ஓடவிட்டால். நாமே நினைத்தன செய்யலுமாகும் = நாம் எண்ணிய கருமம் கைகூடும். பார்மேல் ஒருவர் பகையில்லை = உலகில் ஒரு பொல்லாப்பும் இல்லை.

2846 ஆமாறு அறிந்தேன் அகத்தின் அரும்பொருள்
போமாறு அறிந்தேன் புகுமாறு ஈதென்று
ஏமாப்பதில்லை இனி ஓர் இடரில்லை
நாமா முதல்வனும் நானெனலாமே.

ஆமாறு அறிந்தேன் = அஞ்செழுத்து இயங்கிக் கொண்டிருப்பதை அறிந்தேன். அகத்தின் அரும் பொருள் = நெஞ்சகத்துள் இருக்கும் மெய்ப்பொருளான ஆத்மா. அது உடம்புள் போவதும் புகுவதும் அறிந்தேன். மெய்ப்பொருளை அறிந்து விட்டேன். ஏமாற மாட்டேன். இனி ஒரு பொல்லாப்பும் இல்லை.

1338 நடந்திடு நாவினுள் நன்மைகள் எல்லாந்
தொடாய்ந்திடுஞ் சொல்லொடு சொற்பொருள்தானுங்
கடந்திடுங் கல்விக்கு அரசி இவளாகப்
படர்ந்திடும் பாரிற் பகையில்லை தானே.

நடந்திடு நாவினுள் = நாவுக்குள்ளே ஓமெனும் சிவ நாமத்தை ஓது. சொல்லொடு சொற்பொருள் = ஐந்தெழுத்துச் சொல்லொடு அதை ஓதுவதால் பெறும் பயன். கடந்திடும் = ஐந்தெழுத்தில் இயங்குவது கடந்து. கல்விக்கு அரசி = ஐந்தெழுத்தை ஓதிக் குண்டலினி சத்தியால் எழுந்த பராசக்தி. படர்ந்திடும் = வியாபித்திடும். பாரிற் பகையில்லை = உலகில் ஒரு பொல்லாப்பும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2126 ஆரே அறிவார் அடியின் பெருமையை
ஆரே அறிவார் அங்கு அவர் நின்றது
ஆரே அறிவார் அறுபத்தோடாக்கையை
ஆரே அறிவார் அடிக்காவலானதே.

*அடி= தாயின் கருவில் மிதித்த இறைவனின் திருவடி, இணையடி, சேவடி, கமலப்பாதம், பூங்கழல். அங்கு அவர் நின்றது = கருவில் மிதித்த கமலப் பாதத்தில் எழுந்து ஆத்மா நின்றது. அறுபத்தோடாக்கை = பதினாறு கலைகள் கொண்ட உடம்பு. அடிக் காவலானது = உடம்புக்கு ஒரு பொல்லாப்பும் வராமல் அத்திருவடி காவலாய் நிற்பது ஆர் அறிவார்.*

28 இணங்கி நின்றான் எங்குமாகி நின்றானும்
பிணங்கி நின்றான் பின் முன்னாகி நின்றானும்
உணங்கி நின்றான் அமராபதி நாதன்
வணங்கி நின்றார்க்கே வழித்துணையாமே.

*இணங்கி = ஒத்து. எங்குமாகி = எங்கும் வியாபித்து. பிணங்கி = வேறாக. பின்முன் = இம்மையும் மறுமையும். உணங்கி = அருள்பாலித்து. வழித்துணையாமே = உலக வாழ்க்கைக்கு ஒரு பொல்லாப்பும் இல்லாமல் வழித்துணை யாமே.*

174 வாழ்வும் மனைவியும் மக்களும் உடன்பிறந்
தாரும் அளவே தமக்கென்பர் ஒண்பொருள்
மேவும் அதனை விரிவு செய்வார்கட்குக்
கூவும் துணையொன்று கூறலுமாமே.

*அளவே தமக்கென்பர் = உலக பாரம் பொறுப்பு தமக்கு போதுமானதென்று மனிதர் கூறுவர். ஒண்பொருள் = மெய்ப்பொருளான ஆத்மா அதை ஓதி விரிவு செய்வார்கட்கு அது கூவிக்கொண்டு துணை புரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

279 அன்பினுள்ளான் புறத்தான் உடலாயுளன்
முன்பின் உள்ளான் முனிவர்க்கும் பிரானவன்
அன்பினுள்ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள்ளார்க்கே அணைதுணையாமே

அன்பினுள்ளான் = அன்பே சிவம். புறத்தான் = புறத்தும் உளான். முன்பின் = முற்காலத்தும் பிற்காலத்தும் அமரும் அரும்பொருள் = உள்ளத்தில் உறையும் மெய்ப் பொருள். அன்பு வைப்பவர்களுக்கு அணைந்து நின்று ஒரு பொல்லாப்பும் வரவிடாமல் துணை புரியும்.

294 துணையது வாய் வருந்தூய நற்சோதி
துணையது வாய் வருந்தூய நற்சொல்லாந்
துணையது வாய் வருந்தூய மலர்க்கந்தம்
துணையது வாய் வருந்தூய நற்கல்வியே.

சோதி = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி சித்தாகாசத்தில் பர்ணமிக்கும் ஆத்மசோதி. நற்சொல் = அகாரம், இகாரம், உகாரம், ஓங்காரம் மகாரமாகிய ஐந்தெழுத்துச் சொல். கந்தம் = கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழும் கந்தம். நற்கல்வி = அகாரம், உகாரம், மகாரமாகிய முப்பதத்தில் எழும் ஓம் என்னும் மந்திரத்தை ஓதிப் பயிலுங் கல்வி பொல்லாப்பை அகற்றும்.

307 உறுதுணையாவது உயிரும் உடம்பும்
உறுதுணையாவது உலகுறு கேள்வி
செறிதுணையாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே.

உலகுறு கேள்வி = உலகளாவி நிற்கும் விந்துவிலிருந்து எழுந்த பரநாதம். சிவனடிச் சிந்தை = கருவில் மிதித்த இறைவனின் கமலப் பாதத்தில் தியானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

320 நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவருமாவர்
நடுவு நின்றார் வழி நானு நின்றேனே.

நடுவு நின்றார் = அகார, உகாரத்தில் சுழுனை நாடியில் நின்று தவம் செய்பவர். அகார உகாரத்தில் தியானம் செய்பவர்கட்கு அது ஆத்ம இலிங்கமாய், கோதண்டமாய் ஏகம்பமாய் புலப்பட்டு சமாதி நிலைக்கு இட்டுச் செல்லும்.

544 தாம் இடர்பட்டுத் தளிர் போற் தயங்கினும்
மாமனத் தங்கு அன்பு வைத்த திலையாகும்
நீ இடர்ப்பட்டு இருந்து என்செய்வாய் நெஞ்சமே
போமிடத்தென்னோடும் போது கண்டாயே.

இடர்ப்பட்டு = பொல்லாப்புகளால் துன்பம் அனுபவித்து. தளிர் போற் தயங்கினும் = காற்றுக்கு இலைத்தளிர் தளம்பி நடுங்குவது போற் தயங்கினும். மாமனத்தங்கு அன்பு வைத்ததிலை. நீ இடர்பட்டு = நீ துன்பத்துள் நின்று. போமிடத்தென்னோடும் போது கண்டாய்= நான் (ஆத்மா) ஐந்தெழுத்து வழியாகப் போகும் இடத்துக்கு என்னோடு வாராய்.

1554 அறிவுடன் கூடி அழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம் பதி சிந்தும்
குறியது கண்டுங் கொடு வினையாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே.

அழைத்ததோர் தோணி = ஐந்தெழுத்தில் ஓடுவதும் மீளுவதுமாய் இயங்கும் ஆத்மாவை ஒரு தோணிக்கு ஒப்பிடுகிறார். அது அறிவுச் சரக்கையும் ஏற்றிக்கொண்டு எம்மையும் ஏறும்படி அழைக்கின்றது. பழம்பதி = ஆதிப்பிரான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியது கண்டு = ஆத்மா பிராண வாயுவாய் இயங்கும் குறியைக் கண்டும் கொடும் பாவ வினை செய்த மானிடர். செறிய நினைக்கிலர் சேவடி = கருவில் மிதித்த திருவடியே எங்கும் வியாபித்து சகல தோற்றங்களாய் நிற்கும் மெய்ப்பொருளை, ஐந்தெழுத்தை ஓதார்.

2615 **ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோடாவது ஆசை அறுமின்கள்**
**ஆசைபடப்பட ஆய்வருந் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்தமாமே.**

*ஐம்புலன்களின் செயல்பாட்டால் எழும் ஆசைகளை அறுமின்கள். ஆசைகள் துன்பத்தை விளைவிக்கும்.*

2823 **காணவல்லார்க்கு அவன் கண்ணின் மணி ஒக்கும்**
**காணவர்லார்க்குக் கடலின் அமுதொக்கும்**
**பேணவல்லார்க்குப் பிழைப்பிலன் பேர் நந்தி**
**ஆணவல்லார்க்கே அவன் துணையாமே.**

*கண்ணின் மணி = நெற்றிக் கண்ணொளி. கடலின் அமுது = சமுத்திரத்தில் அமுது கண்டு எடுத்ததை ஒக்கும். பேணவல்லார்க்கு = ஐந்தெழுத்தை ஓதி அன்பு செலுத்து பவர்கட்கு. பிழைப்பிலன் = மெய்ப்பொருளை உணரவிடாமல் பொல்லாப்புகள் செய்யான். பேர் நந்தி = பேர் உருவமில்லாத ஆத்மாவுக்கு அளித்த குருவின் பேர். ஆணவல்லார்க்கே = ஓதி உணர வல்லார்க்கே.*

2960 **ஆராலும் என்னை அமட்ட வொண்ணாது இனி**
**சீரார்பிரான் வந்து என் சிந்தை புகுந்தனன்**
**சீரார் அடியங்கே திரிவதல்லால்**
**யார்பாடுஞ் சாரா அறிவு அறிந்தேனே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமட்டவொண்ணாது = பந்தப் படுத்த முடியாது. சீரார் அடி = ஞானிகள் போற்றும் கருவில் மிதித்த கமலப் பாதமாகிய அகார எழுத்து. அகார எழுத்து ஐந்தெழுத்தாய் விரிந்து ஆத்மாவாக இயங்கும்.

கருவில் மிதித்த இறைவனின் திருவடியைஆத்மாவின் இணையடியைக் கண்டு வணங்குகிறவர்களே ஈசன் அடியார் சிவனடியாரென்று திருமந்திரம் கூறுகின்றது.

2740 அடியார் அரன் அடி ஆனந்தங் கண்டோர்
அடியாரானவர் அத்தருள் உற்றோர்
அடி ஆர்பவரே அடியவராமால்
அடியார் பொன்னம்பலத்தாடல் கண்டோரே.

ஈசன் அடியாரின் மனம் நோகச் செய்தால் நாட்டில் பெருஞ் சேதமுண்டாகுமென்று திருமந்திரம் கூறுகின்றது.

534 ஈசன் அடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுந் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம் நந்தி ஆணையே

நாட்டில் வசிக்கும் குடிமக்களின் வீடுகளும் அரசாட்சி செய்பவர்களின் மாளிகைகளும் நாசமாகுமென்று குருவைக் கொண்டு சத்தியம் செய்கிறார். சீவன் சிவனென்று யோகர் சுவாமி கூறின போதனையை நாம் இன்றும் ஏற்றுக் கொள்ள வில்லை. அவர் இதயம் நிச்சயமாக கலங்கியிருக்கும். இரத்த ஆறு பாயுமென்று கூறினாராம். பொல்லாப்பை நாமே தேடிக் கொண்டோம். இறை அருள் சம்பாதிக்கும் அற நெறியைப் பின்பற்றி உய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# யோகர் சுவாமி அருளிச் செய்த நற்சிந்தனை என்னும் நூலில் தெரிந்து எடுத்த சில அறிவுரைகள்.

## இதுவே எமது சைவ சமயம்

நீ உடம்பன்று. மனமன்று. புத்தியன்று. சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது.

*நீ ஆத்மா = உன் உடம்பை, மனத்தை, புத்தியை படைத்துக் காத்து வளர்த்து அழிக்கும் மெய்ப்பொருள் ஆத்மாவாய் இயங்கும் சிவனாகிய சீவன்.*

1. என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்

*என்னை = என் ஆத்மாவை.*

இணை அடி என் தலை வைத்தான் எங்கள் குருநாதன்

*இணை அடி= கருவில் மிதித்த கமலப் பாதம். ஆத்ம சக்கரத்துக்கு இணை அடியாய் அகார எழுத்தாய் நிற்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகத்தை ஆக்கி விட்டான் எங்கள் குருநாதன்
*தாகம் = இறைவனை உணர்வதற்கு பெரும் விருப்பம்.*

சத்தியத்தைக் காண வைத்தான் எங்கள் குருநாதன்
*சத்தியம் = மெய்ப்பொருளான ஆத்மா.*

2. இரு வழியை அடையென்றான் எங்கள் குருநாதன்
*இரு வழி = வரும் வழி, போகும் வழி*

ஓங்கார வழி என்றான் எங்கள் குருநாதன்
*ஓங்காரம் = அகார உகாரம் விரிந்து ஓம்காரமாய் வழி அளித்தான்.*

பார்ப்பதெல்லாம் நீயென்றான் எங்கள் குருநாதன்
*நீயென்றான் = ஐந்தெழுத்தில் இயங்கும் உன் ஆத்மாவே நீ உலகில் காணும் சகல தோற்றங்களுமாய் நிற்கிறது.*

அஞ்செழுத்தை ஓதென்றான் எங்கள் குருநாதன்
*ஆத்மா இயங்கும் அஞ்செழுத்தை உணர்வால் உரையென்றான்.*

சீவன் சிவனென்றான் எங்கள் குருநான்
*ஐந்தெழுத்துப் பிரணவ சக்கரத்தில் இயங்கும் சீவனே சிவன்.*

எல்லாம் நீ யென்று உரைத்தான் எங்கள் குருநாதன்
*எல்லாம் நீ = ஆத்மாவாய் இயங்கும் ஐந்தெழுத்தே எல்லாப் படைப்புகளுக்கும் காரணகர்த்தா.*

3. சோதிமயமென்று சொன்னான் எங்கள் குருநாதன்
*சோதிமயம் = ஆத்மா ஆத்மசோதியாய் சித்தாகாசத்தில் வெளிப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம்" என்று உறுதி தந்தான் எங்கள் குருநாதன்

*அகாரம் இகாரம் உகாரம் ஓங்காரம் மகாரமாகிய ஐந்தெழுத்தும் அகாரம் உகாரம் மகாரமாகிய ஓம் என்னும் முப்பத்தில் அடங்கி நித்தியமாய் நிற்கும்.*

ஊமை எழுத்தறியென்றான் எங்கள் குருநாதன்

*ஊமை எழுத்து = ஓம் என்னும் முப்பதமும் ஓர் உணர்வு மனத்தாலே கூறலாம்.*

4. வேதாந்தம் சித்தாந்தம் வேறாகக் காணோம்.

*வேதப் பொருள் தான் எல்லாப் படைப்புகளுக்கும் காரணகர்த்தா. அப்பொருள் ஆத்ம சக்கரத்துள் சித்துப் பொருளாய் அறிவாய் இயங்குகின்றது.*

சீவன் சிவனென்று சித்தத்தகிற் கொள்ளும் தொண்டர் நாங்களே.

*தொண்டர் = ஐந்தெழுத்தை ஓதுபவர்கள்.*

இருந்த இடத்தினில் எல்லாம் பார்ப்போம்.

*விந்து நாதத்தால் எழுந்த ஆத்ம சக்கரத்துள் இருந்த இடத்திலேயே எல்லாம் அறியலாம்.*

5. தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டும்.

*ஆத்மாவை அது இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி ஆத்மாவை உணரலாம்.*

கண்ணைப்போல் அறங் காத்திட வேண்டும்.

*அறம் = பிராணாயாமம் செய்து தவம் புரிய மறக்கக் கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலப்பாதம் தொழுதிட வேண்டும்.

*கமலப்பாதம் = கருவில் மிதித்த இறைவனின் பாதத்திலிருந்து எழும் ஐந்தெழுத்தை ஓதி தொழ வேண்டும்.*

அந்தி சந்தி அடி தொழ வேண்டும்.

*அடி = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

நிச சொரூபம் அறிந்திட வேண்டும்.

*நிச சொரூபம் = அழியாத மெய்ப்பொருளான ஆத்மாவை அறிந்திட வேண்டும்.*

5. ஊன்று பாதத்து றங்கிட வேண்டும்.

*ஊன்று பாதம் = கருவில் மிதித்த இறைவனின் திருவடி அடைந்து சமாதி நிலையில் உறங்கிட வேண்டும்.*

உள்ளே ஆனந்தம் பொங்கிட வேண்டும்.

*உள்ளே ஆனந்தம் = நெஞ்சகத்துள் நிறையும் பராபரம்*

6. ஆணவத்தை ஒழித்திடல் வேண்டும்.

*ஆணவம் = மும்மலத்தில் ஒன்று, நானும் இறைவனும் வெவ்வேறு பொருளென்று நினைப்பதை ஒழித்திடல் வேண்டும்.*

6. நாம் அதுவென அறிவது கவசம்
ஏன் இந்தப் பாடு எங்கும் சிவ சிவ

*நாம் அது = நானே இறைவன். கவசம் = சிவஞானம்.*

7. தெய்வம் எல்லோர் சித்தத்தினும் உண்டு.

*தெய்வம் = இறைவன்.*

உய்யும் மார்க்கம் உணர்ந்தோர்க்கு உண்டு.

*உய்யும் = ஆத்மா பிறப்பை அறுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யும் பொறாமையும் புன்மையோர்க்கு உண்டு.

*புன்மையோர் = அஞ்ஞானிகள்*

ஐயன் அடி இணை அன்பர்கட்கு உண்டே.

*ஐயன் அடி இணை= ஆத்ம சக்கரத்துக்கு இணை அடியாய் நிற்கும் கருவில் மிதித்த கமலப் பாதம்.*

எல்லார் இடத்தும் ஈசன் உண்டு.

*இறைவனின் தாள்களே கருவில் விழுந்து உயிர்களாய் விரிந்து நிற்கின்றன.*

தேடுவார் மாட்டுத் தெய்வம் உண்டு.

*ஆர்வம் உடையவர் காண்பர் அரன் தன்னை.*

சீவன் சிவனெனல் தேறினார்க்கு உண்டு.

*தேறினார்க்கு = ஐந்தெழுத்தை ஓதி உணர்ந்தவர்க்கு.*

அன்பு சிவமெனல் அறிஞர்க்கு உண்டு.

*அன்பே சிவம்.*

8. எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி

*ஏத்துக பொன்னடி = கருவில் மிதித்த ஒளி மயமான திருவடியை அகார எழுத்தை ஓதி ஏத்துக.*

தன்னை அறிக தானே ஆகுக.

*ஆத்மாவை அறிந்து தானே தற்பரமாகுக.*

மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க.

*மின்னை ஒத்த = மின்னல் போல் சொற்பகால.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமை இன்பம் மறவாது நாடுக.

*மறுமை = அடுத்த பிறப்பு*

9. தன்னை அறிந்தால் தவம் வேறில்லை
தன்னை அறிந்தால் தான் வேறில்லை
தன்னை அறியச் சகலமும் இல்லை
தன்னை அறிந்தவர் தாபதராமே.

*தன்னை = தன் ஆத்மாவை. தான் வேறில்லை = தானே இறைவன். தானே சகலதும்.*

என்னை யன்றி ஈசன் வேறில்லை
தன்னை யன்றி சகம் வேறில்லை
தன்னை அறிந்தவர் தத்துவ ஆதீதரே.

*என்னை = என் ஆத்மாவை. சகம் = உலகம். தத்துவ ஆதிதர் = மெய்ப்பொருளான ஆதிப் பொருள் உணர்ந்தவர்.*

10. இன்ப துன்பம் இவையே மாயை
அன்புசேர் ஆன்மா அறிவே வடிவம்

*உலகில் நாம் அனுபவிக்கும் இன்ப துன்பம் தான் மாயை. அன்பே சிவமாகிய ஆத்மா அறிவின் சொரூபம்.*

தவத்தைச் செய்து சலிப்பறல் வீரமே.

*மனத்தை ஆத்ம வஸ்துவில் பதிய வைத்து செய்யும் தவமே வீரம்.*

மறுமை இன்பத்தை நாடுதல் வீரமே.

*பிறவாமை கொடுக்கும் இன்பத்தை தேடுதல் வீரம்.*

11. ஐம்பொறியை அடக்கிடல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே
ஓதி ஓதி உணர்வது வீரமே
ஆதி பாதம் அணைவது வீரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஐம்பொறி = ஐம்புலன். ஆதி பாதம் = கருவில் மிதித்த திருவடி அணைவது வீரமே.*

வேதசாத்திரங் கற்றிடல் இன்பமே.

*வேத சாத்திரம் = வேதப் பொருளான மெய்ப் பொருளைக் கற்று உணர்தல் சாத்திரம்.*

நாதன் நாமத்தை ஓதுதல் இன்பமே.

*நாமம் = ஓம் என்னும் திருநாமம். ஐந்தெழுத்துள் முப்பதத்தில் அடங்கியுள்ளது.*

நாம் சிவமென நாடுதல் இன்பமே.

*சீவன் சிவனென உணர்தல் இன்பம்.*

எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே.

*எல்லாத் தோற்றங்களுக்கும் காரண கர்த்தா ஐந்தெழுத்தில் இயங்கும் ஈசன்.*

தானே தானாய்த் தழைத்திடல் இன்பமே.

*ஆத்மாவே தற்பரமாய் தழைக்க ஐந்தெழுத்தை ஓதுதல் இன்பம்.*

12. அஞ்செழுத்தினை ஓதுதல் இன்பமே.

*ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை உணர்வால் ஓதுதல் இன்பம்.*

தஞ்சமென்று அடி சாருதல் இன்பமே.

*கருவில் மிதித்த திருவடியே தஞ்சமென்று அணைந்து நிற்றல் இன்பம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் ஒன்றி இருந்திடல் இன்பமே.

"ஓம்" என்னும் ஆத்ம தண்டில் சிவலிங்கத்தில் ஒன்றி இருத்தல் இன்பம்.

எல்லாம் ஈசன் செயலெனல் இன்பமே.

எமது விதி வழியே எமது ஆத்மா வழி நடத்தும். எம்மால் ஆவது ஒன்றில்லை.

சுழி முனைக்குள் ஒடுங்குதல் இன்பமே.

சுழிமுனை நாடி, அகார உகாரத்தில் ஓம் என்னும் இறை நாமத்தை உரைக்கும் நாடி அதில் ஒடுங்கில் சமாதி நிலை.

சோதி ரூபத்தைக் காணுதல் இன்பமே.
வெளியிலே ஒளி காணுதல் இன்பமே.

சோதிரூபம் = ஆத்ம சோதியை சித்தாகாசத்தில், பரவெளியில் காணுதல் இன்பம்.

13. ஆன்மா அழியாப் பொருள்
அப்பொருளை அறிந்து விட்டால்
வீண்பாவனையெல்லாம் - கிளியே
வெந்து நீறாய் விடுமே.

14. பொறி வழியே போய் அலையும்
பொல்லா மனத்தை வென்றால்
அறிவறியாமை விட்டுக் - கிளியே
அரன் பதம் சேர்ந்திடலாம்.

பொறிவழி = புலன்வழி. அரன்பதம் = கருவில் மிதித்த இறைவனின் அடி. சமாதி நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஒருவனாலேயே உலகம் உதித்ததே
ஒருவனாலேயே உலகம் நிலைத்ததே
ஒருவனாலேயே உலகம் ஒடுங்கிற்றே
ஒருவனே என் உறுதி சிவாயமே.

*ஒருவன் = ஐந்தெழுத்தில் இயங்குபவன்.*

ஓங்காரத்தில் உதித்தது உலகெலாம்
ஓங்காரத்தில் நிலைத்தது உலகெலாம்
ஓங்காரத்தில் ஒடுங்கும் உலகெலாம்
ஓங்காரத்தில் உறுதி சிவாயமே.

*ஓங்காரம் = ஓம் என்னும் நாதம்.*

ஊன்று பாதத்துறங்கிட வேண்டுமே
ஓம் சிவாயநம வென வேண்டுமே
ஈண்டெனக் கொரு சொல்லால் உணர்த்திய
என்குரு பரபுங்கவ சிங்கமே.

*ஊன்றுபாதம் = ஆத்மசக்கரத்துக்கு இணை அடியான கருவில் மிதித்த திருத்தாள்.*

மண்ணின் ஆசை மறந்திட வேண்டுமே
விண்ணின் ஓசை விளங்கிட வேண்டுமே
பண்ணும் ஓசையும் போன்ற பரமனைப்
பாடி ஆடிப் பணிந்திட வேண்டுமே
என்னுளே அருள் காட்டிய அண்ணலே
என்குரு பரபுங்கவ சிங்கமே.

*என்னுளே = என் உள்ளத்துளே.*

*அண்ணல் = அண்ணி நிற்கும் இறைவனே.*

16. நானும் நீயும் ஒன்றாகிட வேண்டுமே
திரிபுரத்தை எரித்திட வேண்டுமே
தேவதேவனைக் கண்டிட வேண்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் நீயும் = ஆத்மாவும் பரமாத்மாவும், சத்தியும் சிவனும். திரிபுரம் = முப்புரம் கோபுரம், ஆத்மா ஏறும் அகாரம், உகாரம் மகாரம்.

வெளியிலே ஒளி கண்டிட வேண்டுமே
சுழியிலே இருந்து ஆறிட வேண்டுமே
துரிய வீட்டில் இருந்திட வேண்டுமே.

வெளியிலே = சித்தகாசப் பரவெளியிலே. ஒளி = ஆத்மசோதி சுழி = சுழிமுனை நாடி.

மேலைவாசல் திறந்திட வேண்டுமே
வெளியிலே நடங் கண்டிட வேண்டுமே
மூலமந்திரம் ஓதிட வேண்டுமே
முத்தி சேர விரும்பிட வேண்டுமே.

மேலைவாசல் = விண்ணுலகத்துக்கு ஏறும் வாசல். நடம் = நடனம், மூலமந்திரம் = ஓம். முத்தி = மும்மலமும் கழிந்த நிலை.

17. ஓதிஓதி உணர்வதுந் தன்னையே
ஆதி ஆதியென்று ஆய்வதுந் தன்னையே
தேறிதேறித் தெளிவதுந் தன்னையே
கூறிக் கூறிக் குறிப்பதுந் தன்னையே.

ஓதிஓதி = ஐந்தெழுத்தை ஓம் என்னும் திருநாமத்தால் ஓதி. தன்னையே = ஆத்மாவை.

சிவத்தை நோக்கித் தெளிவதுந் தன்னையே
தவத்தை யாற்றி அறிவதுந் தன்னையே
பூதம் ஐந்தினுட் போற்றலுந் தன்னையே
நாதம் விந்தென நச்சலுந் தன்னையே
தேடித்தேடித் தெளிவதுந் தன்னையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவத்தை = கருவில் மிதித்த இறைவனின் திருவடியான அகர எழுத்தை. நாதவிந்துவால் விளைந்த ஆத்ம சக்கரத்தை நச்சுவது.*

ஒரு சொல்லால் உளந் தூய்மையாச்சே– சிவசிவ
ஒன்று இரண்டென்றிடும் பேதமும் போச்சே
என்னை அறிந்தேன் இடர் அற்றுப் போச்சே

*ஒரு சொல்லால் = ஓம் என்னும் சொல்லால். ஒன்று இரண்டென்ற = சீவன் சிவனென்ற.*

அண்ட சராசரமெல்லாம் – சிவசிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்
தன்னை அறிந்து விட்டால் தானந் தவமதுவே
தனக்கு உவமை இல்லையடி – கிளியே.

*அகத்திலே = நெஞ்சுள் இயங்கும் ஆத்ம சக்கரத் துள்ளே. தனக்கு = இறைப்பொருளான ஆத்மாவுக்கு.*

என்னை அறிந்தேனெடி – கிளியே
இச்சையெல்லாம் போச்சுதெடி
பொன்னாசை பெண்ணாசை
மண்ணாசையால் மனிதரெல்லாம்
சின்னாபின்னமானாரெடி – கிளியே
சிவத்தியானம் செய்திடுவோம்.

*என்னை = என் ஆத்மாவை. இச்சை = ஆசை. சின்னாபின்னம் = மனக்குழப்பம். சிவத்தியானம் = ஐந்தெழுத்தை ஓதித் தியானம்.*

23. நின்றும் இருந்தும் நடந்தும் நினைமின்
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிமின்

*நினைமின் = ஆத்ம சொரூபத்தை ஓம் என்னும் இறைநாமத்தை ஓதி நினைமின்கள். பொன்றும் = அழியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சிவமென ஆன்றோர் இசைத்த
இன்பந் ததும்பும் இனிய வாசகத்தை
இன்னும் அறிந்திலேன் இரவும் பகலும்
பொன்னும் பொருளும் போகமும் வேண்டினேன்.

*இனிய வாசகம் = ஐந்தெழுத்து.*

சீவனே சிவனெனன்று தெரிந்து கொள்ள வேண்டும்
உருவேறவே செபிக்க வேண்டும்
எல்லார்க்கும் அன்பு செய்ய வேண்டும்
நடுநிலைமை மாறாது இருக்க வேண்டும்
சும்மா இருக்குஞ் சுகம் அறிய வேண்டும்.

*செபிக்க வேண்டும் = ஐந்தெழுத்துள் எழும் "ஓம்" எனும் இறை நாமத்தை ஓத வேண்டும். நடுநிலைமை = நடுநாடியான சுழுமுனையில் நிற்றல்.*

அண்ட சராசரம் அவன் திருமேனி
அண்ட சராசரம் அவன் திருஆடல்
அண்ட சராசரம் அவனேயாகும்
அண்ட சராசரம் முழுதும் அதிசயம்

*ஐந்தெழுத்தால் படைத்த ஐந்து பூதங்களும் சராசரங்களும் இறைவனின் தோற்றம்.*

அஞ்செழுத்தாலே அனைத்தும் ஆயின
அஞ்செழுத்தாலே அனைத்தும் உதித்தன
அஞ்செழுத்தாலே அனைத்தும் நிலைத்தன
அஞ்செழுத்து அதிசயம் ஆர்அறிவாரே.

*அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன். பல யோனி படைத்தனன். இவ் அகலிடம் தாங்கினன். அஞ்செழுத்தால் அமர்ந்து நின்றான் என்று திருமந்திரம் கூறுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 சிவனடிக்கு அன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக்கு அன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக்கு அன்பு சிறப்பினை அளிக்கும்
சிவனடிக்கு அன்பு சீவன் முத்தியே.

*சிவனடி = கருவில் மிதித்த கமலப் பாதம். சிறப்பு = உயர் நிலை.*

சிவனடிக்கு அன்பு தீவினை ஒழிக்கும்
சிவனடிக்கு அன்பு தெளிவினை அளிக்கும்
சிவனடிக்கு அன்பு சித்தங் களிக்கும்
சிவனடிக்கு அன்பு சிவமயம் ஆக்குமே.

*தீவினை = பாவவினை. களிக்கும் = பேரின்பம் அளிக்கும்.*

சிவனடிக்கு அன்புசெய் பவம் போக்கும்
சிவனடிக்கு அன்பே சிவயோகமாகும்
சிவனடிக்கு அனேப சிவஞானமாகும்
சிவனடிக்கு அன்பே சிவபோகமாகும்
சிவனடிக்கு அன்பே சிவமயமாமே
சிவனடிக்கு அன்பு திரிகாலம் அறியும்.

*பவம் = பாவம். சிவஞானம் = மெய்ப்பொருளின் அறிவு. சிவபோகம் = சிவத்தோடு புணருதல். திரிகாலம் = முக்காலம்.*

அடியவர் தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னை எனக்கு என்னாலே அறிவித்த தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பளிக்கும் தெய்வம்
காணாத காட்சியெல்லாம் காட்டுகின்ற தெய்வம்
நெற்றியின் மேல் ஒற்றைக் கண் நேர வைத்த தெய்வம்
பொறி ஐந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
அறிவொன்ற நினைப்பவர் பால் அமர்ந்திருக்கும் தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியொன்றும் இல்லாமற் கூத்தாடுந் தெய்வம்
இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
சித்தத்துட் தித்திக்கும் தெய்வம் இதுதானே.

*ருசிக்கின்ற = இன்பமளிக்கும். என்னாலே = என் ஆத்மாவாலே. அறிவொன்ற = ஆத்ம தண்டோடு அணைந்து. குறி = அடையாளம்.*

ஈசன் இணையடி ஏத்தும் அடியவர்
நாசம் அடைகிலர் நாடுதிடமுடன்
எந்த நேரமும் இறைவன் இணை அடி
சிந்தை செய்பவர் சீவன் முத்தரே.

*அடியவர் = கருவில் மிதித்த இறை அடியைக் கண்டு அறிந்தவர்கள். நாடு திடமுடன் = நம்பிக்கையோடு தேடு. முத்தர் = முத்தி அடைந்தவர்.*

சிறப்புஞ் செல்வமும் தந்த சேவடி
மறப்பிலாதவர் மாள்வதில்லையே.

*சேவடி = ஆத்ம சக்கரத்தில் இணை அடியான அகார எழுத்து. மறப்பிலாதவர் = ஓத மறவாதவர்கள்.*

34 தனக்குத் தான் நிகரான சங்கரன்
துணைப் பதத்தினைத் துதிக்க இன்பமே
கோல மாமலர் கொண்டு போற்றுவார்
பாலர் போலவே பாரில் வாழ்வரே.

*சங்கரன் = சங்கு நாதத்தை ஒலிக்கும் ஆத்மா. பதம் = பாதம். கோலமாமலர் = ஓம் என்னும் உள்ளக் கமலம்.*

சொற்பதங் கடந்த தொல்லோன் வருக
பாரொடு விண்ணாய்ப் பரந்தோன் வருக.

*சொற்பதம் = ஐந்தெழுத்து. தொல்லோன் = ஆதிப்பிரான். பார் = உலகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்தாள் இணைகள் பொலிந்து வாழ்க
கற்றோர் ஏத்துங் கழலடி வாழ்க
என்போல் வந்த இணை அடி வாழ்க
கண் போற் காக்கும் கழலடி வாழ்க
என்றும் என் உள்ளத்தில் இருப்பாய் போற்றி
மன்றுள் ஆடும் மணியே போற்றி
பொன்றும் உடலைப் பொறுக்கேன் போற்றி.

*பொற்தாள் இணைகள் = ஆத்ம சக்கரத்தில் இணை அடிகளாய் நிற்கும் ஒளி மயமான இறைவனின் தாள்கள். மன்று = சித்தாகாசம். பொன்றும் = அழியும்.*

37 நாமஞ் சொல்லுவோம் நமனை வெல்லுவோம்
நாமே அவனென்று நடந்து செல்லுவோம்
சோம சுந்தரன் பாதங் காணுவோம்
சும்மா இருக்கின்ற சூட்சம் பேணுவோம்.

*நாமம் = ஐந்தெழுத்து. சும்மா இருக்கின்ற சூட்சம் = சும்மா இருப்பதற்குத் தான் ஞான திருஷ்டி என்று பெயர். சும்மா இருப்பதாவது மனத்தை ஆத்ம சொரூபத்தில் லயிக்கச் செய்வது. இது ரமண மகரிஷியின் விளக்கம். நான் யார் என்னும் நூல் பார்க்கவும்.*

பார் ஐயனே மனம்பதையாமல் அடியேனை
சேர் ஐயனே உன் செழுங்கழற்கு அடைக்கலம்
ஆர் ஐயனே துணை அடியேற்கு உனையல்லால்
ஊருந் துணையில்லை உற்றார் துணையில்லை
ஆருந் துணையில்லை அடியேன் அடைக்கலம்
சிந்தையில் அன்பு பொருந்த அடியேற்குத்
தந்திடு நின் அருள் தாள் இணைக்கு அடைக்கலம்.

*உனை = உன் ஆத்மாவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. உண்மை முழுதுமென்ற ஒரு மொழியால் இவ்வுலகில்
என்னை மறந்தேனடி குதம்பாய்
இரவு பகலற்றதடி.

*ஒரு மொழி = ஐந்தெழுத்து. என்னை = என் ஆத்மாவை.*

ஊரும் பேருமில்லா ஒரு பொருளைக் கண்டவர்கள்
ஆருக்கும் அஞ்சுவரோ– குதம்பாய்
ஆருக்கும் அஞ்சுவரோ
ஒருவனே தெய்வமெனும் உண்மைதனை சொல்லிவைத்த
குருபரனை மறப்பேனோ – குதம்பாய்
குருபரனை மறப்பேனோ.

*ஒருபொருள் = ஆத்மா. அவன் ஒருவனே தெய்வம்.*

41. சத்தி சிவம் ஒன்றான தன்மையைக் கண்டு விட்டால்
நித்திய வாழ்வாகுமடி குதம்பாய்
நித்திய வாழ்வாகுமடி
தன்னை அறிந்தோர்க்குத் தாழ்வுண்டோ வையகத்தில்
பின்னை இனிப் பேசுவதேன் – குதம்பாய்
பின்னை இனிப் பேசுவதேன்.

*சத்தி சிவம் ஒன்றான = ஆத்மாவும் கருவில் மிதித்த இறைவனின் தாளும் ஒன்றான.*

43. சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்
சிவதொண்டு செய்வார்கள் திசை எட்டும் ஆளுவர்
சிவதொண்டு செய்வார்கள் சென்ம மலம் நீங்குவர்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையும் ஏவல் கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள்
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால உணர்ச்சியுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதொண்டு செய்வார்க்குத் தீய பிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்.

*சிவதொண்டு = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து ஓதுதல். திரிகாலம் = முக்காலமாகிய சென்றகாலம் இப்போ நடக்கின்ற காலம், வருங்காலம்.*

46. அஞ்செழுத்துள்ளே அனைத்தையுங் காட்டி என்
நெஞ்சத்துள் நின்றான் என்று உந்தீபற
நீயே நானானேன் என்றுளு உந்தீபற

*அஞ்செழுத்துள்ளே = ஆத்ம சக்கரத்துள்ளே. நீயே நான் = சிவனே சீவன்.*

அல்லும் பகலும் அறிவாகி நிற்க ஓர்
சொல்லைத் தந்தான் என்று உந்தீபற
தோன்றாத் துணைவன் என்று உந்தீபற

*சொல்லை = ஐந்தெழுத்தை. தோன்றாத் துணைவன் = கண்ணுக்குத் தோற்றாத் துணைவன்.*

சீவன் சிவனென்று தேறித் தெளிந்தார்க்கு
அபாயம் இல்லையென்று உந்தீபற
அன்பே சிவமென்று உந்தீபற

*எமக்குள் ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மாவே இறைவன்.*

49. திங்களுங் கங்கையும் சென்னியிற் தாங்கிய
எங்கள் பெருமான் இணை அடி வாழ்க.

*திங்கள் = ஞானச்சந்திரன். கங்கை = யோகிகள் பருகும் தேனாறு.*

51. பகருவார் நெஞ்சம் பதைக்குமோ பாரில்
நிகரில் இறைவ! நெடிதெய்த்தேன் – பகருற்றேன்
உண்டோ உலகத்து று தெய்வம் நீயல்லால்
உண்டோ துணை வேறிங்கு ஓது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுவார் நெஞ்சில் உதிக்கும் பரஞ்சுடர்
சொல்லிற் கலந்த சுவை அறியாப் பாவியேன்
அல்லும் பகலும் அரற்றுகின்றேன்.

*பகருவார் = ஐந்தெழுத்து ஓதுபவர். நீ = ஆத்மா. சொல்லின் = ஐந்தெழுத்தில்.*

53. என்னை அறிவித்து எனக்கு அருள் செய்தவன்
என்னிலும் வேறலன் உள்ளேயென்றும்
என்னிலும் வேறலன் எல்லாம் வல்லன்
மண்ணினில் வந்தனன் அன்னேயென்னும்.

*என்னை = என் ஆத்மாவை. இறைவன் என்னிலும் வேறல்லன்.*

55. ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய்ப் புறம்புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள் வாழ்க
ஒருமொழி யதனால் என்னை ஓவியம் போல் ஆக்கி
வருபயம் நீக்கியாண்ட வள்ளல் தம் திருத்தாள் வாழ்க.

*நானுமாய் நீயுமாகி = சீவனாய் சிவனுமாகி*

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக் காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்தவன் திருத்தாள் வாழ்க.

*ஓமெனும் = ஐந்தெழுத்துள் அடங்கி நிற்கும் ஓமெனும் முப்பதம். நற்தவன் = நல்ல தவம் செய்பவன்.*

55. ஆக்கை நீயல்லை நீயோ ஆன்மாவென்று எனக்குச் சொல்லி
தீக்கை வைத்து ஆண்டுகொண்ட தேசிகன் திருத்தாள் வாழ்க

*ஆக்கை = உடம்பு. தீக்கை = தீட்சை.*

இருந்து பார் என்று எனக்கோர் இனிய நல்வாக்குத் தந்த
அருந்தவன் என்னும் வல்ல ஆசான் தன் தாள்கள் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து பார் = முறைப்படி இருந்து ஆத்மா இயங்கும் பொழுது கூறும் ஓம் என்னும் வாக்கைக் காட்டித் தந்தான்.

ஊனுமாய் உயிருமாகி உள்ளுமாய் புறம் புமாகி
நானுமாய் நீயுமாகி நடஞ்செயுந் திருத்தாள் வாழ்க.

*ஊனுமாய் = உடலாய். நானுமாய் நீயுமாகி = எனக்குள்ளும் உனக்குள்ளுமாகி சித்தாகாசத்தில் நடனம் புரியும் தாள்.*

ஓமெனும் எழுத்தினுள்ளே உலகெலாம் விளங்கக் காட்டி
நாமென்று சொல்லுகின்ற நற்தவன் திருத்தாள் வாழ்க.

*விந்து நாதத்தில் எழுந்த ஆத்மா இசைக்கும் ஓம் என்னும் திருநாமத்துள்ளே பிரபஞ்சத்தைக் காட்டுகின்றவன் தாள் வாழ்க.*

60. வேதாந்தம் சித்தாந்தஞ் சமமெனத் தெரிவிப்போம்
நாடெங்குஞ் சென்று சிவதொண்டு செய்வோம்
ஆன்மாக்களிடத்தில் அன்பு நாம் பண்ணுவோம்
ஈசனை மறந்தால் வந்திடுந் தொல்லை.

*வேதப்பொருளே சித்துப் பொருளாக இயங்குகின்றது. தொல்லை= சஞ்சலம்.*

65. அன்பே சிவமென்று சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே
நில்லாது இவ்வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுந் நானும் ஒன்று என்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங்கு இல்லையென்று சொல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே அனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாசமாய் எங்குஞ் சொல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவம் = ஆத்மா. சீவன் = சிவன். காயம் = உடம்பு. கோயில் = ஆத்மாவின் இல்லம். நீயும் நானும் = இறைவனும் நானும் ஒரு பொருள்.*

வஞ்சம் பொறாமை கோபம் வைத்திடும் மாந்தர்க்கும்
அஞ்சாதே யென்று அருளை ஈந்திடுஞ் சுதந்திரன்
பித்தன் என்று பலர் பேசிய திறத்தாய்
பெற்றி பிறரால் அறியொணாத் தரத்தாய்.

*சுதந்திரன் = பந்தப்படாதவன். திறத்தாய் = பெருமை உடையவன். தரத்தாய்= தன்மையுள்ளவன்.*

68. பொறிவழியே போய்ப் புகுந்து புலம்பித் திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயே நானென்று உரைத்த
பெரியவனைப் பித்தனெனப் பிறர் பேசும் பெருமானைச்
செறிபொழில் சூழ் நல்லை நகர்த் தேரடியிற் கண்டேனே.

*பொறிவழி = புலன்வழி. நெறிவழி = மெய்ப்பொருளை உணரும் வழி.*

தந்தை தாய் மைந்தர் தமா தாரமென்று அடியேன்
பந்தத்துட் பட்டுப் பாழாகப் போகாமே
சிந்தை தெளிவித்துச் சீரடியார் நடுவைத்த
எந்தை பெருமானை இலங்கு நல்லை கண்டேனே.

*பாழாக = கெட்டு. நடுவைத்த = சுழினைநாடியில் இயங்கச் செய்த.*

மால் அயனுந் தேடி அறியா மலரடிகள்
கோல அருட் குருவாய்க் குவலயத்திலே போந்து
சாலப் பெரும் பகையைத் தான் நீக்கி ஆண்டானை
ஞாலம் புகழுநல்லைத் தேரடியிற் கண்டேனே.

*மால் அயன் = விஷ்ணு, பிரம்மன். மலரடி = கருவில் மிதித்து கமலப் பாதம். பகை = அஞ்ஞானம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையன்றி வேறொன்றுமில்லை யெனச் சொன்ன
அன்னையினும் அன்புடைய ஆசான் அவனிதனிற்
கன்னலொடு செந்நெல் கமுகுகதலி பலா
மன்னு நல்லை மா நகரிற் தேரடியிற் கண்டேனே.

*என்னையன்றி = என்னை இயக்கும் ஐந்தெழுத்துப் பொருளை விட. ஆசான் = சற்குரு. அவன் = உலகம்.*

69. ஓமெனுந் தாரகம் ஒண் முடிசுமந்து
நாமெலாஞ் சிவனடியாரென நவின்று
ஆரறிவாரென ஆசான் தந்த
சீரிய மந்திரஞ் சிந்தையில் செபித்துச்
சிவநெறி வழுவாச் சிவதொண்டன்.

*ஓமெனும் தாரகம் = அகாரம் உகாரம் மகாரம் ஆகிய முப்பதத்தில் நின்று ஓம் என்று உரைக்கும் வஸ்து. மந்திரம் = ஐந்தெழுத்து.*

71. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்த தொண்டன்
பிறவான் இறவான் என்று உந்தீபற
பிரமமே நாமென்று உந்தீபற.

*அறவாழி = பிராணாயாமம் செய்பவன். அந்தணன் தாள் = கருவில் மிதித்த கமலப் பாதம். உந்தீபற = உய்வதற்கு. பிரமமே நாம் = ஆத்மாவே பிரம்மா.*

73. ஆன்மாவை நித்தியமென்று அறிய வரந் தந்திடடா
வீண் பாவனை யெல்லாம் விலக்க அருள் தாடா
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டிடடா
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிடடா.

*நித்தியம் = அழியாத மெய்ப்பொருள். சத்தம் = ஓம் என்னும் சத்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. அகந்தூய்மை வேண்டும் உயர் ஐந்தெழுத்தை நெஞ்சில்
உகந்து உரைக்க வேண்டுமொழியாமற் - சகந்தனிலே
வேள்வியும் வேண்டுமோ வேறாய்க் கடவுள் உண்டோ
தாழ்வுண்டோ தொண்டர் தமக்கு.

*சகம் = உலகம். கடவுளும் ஆன்மாவும் ஒரே பொருள்.*

நாடுவார் நாட்டிலே நல்ல மழை பெய்யுந்
தேடுவார் சிந்தையிலே தித்திக்கும் - பாடுவார்
பாவமெல்லாம் போக்கும் பரஞான மாக்குமே
சீவன் சிவமென்று தெளி.

*தெளி = அறிந்து கொள்.*

வேதாந்தம் சித்தாந்தம் வேறல்ல என்று உலகில்
நாதாந்தங் காட்டும் நமக்கு.

*கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழும் நாதம் முடிவில் வேதாந்தம் காணலாம்.*

75. தளர்ந்து போகாதே குரு சாற்றிய ஞானமொழி
தெளிந்து கொண்டாற் சீவன் சிவனெனக் காணலாம்.

*ஞான மொழி = ஐந்தெழுத்து, பஞ்சாட்சரமந்திரம்..*

76. உண்மை முழுதுமென ஓதும் ஒரு மொழியால்
என்னை மறந்தென் இடர் அகன்றேன் - பின்னை இங்கு
ஓர் ஆச்சரியங் காணேன் அண்ட பிண்ட மெல்லாமே
போச்சுது ஒன்றாகப் புகழ்.

*ஒரு மொழி = ஐந்தெழுத்து*

கன்னலொடு செந்நெல் கதலி கமுகு பலா
மன்னும் இலங்கையில் வாழ் மாந்தர்காள் - இன்னும்
சிவதொண்டன் தொண்டில் மனஞ் செல்லாது இருந்தால்
அவனை ஓம்புவர் ஆர் அறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவதொண்டன் தொண்டு = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதும் தொண்டு.*

82. ஒழுக்கம் விழுப்பந் தரும் தம்பிமாரே
ஓம் என்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
அழுக்காறு அவா வெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே
வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே
பழுத்த அடியருடன் தம்பிமாரே
பாடிப் பணிய வேண்டும் தம்பிமாரே
மூப்பு வந்தடைய முன்னே தம்பிமாரே
முழுதும் அறிய வேண்டும் தம்பிமாரே
நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற் பொருள் தேட வேண்டாந் தம்பிமாரே
ஓதி உணர வேண்டுந் தம்பிமாரே
உய்ய வழி அது காணும் தம்பிமாரே.

*ஒழுக்கம் = மெய்ப்பொருளான ஆத்மாவைச் சார்ந்து வாழுதல். மலரடி = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

83. அண்ணன்மாரே தம்பிமாரே ஆச்சிமாரே கேளீர்
அருமையான தெய்வம் நாங்கள் அதை அறிந்து வாழீர்.

*ஆத்மாவே அருமையான இறைவன்.*

அங்கிங்கு எனாதபடி எங்குஞ் சிவமென்று
அறிந்தடங்கி அகிலத்திலே வாழ்வதுவே நன்று.

*அடங்கி = சமாதி நிலை அடைந்து.*

காணுங் கண்ணிற் கலந்த கண்ணே என்னுஞ் சிவதொண்டர்
கருத்தைக் கண்டு வருத்தமற்று வாழ்தல் சிவதொண்டு

*கண் = நெற்றிக்கண்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் ஒன்றாய் இருக்குதென அறிந்த பெரியோர்கள்
அடி இணையை முடிதனிலே அணிந்து கொண்டேன்
சிறியேன்

*முடி = சென்னி.*

எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் இருப்பவன்
எங்கள் இறைவன் அடி - குதம்பாய்

*சகல தோற்றங்களுக்கும் காரண கர்த்தா ஐந்தெழுத்தின் அகார எழுத்து.*

துள்ளித் திரியும் மனத்தை அடக்கினால்
துரியம் அடைந்திடலாம் - குதம்பாய்

*துரியம் = உடல் உணர்வு அற்ற நிலை.*

தேங்காயில் இளநீர் சேர்ந்திடுந் தன்மை போல்
தெய்வம் இருக்குதடி - குதம்பாய்

*உடம்புள் ஆத்மா இருப்பதை விளக்கி அதுவே இறைவனென்று கூறுகின்றார்.*

85. அல்லலெல்லாம் நீக்கி ஆளாக்க வேண்டுமெடா
எல்லையில்லா இன்பத்திலே எனை இருத்தி வைத்திடடா.

*அல்லல் = துன்பம். எல்லை = அந்தம்.*

அங்கும் இங்கும் ஓடி அலைந்து திரிகிறேனடா
எங்கும் உனைக் காண எனக்கு வரந் தந்திடடா.

*அங்கும் இங்கும் = எல்லா இடமும்.*

86. எனக்குள்ளே நீ யிருக்கும் எழிலைத்தான் காட்டிடடா
உனக்குள்ளே நான் இருக்கும் உண்மையிலே மாட்டிடடா

*எனக்குள்ளே = என் உடம்புக்குள்ளே. நீ = ஆத்மா. உனக்குள்ளே = உன் உடம்புக்குள்ளும் அதேபொருள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாத மந்திரத்தின் பெருமை நீ தந்திடடா
ஆசா பிசாசை அகற்ற வழி காட்டிடடா.

*மந்திரம் – பிராண வாயுவின் உணர்வில் எழும் ஓம் என்னும் இறை நாமம்.*

தான தருமங்கள்தவமும் புரியுங்கள்
ஞான வீடு நமக்கு எளிதாமே.

*ஞான வீடு = ஆத்மாவின் நிரந்தரமான ஆதி இருப்பிடம்.*

ஆவிக்குள் ஆவியாகிய அமலனைச்
சேவிக்க வல்லார் சிவகதி பெறுவார்.

*ஆவி = உயிர். அமலன் = மும்மலத்தையும் அறுத்தவன். சேவிக்க = ஐந்தெழுத்தை ஓதி வணங்க.*

பாவிகள் அறியார் பரம்பொருள் பதமலர்
கூவி அழைமின் கூற்றுவன் வருமுன்.

*பதமலர் = கருவில் மிதித்த கமலப்பாதம். கூவி அழைமின் = அவன் இயங்கும் ஐந்தெழுத்தைக் கூவி அழைமின்.*

பெரியவன் சிறியவன் என்பது பேதைமை
அரிதினும் அரிதே அதனை அறிதல்.

*அதனை = ஐந்தெழுத்தாய் விரியும் கருவில் மிதித்த இறைவனின் பாதம் திருவடி.*

பொறிவழிச் செல்லும் பொல்லா மனத்தை
அறிவால் அடக்கில் ஆனந்தமாமே.

*அறிவால் = ஐந்தெழுத்து இயங்கும் அறிவால்.*

சொல்லாமற் சொன்ன சொல்லின் உறுதி
நல்லோர் அறிந்து நாடுவர் முத்தியே.

*சொல்லு = ஆத்மா உணர்வால் உரைக்கும் ஐந்தெழுத்துச் சொல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானகம் மண்ணகம் வந்து தாழ்ந்திடினுந்
தான் அவனானோன் சஞ்சலம் அடையான்.

*வானுலகம் மண்ணுலகத்தில் விளையும் தீங்குகள் சம்பவித்தாலும் யோகி கலங்கான்.*

அகல நீளங் காண அரியது
பகலும் இரவும் அற்ற பரம் பொருள்.

*பரம்பொருள் = ஆதிப்பொருளான ஆத்மா.*

உயிரெலாந் தன்னுயிர் போல உணர்ந்தோன்
பயிலும் இடமது பரகதியாமே.

*ஐந்தெழுத்தில் இயங்கும் உயிர் ஒன்றே பல உயிர்களாய் இயங்குகின்றன. அது எழும் இடத்தை அறிந்தால் பரகதியாகும்.*

ஒடுங்கு மனத்தில் உண்மை புலப்படும்
படும் பயன் அதுவே பற்று அற்றோர்க்கே.

*ஒடுங்கு மனம் = மனம் கருவில் மிதித்த பாதத்தில் ஒடுங்குவதே உண்மை அறியும் மார்க்கம்.*

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் அறியார்
பல கற்றாலும் பயன் பெற மாட்டார்.

*உலகத்தோடு = மாயையோடு.*

சித்தத்தினுள்ளே தித்திக்குந் தேனைப்
பித்தர் அறிவரோ பேசுமின் பேசுமின்.

*தித்திக்குந் தேன் = தேனைப் போல் இனிமையான உணர்வு, அனுபவம்.*

ஆவதும் அழிவதும் அறியாப் பொருளை
நோவதால் வருபயன் உண்டோ நுவலுமின்.

*அறியாப்பொருள் = ஆத்மா எடுக்கும் தோற்றங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நாளாக நாட்கள் கழிந்தன
பாழுக்கு உழைத்துப் பயன் அற்றேனே

ஆண்டு பலவும் கழிந்தன அப்பனை பூண்டு கொண்டாரும் அதை அறியாமல் பாழுக்கு உழைத்தார்கள்.

ஐந்தெழுத்துள்ளே அனைத்தையுங் கண்டேன்
சஞ்சலந் தீர்ந்தேன் தனிமை பெற்றேனே.

ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்துச் சக்கரத்துள்ளே பிரபஞ்சம் அடங்கி நிற்கின்றது. அதைப் படைத்த இறைவனும் அதற்குள் தான் இருக்கிறான்.

நெஞ்சகம் நின்று நினைக்கும் பொருளைப்
பஞ்சமா பாதகர் பாரினில் அறிந்திலர்.

பொருளை = ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மாவை. பஞ்சமா பாதகம் = கொலை, களவு, பொய், ஏமாற்றல், வஞ்சம்.

அது நானென்னும் அகலாத் தியானத்தால்
மது உண் வண்டுபோல் ஆயினர் பலரே.

மது = மலர்களின் உள்ள தேன்.

போக போக்கியம் எல்லாம் வீண் என
யோக சமாதியில் இருந்து உணர்வாயே.

உலக வாழ்க்கையில் அனுபவிக்கும் ஐம்புலன் அனுபவங்கள் எல்லாம் ஒரு பயனும் அளிக்காது.

என் செயல் யாதொன்று மில்லை யாவும்
உன்செயல் என்றே உணர்ந்தேன் யானே.

எம்மை வாழவைக்கும் அண்ணலாகிய ஆத்மா என் மனத்துக்குச் சொல்லும் செயல்களையே செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டல முழுவதும் மன்னிய பொருளை
கண்டு கொண்டேனே கவலை தீர்ந்தேனே.

*திருக்குறள் = தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது.*

அண்டமும் பிண்டமும் அடங்கலும் அதுவே
தொண்டர்கள் கண்டு துயர் தீர்ந்தாரே.

*பிண்டம் = உடம்பு. தொண்டர் = ஐந்தெழுத்தை ஓதித் தவம் செய்பவர்கள்.*

பண்டை செய்வினையெலாம் பறந்தன பறந்தன
தண்டை அம்மலர்த்தாள் தான் பணிந்தேனே.

*தண்டை = ஆத்ம தண்டாய் நிற்கும் சிவலிங்கத்தை. தாள் = கருவில் மிதித்த இறை அடி.*

நூல் அறிவாளரும் நுணுகியும் அறியார்
மால் அயனொடு மறு தேவரும் அறியார்.

*நூல் அறிவாளர் = புத்தகங்கள் வாசித்து கற்று அறிந்து பட்டம் பெற்ற அறிவாளர்கள். விஷ்ணு பிரம்மன் முதலிய மற்ற தேவரும் ஐந்தெழுத்தில் இயங்கும் மெய்ப் பொருளை இறைவனை அறியார்.*

91. பிறப்பு இறப்பு இல்லாப் பெருமானே நீ
மறப்பில்லாமல் மனனஞ் செய் நாளும்.

*மனனஞ் செய் = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓது.*

சிறப்பும் இதுவே செல்வமும் இதுவே
அறனும் இதுவே அருளும் இதுவே
உறவும் இதுவே உண்மையும் இதுவே
திறனும் இதுவே சித்தியும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அறனும் = ஐந்தெழுத்தை ஓதும் பொருளும். உண்மையும் = மெய்பொருளான இறைவனும்.*

93. இன்றாகி நாளையான் இருப்பானை எப்பொழுதும்
நன்றாக நினைவார்கள் நாடார்கள் பிறபொருளை
அன்தாளின் கீழ் இருந்தங்கு அறம் உரைத்த பெருமானை
பொன்றாத மலர்தூவிப் பொன்னடியைப் போற்றுதுமே.

*கருவில் மிதித்த கமலப் பாதத்திலிருந்து எழுந்த ஐந்தெழுத்தை ஓதித் தியானம் செய்பவர்கள் உலகப் பொருட்களை நாடமாட்டார்கள். வாடாத, அழியாத ஓம் என்னும் உள்ளக் கலத்தை இறை அடிக்குத் தூவி ஒளிமயமான திருவடியை போற்றுங்கள்.*

என் பிழைகள் பொறுப்பானை எங்குமாய் இருப்பானை
அன்பிலரை அடையானை அஞ்செழுத்துப் பொருளானை
நன்மலர்கொண்டு எந்நாளும் நாட்கழித்தல் நலமென்றே
சொன்னவர்தம் திருப்பாதம் தொழுவேனே எந்நாளும்.

*அடையானை = சேராதவனை. நன்மலர் = ஓம் என்னும் உள்ளக் கமலம் சொன்னவர் தனது குருவாகிய செல்லப்பா சுவாமி.*

மந்திரமாய்த் தந்திரமாய் மருந்தாகி விருந்தாகி
எந்திரமாய் என்துணையாய் எல்லாமாய் அல்லவுமாய்
சந்திரனாய் சூரியனாய்ச் சரம் அசரம் யாவுமாய்
எந்தை பிரான் இருந்த நிலை கண்டார்கள் பிறவாரே.

*சகல படைப்புகளுக்கும் காரணகர்த்தாவாகிய ஐந்தெழுத்தில் இயங்கும் மெய்ப்பொருள் கண்டு உணர்ந்தவர்கள் பிறப்பை அறுப்பர்.*

அறநெறியில் வழுவார்கள் அன்பர் பணி மறவார்கள்
பிறவொன்றும் அறியார்கள் பிரியாத சிந்தையரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அறநெறி = தவநெறி. பிறவொன்றும் = உலகப் பொருள்கள்.*

94. இப்பிறவி தீர்ப்பானை இனிப்பிறவாது அருள்வானை
எப்புறப்பும் என்னோடே உடனாக இருந்தானை
ஒப்பிலா ஒருவனாய் ஊழியெல்லாம் நின்றானைச்
செப்புமவர் இனிப்பிறப்போடு இறப்பினையே சேராரே.

*உடனாக = கலந்து. ஊழி = ஊள்வினை. செப்புமவர் = ஐந்தெழுத்து ஓதுபவர்.*

உலகம் உவக்கவும் உன்மனங் களிக்கவும்
கழறும் வாசகம் கரத்தில் இருத்துக
நீ சடப்பொருளல்ல நிறை தரு சித்து
பேச அரிது உன் பெருமை எவராலும்
ஈறிலாப் பொருள் நீ எள்ளளவேனும்
மாறிலா மகிழ்ச்சி மனத்திடைக் கொள்வாய்
நீதியொன்றை நெஞ்சிடை வைத்திடு
அபாயமொன்றும் என்றும் உனக்கில்லை.

*கழறும் வாசகம் = உரைக்கும் ஐந்தெழுத்துச் சொல். சித்து = அறிவு. ஈறு = எல்லை. நீதி = ஆத்மாவின இயக்கம்.*

வஞ்சம் நீக்கி வாழுந் துறவி
அஞ்செழுத்துட் பொருளாகிய அமலனை
நெஞ்சத்துள் வைத்து நீ வணங்குதி
உன்போற் பிறர் இவ்வுலகில் உண்டோ
முன்பு நீ செய்த வல்வினை தீர்ந்திடுந் தியானம்
செய்தினஞ் சீவன் சிவனெயன்றோ.

*அஞ்செழுத்துட்பொருள் = முப்பதத்தில் இயங்கும் "ஓம்" என்னும் இறை நாமம். வல்வினை = பாவம்.*

அப்பனே ஆருயிரே அன்பே என் ஆதரவே
ஒப்பிலா ஒன்றே ஊழியெலாம் ஆனவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பனே = படைத்தவனே.

102. உவமை கடந்த இன்பம் எல்லார்க்கும் உண்டு
தவஞ் செய்வார் தாமறிவார் தப்பார் – சிவனருளை
நோக்கென்றான் நோக்க நொடியளவிலே இன்பம்
தேக்கிற்றேன் சிந்தை தெளிந்து.

உவமை கடந்த = ஒப்பில்லாத நோக்கு =ஆத்மா இயங்குவதை நோக்கித் தியானி.

103. தையலார் மையலிற் தான் மயங்கும் மாந்தர்காள்
வையமெலாம் ஆள மருந்துண்டே – ஐயன்தாள்
காலையொடு மாலை கடல் சூழ் இலங்கையீர்
சாலவே போற்றுவீர் தான்.

தையலார் = பெண்கள். ஐயன்தாள் = இறைவனின் திருவடி

106. எல்லாம் வல்ல இறைவன் திருப்பதம்
சொல்லும் பூக்கொடு தோத்திரஞ் செய்பவர்
கல்லாராயினுங் கதி உண்டு இலங்கையான்
சொல்லைச் சிந்தித்துத் துன்பத்தைத் தீர்மினே.

திருப்பதம் = கருவில் மிதித்த கமலப் பாதம். சொல்லும் பூ = உரைக்கும் “ஓம்” என்னும் உள்ளக் கமலம்.

107. சமய தீக்கையைப் பெற்றுப் பின் சற்குரு
அமையும் அப்பால் அவன் வழி செல்விரால்
தமை உணரும் அறிவு தலைப்படும் இலங்கையான்
சுவை தருஞ் சொல்லைக் கேட்பது தக்கதே.

தீக்கை = தீட்சை ஆத்ம ஞானம். தமை = ஆத்மாவை. சொல்லை = ஐந்தெழுத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பான் காட்சி காட்சிப் பொருளிவை
மாண்பாய் விட்டு மலரடி சிந்தித்தால்
வீண் பாவங்கள் வெருண்டு ஓடும் இலங்கையான்
மாண் பாச் சொன்னது மனத்திடை வைம்மினே.

*காட்சிப் பொருள் = வெளித் தோற்றங்கள். மலரடி = கருவில் மிதித்த கமலப் பாதம். சொன்னது = இறை நாம மாகிய ஐந்தெழுத்து.*

108. அலையும் மனத்தை அடக்கிய பெரியோர்
தொலையாப் பிறவி தொலைத்தார்.

*மனத்தை கருவில் மிதித்த இறை பாதத்தில் அடக்கி சமாதி நிலை அடைந்தால் பிறப்பு அறும்.*

ஆவதும் அழிவதும் ஆன்மாவுக்கு இல்லையெனச்
சேவடி போற்றித் தெளி.

*சேவடி = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

இல்லையென்னாமலே இட்டு இங்கு வாழ்பவர்க்கு
எல்லையில் பேரின்பம் எழும்.

*இட்டு = தான தருமம் செய்து.*

ஊட்டி வளர்க்க ஒருவன் இருக்கவே
வாட்டம் உனக்கேனோ மகிழ்.

*ஒருவன் = உடம்பை படைத்து காத்து வளர்த்தவன் ஆத்மா.*

ஔவியஞ் செல்வம் அனைத்தும் அழிக்குமே
கவ்வி அரன் பாதங் கருது.

*அரன் .பாதம் = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

சங்கரன் தாள் இணை தாம் பணிவார் எய்தும்
இன்பமும் வீடும் எளிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கரன் = சங்கு நாதத்தை ஒலிக்கும் ஆத்மா. தாள் இணை = இணை அடி. கருவில் மிதித்த பாதம்.*

எமன் வரும்முன்னரே எம்மான் தன் பாதம்
தமவெனக் கொள்வார் அஞ்சார்.

*கருவில் மிதித்த சிவனின் பாதம் தனது பாதமெனக் கொள்வார். சீவன்சிவன்.*

மன்றுள்ளே ஆடும் எம் மாமணிதன்னை நீ
என்றும் மனத்துள் இருத்து.

*மன்றுள்ளே = சித்தாகாசப் பரவெளியுள்ளே.*

110. அறம் பொருள் இன்பம் வீடு அளிக்கும்
பரனை நினைந்து என்றும் பாடு.

*பரனை = ஆத்மாவாக நிற்கும் இறைவனை. அறம் = தவம். பொருள் = மெய்ப்பொருள். இன்பம் = பேரின்பம். வீடு = ஆத்மாவின் ஆதி இருப்பிடம்.*

அன்னத்தோடு ஆடை அளிக்கும் ஒருவனை
இன்னோன் என உணர்ந்தோர் யார்.

*அன்னம் = சோறு. ஆடை= உடுப்பு. ஒருவனை= ஆத்மாவை.*

112. மண் தீ கால் வானமெலாம் ஆனார் போலும்
மாசில்லாச் சோதியாய் நின்றார் போலும்
கண்முதலாம் இந்திரியம் ஆனார் போலும்
காண்பவனும் காட்சியும் ஆனார்போலும்
எண்ணில் சமயங்கள் ஆனார் போலும்
என்னை என்னால் அறிவித்த இறைவா போலும்
மண்ணில் இனிப் பிறவாமற் காத்தார் போலும்
மன்னி எம் உள்ளத்தின் உள்நின்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்னை என்னால் = என் ஆத்மாவை என் ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி என்னால்.*

என் இதயம் நீங்காத இறைவன் காண்
அரும்பொன் காண் அம்மை காண் அப்பன் தான் காண்
தன் ஒப்பாரில்லாத தத்துவன் காண்
பிஞ்ஞகன் காண்பிரியாது என் உள்ளத்தானே
எம் பொன்னம்பலத்திலே ஆடுவான் காண்
பெண்ணவன்காண் ஆணவன் காண் பெருமான் தான் காண்
உண்மையன்காண் என் உயிருக்கு உயிரானானே
நிறைசோதிப் பிழம்பவன் காண் நெஞ்சுள்ளானே.

*அரும்பொன் = அருஞ்சோதி. தத்துவன் = மெய்ப் பொருள். பொன்னம்பலம் = ஒளிமயமான சித்தாகாசப் பரவெளி.*

நெற்றிமேற் கண்தோன்றும் மதியந்தோன்றும்
ஆறணிந்த சடைதோன்றம் அம்மை தோன்றும்
ஒளி தோன்றம் ஓங்காரவாசி தோன்றும்
சிவசிவா சீவன் சிவனெனக் கண்டேனே.

*ஆறணிந்த = ஆறுமுகங்களையுடைய. சடை = நெருக்கமான தோற்றங்கள். ஓங்கார வாசி = ஓங்காரத்தில் வசிப்பவன்.*

116. அல்லும் பகலும் சிவநாமத்தைச் சொல்ல வேண்டும்
ஆசை மூன்றையும் அடியோடு கொல்ல வேண்டும்
பொறிவழி போய் மனம் அலையாமை வேண்டும்
பூரணமான் நிஷ்டையும் வேண்டும்
எல்லாரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்
எழில்பெறுஞ் சுழிமுனை வழிச் செல்ல வேண்டும்.

*சிவநாமம் = ஐந்தெழுத்துள் இயங்கும் "ஓம்" என்னும் இறைநாமம். நிஷ்டை = சமாதி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. எல்லாம் நீயென எண்ணுதல் இன்பமே
எல்லாம் நானென எண்ணுதல் இன்பமே
எல்லாம் சிவன் செயல் என்பதும் இன்பமே
எல்லாம் என் செயல் என்பதும் இன்பமே.

*என்னை யன்றி ஈசன் வேறில்லை. என்னைப் படைத்த பொருளே எல்லாமாய் நிற்கிறது.*

123. யாவருக்குஞ் சமமென உணர்ந்திடல் இன்பம்
யாவருஞ் சகோதரர் என்பது இன்பம்
யாவரும் நலனுற உழைத்திடல் இன்பம்
யாவரும் ஒன்றென ஒன்றிடல் இன்பம்.

*நலனுற = நன்மை அடைய. ஒன்றிடல் = ஆத்மாவோடு ஒன்றி நிற்றல்.*

124. பத்தர் சங்கம் பரவுதல் இன்பம்
நற்தவர் சங்கம் நாட்டிடும் இன்பம்
எங்கும் மாதவர் மாமறை முழக்கம்
எங்குஞ் சான்றோர் அறவுரை முழக்கம்
எங்குந் தொண்டர் சுதந்திர முழக்கெனிற்
பொங்கும் இன்பம் புவி மிசைச் சிறந்த
தவநெறி தலைப்படத் தழைத்திடும் இன்பம்
சிவநெறி பூத்திடுஞ் சச்சிதானந்தமே.

*அறவுரை = ஐந்தெழுத்து. பூத்திடும் = சித்தாகாசப் பரவெளியில் ஆத்ம சோதி வெளிப்படும்.*

சிவன் ஒருத்தனே தெய்வமடி தோழி
சென்னியிற் கங்கை பாயுதடி
அவனிடத்தினிற் பெண்ணை நீ பாரடி
எண்ணி எண்ணிக் கடைத்தேறடி
அவன் தன் அகத்தில் நாகமடி பெண்ணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிவன் = சீவன். கங்கை = தேனாறு. பெண்ணை = சக்தியை. எண்ணி எண்ணி = நினைந்து தியானித்து. நாகம் = பிரணவ சொரூபம்.*

125. கொல்லும் நமனை உதைத்தானடி
தூக்கிய பாதத்தின் தோற்றத்தைப் பாரடி
தொந்தோம் தோமென்ற நாதத்தைக் கேளடி
ஆக்கி அழிக்கவும் வல்லவன் அவனடி
மாறிப் புலன் வழி போகாதேயடி
மதிக்குள்ளே ரவி சேர்த்திடடி
ஆறிஇருந்து பாரடி பெண்ணே
அவனை நீ கண்டு தேறடி.

*தூக்கிய பாதம் = கருவில் மிதித்த கமலப் பாதம் எழுந்து ஐந்தெழுத்தாய் விரிந்த தோற்றத்தை, கூத்தை பாரடி.*

சித்தத்துள் நித்தந் தித்திக்கும் தேனடி
தீராப் பிணியைத் தீர்க்கும் மருந்தடி

*மருந்து = யோகிகளுக்கு ஊறும் அமிர்தம்.*

127. ஒரு மொழியால் எந்தன் உள்ளம் உவக்க வைத்த
திருவே என் செல்வமே தெய்வமே கண்வளராய்
ஔவியம் பேசி அழியாமல் வையகத்திற்
தெய்வம் போல் வாழச் செய்வாய் நீ கண்வளராய்.

*ஒரு மொழி = ஐந்தெழுத்துள் இயங்கும் "ஓம்" என்னும் ஒரு மொழி.*

128. யோகம் அறியேன் யான் யோகியரையும் அறியேன்
ஆகுநெறி மற்றொன்று அறியேன் யான் - தேகமிது
வீழ்வதன் முன் உன் விரையார் மலர்தாளைச்
சூழப் பணியாய் தொழுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆகுநெறி = ஓதும் மார்க்கம். மலர்த்தாள் = கருவில் மித்த கமலப் பாதம்.*

அறிவுக்கு அறிவாகி அப்பாலுக்கு அப்பாற்
பிறிவற்று இருக்கும் பெருமான் – நெறி நின்றார்
நீடூழி வாழ்வாரே நீ நான் அவனென்று
பாடுபட மாட்டார் பரிந்து.

*பிறிவற்று = பிரியாமல் கலந்து. பெருமான் = ஆத்மா. நெறி = இயங்கும் வழி.*

129 சென்னிக்கு அணியுன் தாள் சேவித்து நிற்றலே
பண்ணுக்கு அணி உன்னைப் பாடுதலே – கண்ணுக்கு
அணி உன் வடிவு கண்டு ஆனந்தங் கொள்ளல்
பணியை அணிந்தாய் பரம்.

*கருவில் மிதித்த பாதத்தை சென்னிக்கு ஏற்றி அணி. பண் = நாதம்.*

வாய் விட்டுச் சொல்ல வகை எனக்கு இங்கில்லையே
நீ விட்டிடாதே நினை.

*சூக்கமப் பொருளை வாயால் சொல்ல முடியாது.*

நித்தியர் நாமென்னும் நினைவு தடுமாறாமற்
பத்தி பண்ணிப் பாடிப் பணியவா என்மனமே.

*நித்தியர் = அழியாத மெய்ப்பொருள். பத்தி = பக்தி.*

எத்திக்குமாகி என் இதயத்தே வாழும்
தத்துவத்தைக் கண்டு சலிப்பற வா என் மனமே.

*எத்திக்குமாகி = பிரபஞ்சம் முழுதுமாகி. சலிப்பு அற = துன்பம் நீக்க.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமர்கள் போற்றும் ஓங்காரத்து உட்பொருளை
பத்தியோடு பாடிப் பணியவா என்மனமே.

*ஓங்காரத்துட்பொருள் = இறைவன்.*

132. ஆர் அறிவாரென அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியிலே சிங்காரமாய்க் கிடப்பான்
பேரறிவாளன் எனப்பிறர் எவருமோ அறியார்
பித்தனென்று உலகோர் பேசுவார் ஏசுவார்.

*பேரறிவாளன் = பெரும் தத்துவஞானி. பித்தன் = விசரன்.*

சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வது யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே வெய்யில் எறிப்பது யாராலே
கண்ணிணை காண்பது யாராலே காற்றும் அடிப்பது யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே தக்கோர் புகழ்வது யாராலே
பூமி சுழல்வது யாராலே பூக்கள் மலர்வது யாராலே
கால்கள் நடப்பது யாராலே கைகள் எடுப்பது யாராலே
எண்ணிப்பார் நீ அறிவாயே எல்லாஞ் சிவன்செயல் குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே சுவாமி வாக்கிது
தெரிவாயே.

*தூமதி = சந்திரன். விண்மீன் = நட்சத்திரங்கள். சுதந்திரம் = மாயையிலிருந்து விடுதலை பெறுதல்.*

பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
அரியதில் அரியது ஆன்மா அதுதான்
ஒன்றென இரண்டென ஓதவொண்ணாதது
என்றும் இருந்த படியே இருப்பது
இன்பம் படைப்பது துன்பந் துடைப்பது
ஆவதும் அழிவதும் அற்ற மெய்ப்பொருள்
தேவரும் முனிவருந் தேடியுங் காண்கிலர்
அப்படியுள்ளது அடியேன் மனத்திலும்
செப்படி வித்தை செய்து நிற்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் = கருவில் மிதித்த கமலப் பாதத்தை உடையவன். என்மனத்தில் = ஆத்மாவாய் இயங்குகின்றது.

137. தேவனை வேண்டி நின்றால் சீவனே சிவனாய்த் தோன்றும்
இகல்செயும் மனத்தை வென்றே ஈசனை வேண்டி நின்றால்
நிகர் உனக்கு யாருமில்லை நீ இதை அறிந்து மண்ணில்
இகலுடன் வாழுவாயே இது திடம் அறிகுவாயே
பிறிவற நின்று பார்த்தாற் பிரமமே நீயும் நானும்
இன்றென நாளையென்றே எண்ணுதற்கு இடமேயில்லை
அன்றுசெய் வினையினாலே அவனியிற் பிறந்தோமென்று
கன்றினைப் பிரிந்த கற்றாக் கடுப்பவே கதறுகின்றோம்
மன்றினின்று ஆடும் ஈசன் மலரடி வாழ்த்துவோமே.

பிறிவற = உடல் உணர்வில் நின்று பிரிந்து நின்ற. மன்று = சித்தாகாசப் பரவெளி திருநாமத்தைச் செபித்திடடா.

139. அனைத்துயிரும் நீயே தம்பி
அதை அறிந்து வாழ்ந்திடடா
தினைத்துணையும் மறந்திடாமல்
திருநாமத்தைச் செபித்திடடா.

திருநாமம் = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்துள் வெளிப்படும் "ஓம்" என்னும் மகாமந்திரம்.

வினைப் பகையை வென்றிடுவாய்
வேறு பொருள் இல்லையடா.

ஐந்தெழுத்தில் இயங்கும் மெய்ப்பொருளைவிட வேறு பொருள் இல்லை. இதுவே இறைப்பொருள்.

உனைப்போலே உத்தமர்கள்
உலகத்தினில் இல்லையடா
நினைத்தபடி நடந்திடடா
நிட்டையிலே பொருந்திடடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனைப்போலே = உன் ஆத்மாவைப் போலே. நிட்டை = சமாதி.

ஆவதில்லா அழிவதில்லா
ஆன்மாவை அறிந்திடடா
ஒரு பொல்லாப்பும் இல்லைத் தம்பி
உண்மையே முழுதுமடா.

*ஆன்மா பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை. அது படைத்த தோற்றங்களே பிறப்பதும் அழிவதுமாய் நிற்கின்றது. ஆன்மாவாய் நிற்கும் ஒரு பொருளே இவ்வுலகில் உண்மை.*

140. காணுங் கண்ணிற்கலந்து நிற்பது
கடவுள் கண்டீரோ
ஆணும் பெண்ணும் அலியுமானது
அது நீர் குறியீரோ.

*காணுங்கண் = நெற்றிக்கண்.*

பாரும் விண்ணும் ஆகி நிற்பது
அது நீர் பாரீரோ.

*தானெ திசையொடு தேவருமாய் நிற்கும்*
*தானே கடல்மலை ஆதியுமாய் நிற்கும்*
*தானே உடல் உயிர் தத்துவமாய் நிற்கும்*
*தானே உலகிற் தலைவனுமாமே - திருமந்திரம்.*

142. தாவித் தாவிச் செல்லும் மனத்தைத் தம்பி கேளடா
கூவிக் கூவி அழைத்துக் கூடக் குடியிருத்தடா
சிவமே நாமென்று தினஞ் சிந்தை செய்யடா.

*தாவித் தாவி = ஒரு எண்ணத்திலிருந்து மற்ற எண்ணத்துக்கு மாறி மாறி. கூவிக் கூவி = ஓம் என்னும் நாதத்தை கூவி ஓதி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லையென
முன்னைப் பெரியோர் மொழிந்தனரால் - தென்னைபனை
சேர் இலங்கை வாழுஞ் சிவநேயச் செல்வர்காள்
தேரீர் இச்சீவன் சிவம்.

திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் - 2355

2355 தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்த பின்
தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.

143 அன்பே சிவம் அறிந்திடடா
அதுவே நாமெனத் தெரிந்திடடா
என்பு உருகப் பாடிடடா
எழுந்திரடா நடந்து வாடா
எல்லாம் சிவரூபமடா
வீணாசையை விட்டிடடா
கண்ணைப் போலக் காத்திடடா
கருமத்தைச் செய்திடடா
தன்னைத் தன்னால் அறிந்திடடா
தானே தானென்று இருந்திடடா

*சிவரூபம் = ஆன்மா சிவரூபம். சீவன் சிவன். கருமம் = தவம் செய்வதே தம் கருமம். தவம் செய்வார் தம் கருமம் செய்வார் = திருக்குறள்.*

144 மார்க்கம் சன்மார்க்கம்
மகரிஜிகள் கண்ட மார்க்கம்.

*சன்மார்க்கம் = மெய்ப்பொருளை இறைவனை உணரும் நெறி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்க்கமான குணம் போக்கும்
முழுதும் உண்மையென ஆக்கும்.

*மூர்க்கமான = ஐம்புலன் வழி செல்லும் மார்க்கம்.*

பார்க்கப் பார்க்க இன்பந் தேக்கும்
பரமானந்த நிலையை நோக்கும்.

*பார்க்கப் பார்க்க = ஆத்ம சொரூபத்தைப் பார்க்கப் பார்க்க.*

ஆர்க்கும் சுதந்திரத்தை யாக்கும்
அனைவரையும் முத்தியிலே சேர்க்கும்.

*சுதந்திரம் = மும்மலமற்றநிலை.*

பக்திசெய் யோகசுவாமி பாட்டு
படிப்பவர்க்கு நல்ல வழி காட்டும்.

*யோகசுவாமியின் அறிவுரைகளைப் படித்து பக்தி செய்வோர்க்கு இறைவனை உணரும் வழி காட்டும்.*

தீர்த்தங்கள் ஆடினேன் யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்ன நான் செய்வேன்.

*சித்தம் தெளிவதற்கு ஆத்ம ஞானம் பெற வேண்டும்.*

பார்த்த இடமெங்கும் நீ யல்லாது இல்லை
பாராமல் நானும் பட்டேன் தொல்லை
காத்து எனை ஆள்வது உன்தன் கடமை
கருணைக் கடலே நான் உன் உடைமை.

*ஆத்ம சக்கரமே சகல படைப்புகளுக்கும் காரண கர்த்தா.*

பக்தி செய் யோக சுவாமி பாட்டைப்
பாடிப் படிப்பவர் பல்லூழி காலம்
உத்தமராக உலகினில் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகன் சேவடி விரவி .
கூத்தாடுதே மனம் என்ன கொடுமை.
*உத்தமராக = சீவன் சிவனாக.*

145 திங்கட்சடையாய் எங்களை உடையாய் சிவனே ஓம்
சீரிய அடியார் சிந்தையில் உறையும் செல்வா ஓம்
மண்ணும் விண்ணும் ஒன்றாய் விளங்கும் மணியே ஓம்
ஆருயிர் எல்லாம் நீயேயாகி அமர்ந்தாய் ஓம்
கருதும் நல்ல அடியரை என்றுங் காப்பாய் ஓம்.
*கருதும் = ஆத்ம சொரூபத்தில் மனதை பதித்து நிற்கும்.*

சீவன் சிவனாய் பாவனை செய்வார் திருவே ஓம்
கூடிக் கூடி உனஅடி பாடல் கொடுப்பாய் ஓம்
பேசப் பேச இன்பம் பெருகும் பிரானே ஓம்
அறையார் கழலே அல்லாற் சிறியேன் அறியேன் ஓம்.
*அடிபாடல் = ஓம். பேசப் பேச = ஓத ஓத.*

146 பொல்லா வினைகள் போகும் வண்ணம் புரிவாய் ஓம்
பூவார் மலர் கொண்டு அடியார் போற்றும் பொருளே ஓம்.
*பூவார் மலர் = பூக்காத ஓம் என்னும் மலர்.*

தேறித் தெளிவார் சிந்தையில் ஊறும் அமுதே ஓம்
நீற்றொடு பொலியும் நெற்றிக் கண்ணா நிமலா ஓம்
நீதி வழுவா மாதவர் தங்கள் நெறியே ஓம்.
*நீற்றொடு = சித்தாகாசத்தில் வெண் நீற்று வெளியில். நெற்றிக் கண்ணா = நெற்றிக் கண்ணில் சோதியாய் விளங்குவன். நீதி வழுவா = ஐந்தெழுத்துள் ஓம் இயங்கும் வழி.*

147 ஓங்கார மேடையின் மேலேறி நின்றேன்
ஒன்றையுங் காணேனடி - குதம்பாய்
*ஓங்கார மேடை = சித்தாகாசப் பரவெளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்காமல் தூங்குஞ் சுகம் வந்து வாய்த்தது
சும்மா இருந்தேனடி = குதம்பாய்.

*ஆத்ம சொரூபத்தில் மனத்தைப் பதித்து நிற்பதே சும்மா இருத்தல்.*

ஆங்காரம் போச்சுது ஆனந்தம் போச்சுது
அவனே நானானேனடி – குதம்பாய்

*அவனே நான் = சிவனே சீவன்.*

148 நீங்காத நின்மல நிஷ்டை பலித்தது
நீ நான் இல்லையடி = குதம்பாய்

*நிஷ்டை = சமாதிநிலை.*

கண்ணுக்குக் கண்ணாயிருக்கின்ற கர்த்தனைக்
கண்டு களித்தேனடி – குதம்பாய்

*கண்ணுக்குக் கண் = நெற்றிக் கண்ணில் வெளிப்படும் ஆத்மசோதி.*

தன்னைத் தன்னால் அறிய வேண்டும்
சாந்தம் பொறுமை உன்னில் தோன்றும்
பின்னை உனக்குத் துணை நீயே.

*தன்னைத் தன்னால் = தன் ஆத்மாவை ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி அறிய வேண்டும். உன்னைப் படைத்துக் காத்து வளர்த்த பொருளே உனக்குத் துணை*

150 தன்னை அறிந்தார் தலையாவர் தாரணியில்
பின்னை அவர்க்கு இல்லைப் பிறப்பு.

*தன்னை அறிந்தவர் = தன் ஆத்மாவை உணர்ந்தவர்.*

மூன்றும் ஒன்றான மறைமை அறிந்தவரே
ஆன்றோர்; அவரை அறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அகாரம், உகாரம், மகாரமாகிய மூவெழுத்து அகாரத்தில் ஒடுங்கல்.*

கும்பிடுவார் தம் மனத்தைக் கோயிலாய்க் கொண்டுள்ள
தம்பிரான் தானே தலை.

*தம்பிரான் = தன் ஆத்மா.*

தலையில் இரந்துண்ணும் தம்பிரான் தன்னை
அலையா மனத்தால் அறி.

*அமுதத்தை அளிக்கும் ஆத்மாவை உன்னுள் அறி.*

எல்லார் அகத்தும் இருந்து நான் நானென்று
சொல்வானைக் கண்டு சுகி.

*நான் நான் என்று சொல்லும் ஆத்மாவைக் கண்டு சுகி.*

நித்திரையை நீக்கி நினைவாக நிற்பவர்க்குக்
கர்த்தன் அருள் மேவுமெனக் காண்.

*ஆத்ம நினைவில் இருப்பவர்க்கே அவன் அருள் புரிவான்.*

151 மண்டலம் மூன்றும் மருவி நின்ற மெய்ப்பொருளைக்
கண்டு களிப்பாரைக் காண்.

*மண்டலம் மூன்று = அகாரம் உகாரம் மகாரம். மெய்ப்பொருள் = ஆத்மா.*

காணுகின்ற கண்ணிற் கலந்த பெருமானே
நான் நீ அவனென்று அறி.

*காணுகின்ற கண் = நெற்றிக் கண்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றன வாழ்நாட்கள் என்று நீ தேம்பாதே
என்றென்றும் உள்ளாய் இணங்கு.
*ஆத்மா ஒருக்காலும் அழியாது.*

மந்திரமுந் தந்திரமும் வேண்டாம் அகத்துக்குள்
சுந்தரத்தாளே துணை.
*அகத்துள் = நெஞ்சுக்குள். சுந்தரத்தாள் = ஒளிமயமான கருவில் மிதித்த கமலப் பாதம்.*

152 நல்ல சமயமிது தம்பி
நம்மை நாம் அறிந்து கொள்ளத் தம்பி.
*நல்ல சமயம் = உடம்புள் உயிர்நிற்கும் பொழுது.*

எல்லார்க்கும் நன்மை செய் தம்பி
இறைவன் உன்னிடம் உண்டு தம்பி.
*சிவன் சீவனாய் உனக்குள் இருக்கிறான்.*

கண்ணல்லக் காதல்லத் தம்பி
கண்ணுக்குக் கண்ணெடா தம்பி.
*கண்ணுக்குக் கண் = நெற்றிக் கண்.*

எண்ணில் அடங்காதெடா தம்பி
எல்லாம் அதுவெடா தம்பி.
*அகார முதலாய் அனைத்துமாய் நிற்கும்.*

மண்ணாசை வையாதே தம்பி
மற்றிரண்டும் அப்படியே தம்பி.
*மற்றிரண்டும் = பெண்ணாசை பொன்னாசை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம் பிரமாஸ்மி என்று தம்பி
அனுதினமும் சாதனை செய் தம்பி.
*நெஞ்சுள் இயங்கும் ஆத்மாவே பிரம்மன்.*

இகலோகம் பரலோகம் தம்பி
இங்கே நீ கண்டு கொள்வாய் தம்பி
*பரலோகம் = விண்ணுலகம்.*

153 பஞ்சம் படை வந்த போது - வேல் வேல்
பரமன் திருப்பெயர் தப்பாமல் ஓது
நஞ்சைப் போல் பிறன் பொருள் எண்ணு - வேல்வேல்
நாங்கள் சிவமென நாளும் நீ நண்ணு.
*திருப்பெயர் = ஐந்தெழுத்துள் அடங்கி நிற்கும் ஓம் என்னும் இறைநாமம். சீவன் சிவன்.*

154 சிவனடியைச் சிந்தை செய்வோமே - இந்தச்
சீவன் சிவனென்று தெளிந்து கொள்வோமே.
*சிவனடி = கருவில் மிதித்த கமலப் பாதம். அகார எழுத்து.*

அவன் அருளாலே அவன் தாள் - நாங்கள்
ஆராதனை செய்து சீராய் வாழ்வோமே.
*அவன்தாள் = கருவில் மிதித்த கமலப்பாதம்.*

உவமை கடந்த பேரின்பம் - எங்கள்
உள்ளத்தில் உண்டு ஒரு பொல்லாப்புமில்லை.
*உள்ளத்தில் உண்டு = ஆத்மாவுள் ஓம் உண்டு.*

158 ஆசை வலையிற் சிக்கி ஆண்டவனை நீ மறந்தாய்
ஊரும் பேரும் இல்லாத உத்தமனைச் சித்தத்தில்
சேரும் வண்ணம் நாள்தோறும் - தங்கமே தியானம்
செய்து வாழ்வமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தியானம் செய்து = ஓம் என்னும் இறைநாமம் ஓதி.*

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் ஈசனென்று
சொன்ன திருவாக்கே தங்கமே சுந்தரமென்றெண்ணி
இரு.

*திருவாக்கு = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து.*

159 ஏழுலகும் தொழுதேத்தும் எம்பெருமான் திருவடியை
நாளும் மறவாதே - தங்கமே நானுமில்லை. நீயுமில்லை.

*கருவில் மிதித்த கமலப் பாதமே நானுமாய் நீயுமாய் எல்லாமாய் நிற்கிறது.*

ஒன்பது வாயிலுள்ள உடம்பு சிவன்கோயில்
என்பதை மறந்திடாதே தங்கமே ஆட்சி செய்ய வேண்டாமடி.

*எமது உடம்புக்குள் சிவன் குடி இருக்கிறான்.*

ஓதுவது ஒழியேல் என்ற உண்மையை நீ மறவாதே
ஏதுக்கும் அஞ்சாதே - தங்கமே ஏத்தி ஏத்திப்பணிந்திடடி

*ஓதுவது = ஐந்தெழுத்தை ஓதுவது. ஏத்தி = ஓமெனும் முப்பதத்தை ஏத்தி.*

ஔவியம் பேசாதே ஆவியுள்ள மட்டும் நீ
தெய்வம் ஒருவனென்று - தங்கமே திடமுடன் வாழ்ந்திடடி

*ஔவியம் = பொய். ஆவி = பிராண வாயு.*

அஃகமும் காசுந் தேடி அம்புவியில் அலையாதே
வெஃகாதே பிறன் பொருளைத் தங்கமே வீடு உனக்குச்
சொந்தமடி.

*அம்புவி = உலகம். வெஃகாதே= ஆசைப்படாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே நீ நீயே நான்
ஊனே நீ உயிரே நீ
மீனே நீ வெண்மதி நீ
கானே நீ கடலே நீ
ஊனே நீ உடையே நீ
பொன்னே நீ பொருளே நீ
எண்ணே நீ எழுத்தே நீ
பூதம் நீ பொறியும் நீ
வேதம் நீ வேதியன் நீ
ஆதலால் அறிவார் யார்.

*மீன் = நட்சத்திரம். வேதியன் = வேதப்பொருளை உடம்புள் உணர்ந்தவன்.*

162 வேடிக்கை செய்கிறான் கூட இருக்கிறான்
வேறாய் இருப்பது போல் பாசாங்கு பண்ணுகிறான்
ஓடும் இருநிதியும் ஒன்றாகக் காண்கிறான்

*கூட இருக்கிறான்= உடம்புள் இருக்கின்றான். அவனே நான் நானே அவன் வேறல்ல.*

அங்கும் இங்கும் எங்குந் திருக்கூத்து – அடடா
அதை அறிதல் பத்தரைப் பொன் மாற்று.

*ஆத்மா பொன் போல் ஒளிமயமானது.*

பொங்கிவரும் காமமே கூற்று – அடடா
புலன் வழியில் போகாமல் தேற்று.

*ஆசைகளே உலகக் கூற்றுக்குக் கால்.*

இடை பிங்கலை இரண்டும் சேர்த்து – அடடா
எழிலான சுழிமுனைக்குள் ஏற்று.

*இடைபிங்கலை நாடிகளில் ஓடும் வாயுவை சுழுமுனையில் ஏற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கி வரும் அமிர்தத்தை உண்டு - அடடா
பூரண நிட்டையிற் சேர் நன்று.

*பூரண நிட்டை = சமாதி.*

மங்களகரமாக வாழ்த்து - அடடா
மௌன நிலையிலே ஆழ்த்து.

*மவுன நிலை = சமாதி.*

சங்கரன் திருப்பாதம் போற்று - அடடா
சாயுச்சியப் பதவியில் ஏற்று.

*சங்கரன் = சங்குநாதம் ஒலிக்கும் ஆத்மா.*

163 வருவார் வருவார் வரம் தருவார் சுவாமி
வஞ்சம் பொறாமை கோபம் நெஞ்சினில் நீ வையாதே.

*சுவாமி = ஆத்மா.*

கருமத்தைச் செய் பலன் கருதாமல் உலகத்தில்
காயமே கோயிலாய்க் கண்டு வணக்கம் செய்.

*காயமே = உன் உடம்பே.*

தரும நெறி பிசகாமல் தாரணிதனில் வாழ்
தன்னைத் தன்னால் அறியத் தியானத்தில் நீ மூழ்கு.

*தாரணி = உலகம். தியானம்= ஆத்ம சொரூபத்தில் மனத்தை பதித்து தியானம் செய்தல்.*

166 உவமானங் கடந்த கடவுள் - கேண்மின்
உள்ளத்திருக்க ஊரெல்லாம் ஓடி

*ஆத்மாவுக்கு ஒப்பான உவமை இல்லை.*

அவமானப் படுவதில் கண்ட - லாபம்
அகிலத்திலுண்டோ அறிமின் தெளிமின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமின் = ஆத்மாவை அறியுங்கள்.

தவஞ்செய்து தன்னைத் தன்னாலே - கேளும்
தான் அறியும் சலாக்கியம் உண்டே.

தவம் = ஆத்மாவில் தியானம் பண்ணுதல்.

அவனிவன் என்றதை நீக்கி - யாவும்
அவனாய் இருப்பதைத் தேக்கி.

அவன் = அரன். இவன் = ஆத்மா.

சிவனடியாருடன் கூடி - உங்கள்
சித்தந் தெளிந்திட நாடி.

சிவனடியார் = கருவில் மிதித்த பாதத்தைக் கண்டவர்கள்.

கவனமாய்க் கருமத்தை ஆற்றி - கேளும்
காலையும் மாலையும் போற்றி.

கருமம் = ஐந்தெழுத்தை ஓதுதல்.

சிவசிவ என்று தினம்பாடி - உங்கள்
சித்தந் தெளிந்திடத் தேடி.

சிவசிவ என்று = ஓம் ஓம் என்று சிவ நாமத்தை ஓதி.

167 பாட அறியான் பலகலையுந் தானறியான்
தேட அறியான் சிவயோகன் - நாடறியப்
பிச்சைச் சோறு உண்டு பிறவிப் பிணி தீர்த்தான்
அச்சம் இவற்கு இல்லை அறி.

பிறவிப் பிணி = பிறப்பதும் இறப்பதுமாய் நிற்கும் பிணி.
அச்சம் = இறப்புக்குப் பயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவாய் பயனிலைகள் இல்லாமற் பாடித்
தொழுவான் சிவயோகன் சொல்லின் - அழுவான்
விழுவான் விதிர் விதிர்ப்பான் ஆரறிவார் என்று
தழுவுவான் தன்னை உன்னித் தான்.

*சூக்குமப் பொருளான ஐந்தெழுத்துக்கு எழுவாய் பயனிலை இல்லை. தழுவுவான் = ஆத்மாவைக் கட்டிப் பிடிப்பான்.*

168 ஒரு மொழியாலே உணர்தற்கு வைத்தான்
கரு வழியை மீறினோன் காண்.

*ஒரு மொழி = அகார எழுத்தில் எழுந்த ஐந்தெழுத்து மொழி.*

169 தேரடியில் எந்நாளும் இருப்பான் - ஆசான்
தெருவாலே வருவாரைப் போவாரை வைவான்

*ஆசான் = சற்குரு. வைவான் = ஏசுவான்.*

169 பாவலர் நாவலர்கள் தாமும் - ஆசான்
பரிபாஷை அறியாமல் பதறியே போவார்

*பாவலர் = பாட வல்லமையுள்ளவர்கள். நாவலர் = நாவன்மையுள்ள பேச்சாளர். பரிபாஷை = பக்குவம்.*

170 நம்மிடம் எல்லா நலனும் உண்டு
நம்மிடம் எல்லா உலகமும் உண்டு
நம்மிடம் எல்லாக் கலகமும் உண்டு
நம்மிடம் எம்மைக் காண்பது தொண்டு.

*நம்மிடம் = எமக்குள்ளே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரம் =

“ தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமுமாகி அழித்தவள்
தானே அனைத்துள அண்ட சகலமே ”

*ஆத்மாவை உணர்வதே சிவத்தொண்டு.*

நம்மிடம் என்றுங் கடவுள் உண்டு
நம்மிடம் நன்மை தீமை உண்டு
நம்மிடம் பிறப்பும் இறப்பும் உண்டு
நம்மிடம் நரகமோட்சமும் உண்டு.

*நம்மிடம் = எம் உடம்புள். கடவுள் = ஆத்மாவுள்.*

தன்னைத் தன்னால் அறிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் பணிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் பிறிவார் சான்றோர்
தன்னைத் தன்னால் தேடுவார் சான்றோர்

*தன்னை = தன் ஆத்மாவை.*

*தன்னால் = தன் ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி.*

கண்ணைக் கண்ணால் பார்ப்பார் சான்றோர்
பண்ணைப் பாடிப் பணிவார் சான்றோர்
விண்ணை நோக்கி விழிப்பார் சான்றோர்
மண்ணைக் கிண்டி வாழ்வார் சான்றோர்.

*கண்ணை = நெற்றிக் கண்ணை. பண் = நாதம். விழிப்பார் = தவம் செய்து உணருவார்.*

172 ஆண்டவன் திருவடி வேண்டிக் கொண்டால் என்றும் ஆறுதல் உண்டாகும்.

*திருவடி = கருவில் மிதித்த கமலப்பாதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதெல்லாம் நிலையன்று எனக் காட்டும்
காயத்தை வெல்லும் உபாயத்தை ஊட்டும்
பஞ்சப் புலன் வழிபோம் மனத்தினை வெல்லும்
பஞ்சாட்சரத்தை அனுதினஞ் சொல்லும்
பொன்னாசை மண்ணாசை பெண்ணாசை போக்கும்
வெட்டவெளியிலே நின்று இடர் தீர்க்கும்
வேதாந்த சித்தாந்தம் ஒன்று என்று நோக்கும்.

*பஞ்சாட்சரம் = ஐந்தெழுத்து.*

சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தரமான வழிதனைக் காட்டும்
ஆவி உள்ளளவும் அமுதத்தை ஊட்டும்
அகம் பிரமாஸ்மியென முடிசூட்டும்.

*வழி = ஆத்மா இயங்கும் வழி.*

173 ஐயப்படாதே தெய்வம் உன்னிடம் உண்டு.

*தெய்வம் = உன் ஆத்மா.*

174 நித்தியம் நாம் என்று சொன்னால் நினைக்கிறோமில்லை
நீ நான் அவன் என்று சண்டை போட்டுக் கொள்ளுகிறோம்
பத்தி செய்து வாழ வழி தேடுகிறோமில்லை
பத்தர் இனத்தோடு நாம் கூடுகிறோமில்லை.

*பத்தி செய்து = ஐந்தெழுத்தை ஓதி. பத்தர் = ஆத்ம தியானம் செய்பவர்.*

எத்திசைக்கும் ஈசன் என்று எண்ணுகிறோமில்லை
இரப்பவர்க்கு ஈயாமல் தேடுகிறோம் ஐயே
முத்திக்கு வழி தேட முயல்கிறோமில்லை
மூவாசையாலே மனம் கோணுகிறோம் ஐயே.

*முத்தி நிலை = ஆணவம் கர்மம் மாயை அற்ற நிலை. மூவாசை = மண் பெண் பொன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை அன்போடு நாம் கும்பிட மாட்டோம்
கூக்குரல் போட்டு நாம் கும்பிட்டுக் கொள்ளுவோம்
தளர்ந்து போன அடியவரைத் தாங்குகிறோமில்லை
சற்குருபாதத்தை வணங்குகிறோமில்லை
விதியினை வெல்ல வழி காண்கிறோமில்லை
கண்ணுக்குக் கண்ணை நாம் காண்கிறோமில்லை
காதுக்குக் காது தன்னைக் கருதுகிறோமில்லை.

*தளர்ந்து போன = வறுமைப்பட்ட. கண்ணுக்குக் கண் = நெற்றிக் கண். காதுக்குக்காது = நாதலோகத்து இசை கேட்கும் காது.*

174 அலங்காரமாக ஆடை அணிந்து கொள்ளுவோம்
அங்கும் இங்கும் நாம் திரிந்து அலைகிறோம்
கலங்காத நன்நெறியிற் செல்கிறோமில்லை
கந்தா முருகா என்று கத்திக் கொள்ளுவோம்.

*நன்நெறி = சன்மார்க்கம்.*

## யோகநெறி

176 இடை பிங்கலை என்னும்
இரு வாசல் அடைத்து விட்டுக்
கடையிற் சுழுமுனையைக் கபாலம் திறந்து கொண்டு
தங்கமே
காசி தேசம் போவோம் வாராய்

*காசி தேசம் = பரமவெளி.*

நாசி நுனியிலே நாட்டத்தை வைத்துவிட்டு
வாசிக் குதிரையேறித் - தங்கமே
மாறிமாறி சிமிட்டாக் கொடு.

*வாசிக்குதிரை = சுழுனை நாடி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசுகவி மதுரகவி அழகான சித்ரகவி
பேசுந்திறம் உண்டாகும் தங்கமே
பிராணாயாமம் செய்திடெடி.

*பிராணாயாமம் = ஐந்தெழுத்து ஓதுதல்.*

எட்டுத்தரம் உஸ் வாசித்து
எண்ணெட்டுத் தரம் நிறுத்தி
எண்ணிரண்டு நிஸ்வாசஞ் செய் - தங்கமே
இ:்தோர் வகைப் பிராணாயாமம்.

*உஸ்வாசித்து = பிராணவாயுவை புகுத்தி.*
*நிஸ்வாசம் = புறப்படாமல்.*

பாலும் பழமுந் தின்று பகல் நித்திரையைத் தள்ளு
பாலனைப் போல் தேசு உண்டாகும் -தங்கமே
பரமனை நீ பத்தி செய்வாய்.

*பத்தி = தியானம்.*

176 இரவு பகல் இல்லாத ஏகாந்த வீட்டினிலே
பரவிப் பணிந்திடெடி - தங்கமே
பாரும் விண்ணும் உன் கைவசம்.

*ஏகாந்த வீடு = தில்லைவெளியில் சமாதிநிலை.*

ஆறு படி தாண்டு அப்பாலே வெள்ளிப்படி
அதுவும் நீ தாண்டி விட்டால் - தங்கமே
ஆர் உனக்கு நிகர் ஆவார்.

*ஆறுபடி = மூலாதாரம், சிவஸ்தித்தானம் மணிப்புரம், அநகத்த விசுத்த அஞ்ஞை.*

சீமானைப் போலிருந்து செகத்தினிலே வாழ்ந்திடலாம்
ஓம் ஆம் நாமென்று சொல்லி - தங்கமே
உருவேற்றி நின்றிடெடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஓம் = ஆத்மா முப்பதத்தில் நின்று உரைக்கும் இறைநாமம்.*

உருவேறவே செபித்து ஓங்காரக் கம்பத்திலே
திருவேற நின்றிடெடி - தங்கமே
சீவன் சிவன் ஆச்சுதடி.

*செபித்து = ஓம் என்னும் இறை நாமத்தை உரைத்து. கம்பும் = ஆத்ம தண்டு.*

178 மறந்தாலும் பிறந்தாலும் மாண்டாலும் இருந்தாலும்
மறவாத தெய்வமெடி - தங்கமே
மற்றொன்றும் அஞ்சாதேயெடி.

*மறவாத தெய்வம் = ஐந்தெழுத்தில் விடாமல் இயங்கும் ஆத்மா.*

நாமுமே நாமாக நமக்குள்ளும் நாமாகத்
தாமுமே தாமாகத் - தங்கமே
தனித்திருந்து பார்த்திடெடி.

*தனித்திருந்து தன் ஆத்மாவின் இயக்கத்தைப் பாரடி.*

ஒன்றாய் இரண்டாகி ஒரு மூன்றாய் நான்கு ஐந்தாய்
நின்ற பராபரத்தைத் - தங்கமே
நீயென்று உணர்ந்திடெடி.

*ஓரெழுத்தில், ஈரெழுத்தில், மூவெழுத்தில், நாலெழுத்தில் இயங்கும் அகார எழுத்திலிருந்து எழும் சத்தி நீயென்று உணர்.*

மண்டலங்கள் மூன்றினிலும் மருவி நின்ற மெய்ப்பொருளை
கண்டவர்கள் சொல்லாரெடி - தங்கமே
காட்சியெல்லாங் கடந்ததெடி.

*மண்டலம் மூன்று = அகாரம், உகாரம், மகாரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179 முழுதும் உண்மை ஆச்சுதெடி முச்சுப் பேச்சு போச்சுதெடி
பழுதின்றி வாய்ச்சுதெடி - தங்கமே
பாராமற் பார்த்திடெடி.

*சமாதி நிலையின் தன்மை.*

முன்னை வினை வந்து மூண்டுதே என்பார்கள்
தன்னை அறியாதார் - தங்கமே
சஞ்சலத்தை நீக்கிவிடு.

*தன்னை அறியாதார் = தன் ஆத்மாவை அறியாதவர்.*

சஞ்சலத்தை நீக்கிவிடு தாமரைத் தாள்க்கு அபயம் புகு
நெஞ்சில் வஞ்சம்வையாதே - தங்கமே
நித்தியம் உன் வீடாம் அறி.

*தாமரைத்தாள் = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

பொன்னின் குடத்துக்கெவர் பொட்டிட்டுப் பார்த்திடுவர்
உன்னை மறவாதே - தங்கமே
ஊரூராய்த் திரியாதே.

*உன்னை - உன் ஆத்மாவை.*

ஊருமிலான் பேருமிலான் உடன்பிறந்தார் சுற்றமிலான்
ஆருமிலான் அவனைத் - தங்கமே
ஆர்தான் அறிவாரெடி.

*அவனை = ஐந்தெழுத்தில் இயங்குபவனை.*

180 விண்ணும் மண்ணும் தண்ணீரும்
விளங்கொளியும் மாருதமும்
கண்ணுதலின் வடிவமெடி - தங்கமே
காண்பார் ஆர் காட்டாவிட்டால்.

*கண்ணுதலின் = நெற்றிக் கண்ணில் ஒளி வடிவமானவனை. காட்டாவிட்டால் = குரு கண்பிக்காவிட்டால்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181 ஊழ்வினை போக உள்ஒளி ஓங்க
உயர்க சிவதொண்டன்

*உள் ஒளி = ஆத்ம சோதி. சிவதொண்டன் = ஐந்தெழுத்து ஓதுபவன்.*

உண்மை முழுவதும் என்று உரை செய்யும்
ஒருவன் கழல் வாழ்க.

*உரை செய்யும் = ஐந்தெழுத்து ஓதும். கழல் = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

182 சிவமே நாமாமென்று சிந்திக்கச் சீரார்
சிவமே நாமென்று தெளிவோம் - அவமே
மனமே உடன் போகும் மற்றுமோர் தெய்வம்
கனவிலும் எண்ணாது காண்.

*சிந்திக்க = மனத்தில் பதிக்க சீரார் = ஞானிகள். வேறு தெய்வம் கனவிலும் நினையாது.*

185 ஆறாறு தத்துவத்துக்கப்பாலே உள்ளவனை
மாறாக் கருணையனை மருவ வா என்மனமே.

*ஆறாறு தத்துவம் = 36 உடல் தத்துவங்கள். கருணையனை = அன்பனை. மருவ வா = சேரவா.*

186 சிவதொண்டு செய்தல் செகத்தில் சரியை
சிவதொண்டு செய்தல் செகத்தில் கிரியை
சிவதொண்டு செய்தல் செகத்தில் யோகம்
சிவதொண்டு செய்தல் சிவஞானம் ஆமே.

*சிவதொண்டு = ஐந்தெழுத்தில் இயங்கும் மெய்ப் பொருளை ஆதரித்தல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றும் இரண்டும் மூன்றும் ஐந்தும்
நன்றும் தீதும் நாளும் கோளும்
ஒன்றில் ஒன்றி இருக்கும் உபாயம்
கண்டு கொண்டவர் கலங்காச் சித்தரே.

*ஒன்றில் ஒன்றி = கருவில் மிதித்த கமலப் பாதமான அகார எழுத்தில் ஐந்தெழுத்தும், நன்றும் தீதும் நாளும் கோளும் ஒன்றி அடங்கி இருப்பவர் மனக் கலக்கமில்லாத ஞானிகள்.*

187 அகரத்தில் உகரமும் மகரமும் சேர்த்து
சிகரமும் வகரமும் யகரமும் செபித்தாற்
பகர வொண்ணாத பாதம் அணிந்து
அகார காயத்தில் தனித்து வாழலாம்.

*அகர உகர மகரமாகிய ஓம் என்னும் திருநாமத்தை ஓதினால் கருவில் மிதித்த இறைபாதத்தை அடையலாம்.*

189 உண்மை முழுதுமென்று ஓயாது உரைப்பவன்
நன்மை தீமையைக் கடந்த நாதன்
என்னையுந் தன்னையும் ஒன்றாய்க் காண்பவன்
சென்னியில் சேவடி சூட்டினன் அன்பால்.

*உரைப்பவர் = ஐந்தெழுத்து ஓதுபவன். என்னையும் தன்னையும் = ஆத்மாவையும் இறைவனையும் ஆத்ம சோதியில் சூட்டினான்.*

191 கருத்திலிருக்கும் கதிர்காமத்தோனை
வருத்தமுற்று ஏன் தேடுகின்றாய் – திருத்தியுன்
சித்தமிசை நித்தம் நிதம் ஒளியைக் கண்டுருகி
முத்தன் என வாழ முயல.

*கருத்தில் = மனத்தில். சித்தமிசை = உள்ளத்தில். திகழ்ஒளி = பரஞ்சோதி. முத்தன் = மும்மலத்தை வென்றவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193 ஊரும் பேரும் இல்லான் உவந்தெனைத்
தானாய் வந்து ஆண்டான் என்று உந்தீபற
சஞ்சலம் தீர்ந்தது என்றுந்தீபற.

*உவந்து = கருணைகாட்டி. சஞ்சலம் = துன்பம்.*

194 ஓங்காரத்தின் உட்பொருளானவன்
ஆங்காரம் தீர்த்தானென்று உந்தீபற
அழிந்தது மாயையென்று உந்தீபற.

*ஓங்காரம் = ஓம் என்னும் நாதத்துள்.*

அவனன்றி ஓரணுவும் அசையாது எனும் பெரிய
சிவனடியார் தம்மைக் கண்டு - சின்னத்தங்கம்
சிவன் என்று வணங்கிடடி.

*சிவனடியார் = கருவில் மிதித்த கமலப் பாதத்தை அறிந்து உணர்ந்தவர்.*

அங்கிங்கெனாதபடி ஆனந்தமாய்க் கூத்தாடும்
சங்கரனை நீ வணங்கி - சின்னத் தங்கம்
சந்தேகம் தீர்த்திடடி.

*சங்கரன் = சங்கு நாதம் ஒலிக்கும் ஆத்மா.*

அத்துவிதப் பொருளை அறிவுக்கு அறிவானதொன்றை
சித்தத்தினிலே நீவைத்து - சின்னத்தங்கம்
சிந்தை தெளிந்திடடி.

*அத்துவிதப் பொருள் = தனிப்பொருளான ஒரே மெய்ப்பொருளான ஆத்மாவை.*

195 ஆசையை விட்டிடடி அதுவே சிவபூசையடி
காசைக் கருத்தில் வைத்து - சின்னத்தங்கம்
கவலை நீ கொள்ளாதே.

*ஆசை = ஐம்புலன்களால் எழும் ஆசை. கருத்தில் வைத்து = மனதில் வைத்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவுக்கு அயலில்லை அப்படியே உள்ளதடி
வீண்வாதம் விட்டிடடி - சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடடி.

*ஆன்மாவை விட வேறு மெய்ப்பொருள் இல்லை.*

196 நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேனே
எல்லையில்லாப் பிணி தீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
இல்லையெனாது கொடுக்கும் மருந்து
ஏழை அடியார்க்கும் இரங்கும் மருந்து.

*குருமருந்து = குரு அளிக்கும் ஆத்ம ஞானம். இம்மை மறுமைக்கும் = இப்பிறப்புக்கும் அடுத்த பிறப்புக்கும்.*

அன்னை பிதாக் குருவாகி அடியேனை ஆட்கொண்ட
தன்னிகரில்லாத சற்குருவே நீ கண் வளராய்.

*யோகிகள் சற்குருவின் பெயரையே ஆத்மாவுக்குச் சூட்டுவர்.*

மண்ணாசை பெண்ணாசை மற்றுமுள ஆசையெலாம்
எண்ணாமல் செய்தான் இவன்.

*மனிதனே ஆசைகளை வளர்த்து வாழ்கின்றான்.*

198 கண்ணே கண்ணின் மணியே கனியே கனிரசமே
எண்ணேன் பிறதெய்வம் எல்லாம் உனது செயல்.

*நெற்றிக் கண்ணில் சோதியாய் வெளிப்படும் கனிந்த பழம் பொருளான ஆதிப் பிரானல்லால் வேறு தெய்வமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201 ஐம்புலன் போம் ஆசைதனைத் தடுப்போம்
ஆன்மா நித்தியம் என்று படிப்போம்
வேறு பொருள் இல்லை என்று திடப்படுவோம்
நாதாந்தநிலையில் நாம் முடி சூட்டுவோம்
சும்மா இருக்குஞ் சுகத்தினைக் காட்டுவோம்
தும்பிமுகன்பாதத்தைத் தோத்திரம் செய்வோம்.

*நித்தியம் = மெய்ப்பொருளான இறைவன். சீவன் சிவன். சும்மா இருக்கும் = ஆத்மாவில் மனத்தை பதித்து நிற்கும் நிலை = இது ரமண மகாரிஜியின் விளக்கம்.*

202 சின்னத் தனமாய்த் தெருவாலே போவாரை
என்னப்பன் பேசிடுவான் – சின்னத்தங்கம்
இவன் விசரன் என்பாரடி.

*என் அப்பன்= எனது சற்குரு செல்லப்பா சுவாமி.*

உல்லாச நடையனடி ஊரூராய்த் திரிவனடி
எல்லோரும் இவனைக் கண்டு – சின்னத்தங்கம்
ஏளனஞ் செய்வாரடி.

*ஏளனஞ் = விசரனென்று பகிடி செய்தல்.*

203 துள்ளும் மனத்தையென்றும் வெல்லு
சும்மா இருக்கும் நிலை நில்லு.

*துள்ளும் = அமைதியில்லாத. சும்மா இருக்கும் நிலை = மனத்தை ஆத்மாவில் பதித்து வைத்து நிற்கும் நிலை.*

204 கடவுளை எங்குங் கண்டு களிப்பர் மெய்யடியார்கள் ஓம்
காமக் குரோத மோகம் நீக்குவர் மெய்யடியார்கள் ஓம்
திடமுடன் தியானஞ் செய்து களிப்பார் மெய்யடியார்கள் ஓம்
படமுடியாத துயரம்படினும் கண்டு களிப்பார் மெய்யடியார்கள் ஓம்
பாரும் விண்ணும் ஒன்றாய்ப் பரவுவர் மெய்யடியார்கள் ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமிடுந் திருவடி கண்டுகளிப்பர் மெய்யடியார்கள் ஓம்
சாதிசமயப் பற்றினை விட்டார் மெய்யடியார்கள் ஓம்
சந்ததம் மோன நிலை தவறாதார் மெய்யடியார்கள் ஓம்

205 ஓதி ஓதி உன்மத்தராவார் மெய்யடியார்கள் ஓம்
காணுங் கண்ணிற் கலந்தது என்பர் மெய்யடியார்கள் ஓம்
பேணும் பிறப்பு இறப்பு இல்லை என்பார் மெய்யடியார்கள் ஓம்
பேயர் பித்தர் போல் இருப்பார் மெய்யடியார்கள் ஓம்

206 ஐம்பொறி வழிபோய் அவனியில் அலையார் மெய்யடியார்கள் ஓம்
ஆசை வழிபோய் மோசம் போகார் மெய்யடியார்கள் ஓம்
வந்தது போனது மனத்தே வையார் மெய்யடியார்கள் ஓம்
வாழ்நாள் ஆசை பேணாது இருப்பார் மெய்யடியார்கள் ஓம்

*தியானம் = மனத்தை ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தில் பதித்து பிராணாயாமம் செய்தல். நடமிடுந்திருவடி = கருவில் மிதித்த கமலப் பாதம் சித்தாகாசப் பரவெளியில் நடனம் புரியும்.*

207 கண்டொன்று சொல்லாதே கடவுள் ஒருவன்
அண்டர் முனிவர் நரர் அன்பு செய்யும் பெருமானைக்
கண்டு களிக்கக் கருதி வா என் மனமே.
பண்டு செய்த வல்வினையால் பலபிறவி நாமெடுத்து
திண்டாடப்பட்டோம் சீக்கிரம் வா என்மனமே
எத்துணையும் தாழ்ச்சி இல்லா இறைவன் திருவடியை
சுத்தாமற் சுத்தி சுகம் பெற வா என் மனமே.

முட்டாத பூசை பண்ணி முழுமனமாய் நாம் வணங்க
திட்டமிட்டு என் பின்னே சேர்ந்து வா என் மனமே
எட்டாத கொப்பில் இருக்கின்ற தேனமுதை
இட்டமுடன் புசிக்க எட்டி வா என் மனமே.

*முட்டாத பூசை = ஐந்தெழுத்தை உணர்வால் ஓதுதல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

208 சீவனே சிவமென்று பெரியோர் - சிவசிவா
செப்பிய மொழியை ஒப்புக்கொள் அறிவாய்

*பெரியோர் - திருமூலர் போன்ற பெரும் யோகிகள்.*

அருமையில் அருமை எங்கள் ஆன்மா - சிவசிவா
அதை அறிந்து வாழ்வதே மாண்பாம்.

*ஆத்மாவே பரமாத்மாவாக திகழ்வது.*

209 அனைவருக்கும் தெய்வம் ஒன்றே - அதை
அறிந்து உலகில் வாழ்வது தொண்டே.

*ஆத்மாவே அத்தெய்வம்.*

வினைப் பகையை வெல்வதற்கு மார்க்கம் - குரு
வேந்தன் தந்த திருவாக்கு.

*குருவேந்தன் = சற்குரு. திருவாக்கு = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து.*

மனத்துயரை நீக்க நல்ல மருந்து - குரு
வாக்கியம் ஒரு பொல்லாப்பு மில்லை.

*குருவாக்கியம் = ஐந்தெழுத்துள் இயங்கும் "ஓம்" என்னும் இறை நாமம்.*

நினைத்தபடி நீள் நிலத்தில் வாழ்வோம் - நாங்கள்
நித்தியரா மென்பதை நாளும் மறவோம்.

*நித்தியர் = அழியாத மெய்ப்பொருள்.*

210 முயல முயல இன்பந் தேக்கும் - பொல்லா
மூவித ஆசைகளை நீக்கும்.

*முயல முயல = ஐந்தெழுத்தை ஓத ஓத. மூவித ஆசை = மண், பெண், பொன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலம் அடியோடே மடியும் - சுருதி
சொன்ன சுவானுபவம் படியும்.

*மடியும் = அற்றுவிடும். படியும் = ஆத்மா ஓதும் ஐந்தெழுத்தும் அகார எழுத்தில் படிந்து சமாதி நிலை அடையும்.*

210 ஒரு பொல்லாப்பும் இல்லையடா - தம்பி
உண்மை முழுதும் அறிந்திடடா.

*ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகிய அகார எழுத்து.*

தரும வழியில் வழுவாதே - தம்பி
தன்னை அறிய எழுவாயே.

*தன்னை அறிய = தன் ஆத்மாவை அறிய.*

கற்றதனாற் பயன் இல்லையடா - தம்பி
கழல் அடியிணை கண்டிடடா.

*கழல் அடி இணை=ஆத்ம சக்கரத்துக்கு இணை அடியாய் நிற்கும் திருவடி.*

பொறி வழியினிற் செல்லாதே - தம்பி
போனதை எண்ணிக் கொள்ளாதே.

*போனதை = நடந்து முடிந்ததை.*

211 எத்தொழிலை நீ செய்தாலும் - தம்பி
ஈசனுக்கு அர்ப்பணம் பண்ணிடடா.

*அத்தொழிலின் பலனை இறைவனுக்கு அர்ப்பணி.*

செத்தாரைப் போலத் திரிந்திடடா - தம்பி
சீவன் சிவனென்று அறிந்திடடா.

*சீவன் சிவன் = ஆத்மாவே பரமாத்மா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானமாலை

214 அகரத்தில் உகர மகரம் அமரும்
உகரத்தில் அகர மகரம் உறையும்
மகரத்தில் அகர மகரம் மயங்கும்
சிகரத்தில் கண்டு தெளிந்தவன் சித்தனே.

*அகரம் = கருவில் மிதித்த கமலப்பாதம் ஆத்ம சக்கரத்துக்கு இணை அடியாய் முதல் எழுத்தான அகார எழுத்து. சிகரத்தில் = சித்தாகாச உச்சியில். சித்தன் = மெஞ்ஞானி.*

214 ஆதார வாதேயமுழுதும் ஆனவன்
நாதா நாதனாய் மன்னி நின்றவன்
பூதாதி ஐந்துமாய்ப் பொலிந்த புண்ணியன்
பாதார விந்தம் பரவிக் கண்டேனே.

*பூதாதி ஐந்தும் = நிலம் நீர் நெருப்பு வாயு ஆகாசமாகிய ஐந்து பூதங்கள். பாதார விந்தம் = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

இன்றுளோர் நாளை இல்லாமை கண்டும்
பொன்றும் உடலைப் பொன்போற் போற்றி
நன்று தீதென்று நாட்டங் கொண்டோர்
என்று காண்பரோ ஈசன் இணை அடி.

*பொன்றும் = அழியும். ஈசன் இணையடி = கருவில் மிதித்த கமலப்பாதம்.*

ஈயாத மாந்தர் இருந்தென்ன இறந்தென்ன
ஓயாக் கவலையில்உடலஞ் சலித்து
மாயா விகார மனை மக்கள் உறவெனும்
பேயாற் பிடி பட்டுப் பிதற்றி மாண்டாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஈயாத = தருமம் செய்யாதே. கவலை = துன்பம். உறவு = பந்தபாசம். மாண்டார் = இறந்தார்.*

உம்பர் தலைவனை ஊழி முதல்வனை
வெம்பந்தம் நீக்கும் வேதாந்த விளக்கை
சம்பந்தமாக்குந் தத்துவ ஆதீதனை
நம்பந்தம் நீக்கி நாங்கள் கண்டோமே.

*உம்பர் = விண்ணவர். விளக்கு = சோதி. சம்பந்தமாக்கும் = தொடர்பு கொள்ளச் செய்யும்.*

ஊரும் பேரும் இல்லா ஒருவனை
ஆரும் அறியா அறிவுக்கு அறிவை
நீருந் தீயுங் காலுமானவனைச்
சாருந் தீருஞ் சஞ்சலம் முற்றுமே.

*ஒருவனை = ஆத்மாவை. காலும் = காற்றும். சாரும் = சேர்ந்திருந்தால்.*

என்னுள் ஒளியை ஏந்திழை பங்கனை
மின்னுஞ் சடைமுடி விகிர்தனைச் சிவனைக்
கண் மூன்றுடைய கடவுளைக் கங்கை
தன்னை வைத்தவனைச் சாருந் தவமதே.

*ஏந்திழை = சத்தி. பங்கன் = ஒரு பாதியான இறைவனை. கண் மூன்று = நெற்றிக் கண்ணோடு மூன்று கண். கங்கை = தேனாறு.*

ஏக நாயகனை எல்லாஞ் செய் சித்தனை
போக நாயகனைப் புணர் முலை பங்கனை
மோகமார் புரத்தை முனிந்த முதல்வனைத்
தேகம் விழுமுன் சிந்தை செய்வோமே.

*ஏக = தனி. சித்தன் = அறிவுப்பொருள். புணர்முலை = ஐந்தெழுத்தோடு புணரும். புரத்தை முனிந்த = முப்பத்தில் இயங்குவதை நிறுத்தின.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரக் கம்பத்தின் உன்னத மேடையில்
பாங்கான வீட்டின் பள்ளி அறையைத்
தூங்காத் திறவுகோல் கொண்டு திறந்தால்
நீங்காச் சிவகதி நிச்சயமாமே.

*கம்பம் = ஆத்ம தண்டு. வீடு = ஆத்மாவின் வீடு. சிவகதி = சிவமயம்.*

அ∴கா மனத்தால் அறிவை எழுப்பி
வெ∴காக் குருபதம் மென்மேலும் போற்றி
எ∴கு போல இளகிக் குழைந்தால்
இ∴தெ பேரின்பம் இடரில்லை என்றுமே.

*அறிவை = ஓமெனும் திருநாமத்தை. குருபதம் = கருவில் மிதித்த கமலப்பாதம்.*

216 நமச்சிவாயவே நான் மறை ஆகமம்
நமச்சிவாயவே மந்திர தந்திரம்
நமச்சிவாயவே நம் உடல் உயிர் பொருள்
நமச்சிவாயவே நற்துணை யாகுமே.

*நமச்சிவாயம் = ஓம் என்னும் இறைநாமம். அகார உகாரத்தில் இயங்கும் ஓம் என்னும் பொருளே உடல் உயிர் நற்துணை.*

நாதன் இருப்பது நற்தவர் நெஞ்சிலே
நாதன் உரையது நான் மறை ஆகமம்
நாதனை நாடினர் ஞானம் எய்துவர்
நாதனை நாடி நாம் அறிந்தோமே.

*நாதன் உரை = ஓம் என்னும் திருநாமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினையும் நினைவும் நீயன்றி வேறில்லை
அனையுஞ் சுற்றமும் அப்பனு மாகிய
தனை அறிவார்கள் தற்பரமாவர்
பினையொன்றும் பேச இடமில்லைக் காணே.

*தற்பரம் = சீவன் சிவன்*

நீயும் நானும் அவனும் அதுவும்
காயுந் தீயும் காலும் வானும்
பேயும் பூதமும் பிரானும் பிறவும்
ஆயும் பொழுதில் அவனாய விளங்குமே.

*காயுந் தீ = எரிக்கும் நெருப்பு. காலும் = காற்றும்.*

நுண்ணிடை அவளொடு நுடங்கும் பித்தனை
விண்ணிடை விடைமேல் விளங்கும் ஒருவனை
கண்ணிடைக் கண்டு களித்த மானிடர்
மண்ணிடை வராரென ஓதும் மறையே.

*பித்தனை = ஆத்மாவை. கண்ணிடை = நெற்றிக் கண்ணில். மண்ணிடை வரரார் = பிறப்பு இல்லை.*

217 அந்தியுஞ் சந்தியும் அன்பினில் அவனைச்
சிந்தையில் நினையச் சிறப்புடையவராய்
பந்தம் யாவும் பற்றாது ஒழித்து
நந்தா இன்ப நாடு அடைவாரே.

*இன்ப நாடு = விண்ணுலகம், தில்லை.*

219 விடியுமுன் எழுந்திடடி – கிளியே
விமலனைப் போற்றிடடி
பொடியணி மேனியனைக் – கிளியே
புகழ்ந்து நீ பாடிடடி.

*விமலன் = மலமற்றவன். பொடியணி = நீற்று மண்டலத்துள் வெளிப்படும் சோதி மேனியன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவாயநம வெனத் துதிப்போம்.
நாம் சிவமென்று நெஞ்சில் பதிப்போம்.

*ஓம் சிவாயநம = அகார உகாரத்தில் உணரும் சத்தம் இறைநாமம்.*

220 தேறித் தெளிந்தவரை அடுப்போம்
ஊறிவரும் அமுதத்தை உண்போம்.

*ஐந்தெழுத்தை ஓதி மெய்ப்பொருளான ஆத்மாவை அடுத்து அண்டி நிற்பவரோடு சேருவோம். உள்ளத்தில் ஊறும் தேனை உண்போம்.*

221 ஊதூது சங்கே ஊதூது
உன்னை உன்னால் அறியென்று ஊதூது.

*ஊதூது சங்கே= சங்குநாதத்தை ஊது.*

ஊதூது சங்கே ஊதூது
சிவதொண்டன் வாழ்கவேன்று ஊதூது

*சிவதொண்டன் = ஐந்தெழுத்து ஓதுபவன்.*

222 ஆதார ஆதேய முழதுமான அப்பனுக்கு
பாதார விந்தம் எங்கே பார்த்துப் பணிவதெங்கே.

*அப்பனுக்கு = படைத்த இறைப் பொருளான ஆத்மாவுக்கு பாதார விந்தம் = கருவில் மிதித்த கமலப்பாதம், திருத்தாள்.*

223 அஞ்செழுத்துள்ளே அனைத்தையும காட்டி என்
நெஞ்சம் புகுந்தானென்று உந்தீபற
நித்தியானந்தன் என்று உந்தீபற.

*அஞ்செழுத்துள் = ஆத்ம சக்கரத்துள். நெஞ்சம் = நெஞ்சகம். நித்தியானந்தன் = நிலையான பேரின்பத்தை அளிப்பவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

224 ஒரு பொல்லாப்புமில்லை யென்றான் எங்கள் பெருமான்
ஓம் என்று உறுதி தந்தான் எங்கள் பெருமான்
ஔவனத்தில் ஆடுகின்றான் எங்கள் பெருமான்
அ.:.தும் இ.:.துமானான் எங்கள் பெருமான்.

*ஓம் = ஐந்தெழுத்துள் அகார உகாரத்தில்ஒலிக்கும் ஓசை. ஔவனத்தில்= தில்லை வனத்தில்.*

சொல்லும் பொருளுமாய்த் தொடர்ந்திடும் - அது
சூக்கும ரூபமாய்ப் படர்ந்திடும்.

*ஐந்தெழுத்துச் சொல்லும் மெய்ப்பொருளுமாய். அது= ஆத்மா.*

225 கண்ணுக்குக் கண்ணாய்க் கண்டிடும் - அது
காதுக்குக் காதாய்க் கேட்டிடும்.

*நெற்றிக் கண்ணால் காணும். கேட்காத உள்செவியால் நாதலோக இசையைக் கேட்கும்.*

அல்லும் பகலும் அப்பன் திருவடியைச்
சொல்லாமற் சொல்லிச் சுகம் பெறுவதெக்காலம்.

*அப்பன் திருவடி = கருவில் மிதித்த கமலபாதமே. அகார எழுத்தாய் நின்று விரிந்து ஐந்தெழுத்தாயிற்று.*

நில்லா உலகையும் நிலையென எண்ணி மனஞ்
செல்லாமல் திருவடியைச் சிந்திப்பதெக்காலம்.

*நில்லா = அநித்தியமான. திருவடி = அகார எழுத்து.*

பொன்னாசை மண்ணாசை பெண்ணாசையை நீக்கி
பொன்னார் திருவடியைப் போற்றுவதும் எக்காலம்.

*ஒளிமயமான கருவில் மிதித்த கமலப் பாதத்தை போற்றுவது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்தம் பேசி வீண் காலம் போக்காமல்
நாதாந்த மோன நிலை நண்ணுவதும் எக்காலம்.

*பேசி = வாயால் பேசி விளக்கி. மோன நிலை = சமாதி.*

226 நினைவுக்கு நினைவாய் நிலைத்திருக்கும் மெய்ப்பொருளை
அனைத்துக்குங் காரணனை அறிவதுவும் எக்காலம்.

*மெய்ப்பொருள் = ஐந்தெழுத்தில் இயங்கும் பொருள்.*

அங்கும் இங்கும் எங்கும் நான்
அதை அறியும் விசரன் நான்.

*அதை = மெய்ப்பொருளான ஆத்மாவை.*

மங்களமாகப் பேச மாட்டேன்
மாய வாழ்வை மதிக்க மாட்டேன்.

*மாய வாழ்வு = உலக வாழ்வு*

பொங்கல் பூசை செய்யமாட்டேன்
போனதை எண்ணிக் கலங்க மாட்டேன்.

*போனதை = சென்ற காலத்தை.*

மங்குவார் செல்வம் மதிக்க மாட்டேன்
மாயவித்தை காட்ட மாட்டேன்.

*வித்தை = புதுமையான செயல்.*

227 சிங்கக் குட்டி போல நடப்பேன்
தீயாரோடு கூட மாட்டேன்.

*தீயார் = ஆத்ம ஞானமில்லாதவர்.*

சிங்களவர் தமிழரைக் காண மாட்டேன்
சின்னம் ஒன்றும் போட மாட்டேன்.

*சின்னம் = குண்டலம், உருத்திராட்ச மாலை முதலியன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கைமார் சூழ்ந்து கும்பிடும் நல்லூரான்
என்னப்பன் செல்லப்பனை மறக்கமாட்டேன்.

*என்னப்பன் = ஆத்ம ஞானம் அளித்த அப்பன் செல்லப்பன்.*

230 அல்லும் பகலும் அறிவாக நிற்பவர்க்கு
எல்லையில்லா இன்பம் உண்டு என்பின்னே வா மனமே.

*அறிவாக நிற்பவர் = ஐந்தெழுத்து ஓதுபவர்க்கு.*

ஈசன் ஒருவனென எண்ணிப் பணிவார்க்குப்
பூசை செய்ய வேண்டுமோ புகல வா என் மனமே.

*பணிவார்க்கு = இறை நாமமாகிய "ஓம்" என்னும் மெய்ப்பொருளுக்குப் பணிவார்க்கு.*

உண்மை முழுதுமென்னும் உத்தமனைக் கண்டார்க்கு
என்ன குறைவுண்டு இசைந்து வா என்மனமே.

*உத்தமன் =ஆத்மா. இசைந்து = ஓமென்று ஓதி.*

எல்லாஞ் சிவன் செயலென்று ஏத்திப் பணிவார்க்குப்
பொல்லாங்கும் உண்டோ புத்தியுடன் வா மனமே.

*ஏத்தி = அகாரத்திலிருந்து உகாரத்துக்கு ஏத்தி.*

ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்கவென்று
தேகம் விழுமுன்னே செப்பவா என் மனமே.

*இறைவன் அடி= கருவில் மிதித்தகமலப் பாதம்.*

ஓம் சிவாய நமவென்று உறுதியுடன் செபித்தால்
நாம் சிவமே ஆவோம் நயந்து வா என் மனமே.

*ஓம் = அகார உகார மகாரத்தில் பிராண வாயு உரைக்கும் ஓமெனும் இறை நாமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

240 தெய்வத்துக்குத் தெய்வம் சிந்தையிலே தானிருக்க
வையகத்தில் ஏன் அலைந்தாய் - சின்னத்தங்கம்
வாட்டமெல்லாம் விட்டிடடி.

*இறைவன் உனக்குள் இருக்க நீ ஏன் உலகமெலாம் அலைகின்றாய்.*

ஆழித்துரும்பெனவே அங்குமிங்குமாய் அலைந்து
பாரில் தவியாதே - சின்னத் தங்கம்
பார்த்து மகிழ்ந்திடடி.

*பாரில் = உலகில்.*

அங்குமிங்குமெங்கும் அந்த ஆண்டவன் தானிருக்க
அங்குமிங்கும் அலையாதே - சின்னத்தங்கம்
ஆடிப்பாடி மகிழ்ந்திடடி.

*ஆண்டவன் = ஆத்மா பல பல தோற்றங்களானவன்.*

ஆடம்பரமெல்லாம் அடியோடே நீக்கிவிட்டு
கேடு அறியாத் திருவடியைச் - சின்னத்தங்கம்
கிட்ட நீ கண்டிடடி.

*திருவடி= கருவில் மிதித்த கமலப் பாதம். ஆத்ம சக்கரத்துக்கு இணையடி.*

வேடமொன்றும் போடாதே வீணருடன் கூடாதே
தேட வேண்டாம் திகைக்க வேண்டாம் - சின்னத்தங்கம்
சீவன் சிவன் ஆச்சுதடி.

*சீவன் சிவனாயிருக்கும் பொழுது வேடம் போட்டு ஏமாத்தாதே.*

தொழுது வணங்கிடுவாய் துரிய நிலை சாரு மட்டும்
அழுதழுது ஆண்டவனைச் - சின்னத்தங்கம்
ஆன்மலாபம் தேடிடடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*துரியநிலை = மனத்தை ஆத்ம சொரூபத்தில் பதித்து நிற்கும் நிலை. ஆன்மலாபம் = பிறப்பு இறப்பு அறுக்கும் லாபம்.*

241 காண்பானுங் காட்சியும் போய்
காட்சிப் பொருளும் அற்று
மாண்புடனே நின்றிடுவாய் - சின்னத்தங்கம்
மரண பயம் இல்லையடி.

*காண்பான் = நான். காட்சி = சித்தாகாச வெளியில் தோன்றும் காட்சி. காட்சிப் பொருள் = ஆத்மா.*

மானாபிமானம் விட்டு மண்ணும் விண்ணும் தெரியாமல்
தானான தன்னிலையில் - சின்னத்தங்கம்
தனியே இருந்திடடி.

*மானாபிமானம் = மன அபிமானம். தானான தன்னிலையில் = தன் ஆத்ம சோதி நிலையில்.*

தானான தானேயல்லால் தனக்குதவி யாருமில்லை
மோனநிலை தனிலே - சின்னத்தங்கம்
மூழ்கி இருந்திடடி.

*தானான தானேயல்லால் = தன் ஆத்மாவாக இயங்கும் தானல்லாமல். மோனநிலை சமாதிநிலை.*

தத்துவப் பேயோடு
தான் தழுவிக் கொள்ளாதே
சுத்தப்பரி பூரணத்தில்- சின்னத்தங்கம்
சுகித்து நீ வாழ்ந்திடடி.

*சுத்த பரி பூரணம் = சுத்த மெய்ப்பொருள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

242 வித்தகம் நீ பேசாதே வேறொன்றை நாடாதே
செத்தாரைப் போல் திரிவாய் - சின்னத்தங்கம்
தெய்வம் நீ கண்டிடடி.

*வித்தகம் நீ பேசாதே = உலக அறிவைப் பற்றி வாது செய்யாதே. தெய்வம் நீ = உன் ஆத்மா எல்லாம் அறிந்த இறைப்பொருள்.*

ஓம் நாம் நாமென்று ஒலிக்குது
ஞாதுரு ஞானம் போய் ஓடி ஒளிக்குது

*ஆத்மா அகார உகாரத்தி ஓமே நாமென்று ஒலிக்குது.*

நமக்கு நாமே துணையென்று விழிக்குது
நாதாந்த முடியில் ஏறிக் குளிக்குது

*ஆத்மாவே துணையாய் நின்று ஒளிக்குது.*

வேதாந்தம் சித்தாந்தம் சமமென்று களிக்குது
மாதா பிதாவை மறவாதிருக்க மதிக்குது.

*வேதப்பொருளின் அந்தமும், சித்துப்பொருளின் அந்தமும் வேறில்லை.*

நில்லடா நிலையிலென்று சொல்லுது
நீயே நான் என்று சொல்லி வெல்லுது.

*நிலையில் = ஆதியோடு சமமான சமாதி நிலையில்.*

243 உல்லாசமாய் எங்குஞ் செல்லுது
உண்மை முழுதுமென்று சொல்லுது.

*மண் வான் விண்ணாகிய மூவுலகங்களுக்கும் ஆனந்தமாய் ஆத்மா செல்லும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதொண்டு செய்வார் தீநெறிச் செல்லார்
சிவதொண்டு செய்வார் புலன் ஐந்தும் வெல்வார்
சிவதொண்டு செய்வார் பிறன் பொருள் வெஃகார்
சிவதொண்டு செய்வார் சிவமே யாவர்.

*சிவதொண்டு = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து ஓதுவதே சிவதொண்டு.*

243 சிவமே தாமெனச் சிந்திப்பார் பெரியோர்
சிவமே வேறாகச் சிந்திப்பர் சிறியோர்
தவநெறி நிற்பின் தன்னை அறியலாம்
அவநெறி நிற்பின் பின்னம் உறலாம்.

*சிவமே தாமென = சீவனே சிவனென. சிறியோர் = சிவனும் சீவனும் வெவ்வேறு என்னும் அஞ்ஞானிகள்.*

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது
ஆசான் அருளால் அருள் மழை பொழிந்தது
ஆசான் அருளால் ஆனந்தம் விளைந்தது
ஆசான் அருளால் ஆசான் ஆயினேன்.

*ஆசான் = சற்குரு. ஆசான் ஆயினேன் = நானே சற்குருவாய் விட்டேன்.*

244 ஆதி அந்தமில்லா அப்பனுக்கு மங்களம்
சோதி வடிவாயுள்ள சுவாமிக்கு மங்களம்
காண்பதெல்லாங் கடவுளாய்க் காண்பார்க்கு மங்களம்
பொறிவழி போய் அலையாத புண்ணியர்க்கு மங்களம்
நெறிவழியே செல்லுகின்ற நிருபருக்கு மங்களம்
தன்னைத் தன்னால் அறிந்த தாபதர்க்கு மங்களம்
அன்னைபிதாக் குருவான அப்பனுக்கு மங்களம்
மண்ணைப் பெண்ணை மதியாத மாதவர்க்கு மங்களம்

*தன்னைத் தன்னால் = தன் ஆத்மாவை தன் ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி உணர்ந்தேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

245 எட்டாத கொப்புக்கு ஏணி வைத்துப் பூப்பறித்து
முட்டாத பூசை செய்தேன் - தங்கமே
முன்னுமில்லை பின்னுமில்லை.

*ஐந்தெழுத்து ஓதுவதே முட்டாத பூசை.*

கட்டாத மனத்தைக் கட்டி காலாலே கனல் வீசி
நிட்டையிலே நான் இருந்தேன் - தங்கமே
நீ நான் அங்கு இல்லையடி.
கட்டாத = அடக்கமுடியாத. நிட்டை = சமாதி.

நட்டார் ஒருவரில்லா நாதாந்த மேடை ஏறிச்
சிட்டாய சிட்டனுக்கே - தங்கமே
திருவிருந்தானேனடி.

*நட்டார் = விந்துவிலிருந்து எழும் நாதம் ஒரு தண்டாய், ஏகம்பமாய், சிவலிங்கமாய் நடுபவர்.*

இட்டார் இடார் என்னும் இகழ் புகழைத் தள்ளிவிட்டு
முட்டாத பூசை செய்தேன் - தங்கமே
மூன்றும் ஒன்றாச்சுதடி.

*முட்டாத பூசை = ஓமெனும் சிவநாமத்தை ஓதிப் பூசை. மூன்றும்= முப்பதங்களான அகாரம் உகாரம் மகாரம்.*

எட்டாத பேரின்பம் என்னை விழுங்கிற்றடி
கிட்டாது முட்டாதடி - தங்கமே
கேட்டு மகிழ்ந்திடடி.

*கிட்டாது = அணுகாவிட்டால். முட்டாதடி = ஆத்ம சொரூபத்தில் முட்டாது. கேட்டு = நாதத்தைக் கேட்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டாமல் சுட்டிடடி சோதி சிவரூபமடி
கிட்டாத பொருளொன்று - தங்கமே
கீழ் நோக்கிப் பாராதே.

*சுட்டிடடி = ஆத்ம சோதியால் சுடு. கிட்டாத = அடைய முடியாத. கீழ் நோக்கி = உலக மாயையை.*

எட்டாத கொப்பினிலே இருக்குதடி தேனமிர்தம்
தட்டாமல் சாப்பிடடி = தங்கமே
சமனாவார் ஒருவரில்லை.

*தேனமிர்தம் = யோகிகள் பெறும் தேனூறல். சமனாவார் = உனக்குச் சமனானவர்.*

246 தலையை நிலத்தில் நிறுத்திப் பார்த்தால் இறைவனாவீரோ
காலை மேலே ஏற்றிப் பார்த்தால் கடவுளைக் காண்பீரோ
மலைமேலேறி மவுனஞ் செய்தால் மகாதேவனைக் காண்பீரோ
சிலைபோலிருந்து சிந்தித்துப் பார்த்தால் தேவனைக் காண்பீரோ
கலைகள் பலவும் கற்றுவிட்டால் கங்காதரனைக் காண்பீரோ
விலைக்குப் புத்தகம் வேண்டிப் படித்தால் விமலனைக் காண்பீரோ
பாலைக் குடித்துப் பட்டினி கிடந்தால் பரமனைக் காண்பீரோ
வேலை செய்யாமல் வீதியில் திரிந்தால் வேந்தனைக் காண்பீரோ
மூலையில் இருந்து முணுமுணுத்தால் முதல்வனைக் காண்பீரோ
சாலப் பசிக்கு ஒருபோது புசித்தால் சாமியாவீரோ.

*ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து ஓமெனும் இறை நாமத்தை ஓதியே சீவன் சிவனாகலாம்.*

248 சோதிப் பிழம்பே கரிகுழலாள் தன் கணவா
ஆதிப் பொருளே அறியாமையால் மிகவும்
பாதிக்கப்பட்டேன் பரனே இனி உனது
நீதிக் கழல் காட்டி நீ என்னை ஆளாயோ.

*கரிக் குழலாள் = பராசக்தி. அறியாமை = அஞ்ஞானம். நீதிக்கழல் = கருவில் மிதித்த திருப்பாதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளான மெய்யடியார் அகங்கோயில் கொண்டவனே
கேளாயோ இன்னுங் கிருபை உனக்கு இல்லையோ
பாழாகப் போகாமற் காப்பது உந்தன் பாரமையா
வாளா இருந்தாற் பழி உனக்கு வந்திடுமே.

*அகம் = நெஞ்சம். கிருபை = அருள். உனக்கு = ஆத்மாவுக்கு.*

வந்து உன் அடி அடைந்த மெய்யடியார் வருத்தமெல்லாம்
வெந்துபோம் வண்ணம் மிகு கருணை நீ அளித்த
அந்த மொழி கேட்டு அடியேனும் உன் அடிக்கீழ்
வந்தேன் கருணை வழங்காய் நீ வான்பொருளே.

*உன் அடி = கருவில் மிதித்த கமலப் பாதம். மொழி = ஐந்தெழுத்து. வான் பொருள்= ஆத்மா.*

இரவும் பகலும் உன்னை ஏத்தித் துதிப்போர்க்கு வரம்
தரவல்ல தெய்வமே சங்கரனே கண்வளராய்

*உன்னை = ஆத்மாவை. சங்கரன் = சங்கு நாதம் ஒலிக்கும் அரனாகிய ஆத்மா.*

ஈசனே எவ்வுயிர்க்கும் உயிராய் விளங்குகின்ற
தேசனே செல்வக் கொழுந்தே நீ கண்வளராய்.

*தேசன் = எங்கும் பரவி நிற்பவன். கொழுந்தே = சோதி மயமானவனே.*

248 உன்னையல்லால் வேறு தெய்வம் உள்ளத்திற் கொள்ளாத
பொன்னப்பனைக் காக்கும் பூரணனே கண் வளராய்

*உன்னை = ஆத்மாவை. பொன்னப்பன் = ஒளிமயமான அப்பனே.*

249 எல்லை சொல்ல வல்லார் எவருமில்லா மெய்ப்பொருளே
அல்லலெல்லாம் நீக்கும் அரனே நீ கண்வளராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250 அன்னை தந்தை சுற்றம் அரிய சகோதரர்கள்
உன்னையன்றி உண்டோ என் உயிரே பராபரமே.

ஆக்கையே கோயில் அகமே சிவலிங்கம்
பூக்கை கொண்டு போற்ற அருள் புரிவாய் பராபரமே.

*ஆக்கை = உடம்பு. அகம் = நெஞ்சுக்குள் இயங்கும் ஆத்மா. சீவன் சிவலிங்கமென்று திருமந்திரம் கூறுகின்றது.*

உன்னைப் பிரிவேனோ உயிர் நான் தரிப்பேனோ
என்னைப் பிரிவாயோ இறையே பராபரமே.

*உன்னை = ஆத்மாவை. இறையே = பரமாத்மாவே.*

எல்லாமாய் அல்லவுமாய் இருப்பான் இறைவனென்றால்
சொல்லாலே எப்படி நான் சொல்வேன் பராபரமே.

*எல்லாமாய் = எல்லாத் தோற்றங்களாய். சொல்லாலே = ஐந்தெழுத்தாலே.*

ஒரு பொல்லாப்புமில்லை உண்மை முழுதுமென்ற
திருவாக்கை யார் அறிவார் செப்பாய் பராபரமே.

*ஓம் என்னும் உண்மைப் பொருளாலேயே எல்லாம் படைக்கப்பட்டது.*

அஞ்செழுத்தை நெஞ்சில் அழுத்தாது அழுத்தி நிற்கக்
கஞ்ச மலரடியைக் காட்டாய் பராபரமே.

*அழுத்தாது அழுத்தி = வாயால் ஓதாமல் உணர்வால் ஓதி. கஞ்சமலரடி = கருவில் மிதித்த வாடாத கமலப் பாதம்.*

ஒரு தெய்வம் ஒரு உலகம் உண்மை முழுதுமென்னும்
திருவருளில் நிற்க அருள் செய்வாய் பராபரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தெழுத்தில் இயங்கும் ஒரு உண்மைப் பொருளே ஒரு தெய்வமுமாய் உலகமாய் சகல அசைவு, அசைவற்ற தோற்றங்களாய் நிற்பதை உணரச் செய்வாய்.

253 ஒருவனாலே உலகம் உதித்தது
ஒருவனாலே உலகம் நிலைத்தது
ஒருவனாலே உலகம் ஒடுங்கிடும்
ஒருவனே என் உயிர்த்துணையாமே.

*ஒருவனாலே = விந்துவில் விளைந்த இறைவனின் தாளில் இயங்குபவனாலே.*

ஒருவனே ஒரு மூவருமானான்
ஒருவனே எல்லா உயிர்களுமானான்
ஒருவனே எல்லா உலகமுமானான்
ஒருவனே என்னை உய்ய வைத்தானே.

*மூவர் = சிவன் பிரம்மா விஷ்ணு. அகார உகார மகாரமென்றும் கூறலாம்.*

அண்ட சராசரம் அவன் வடிவாகும்
அண்ட சராசரம் அவனேயாகும்
அண்ட சராசரத்து அதிசயந் தன்னை
அண்டரும் அறியாது அதிசயித்தாரே.

*அவன் = இறைவன். அண்டர் = தேவர்.*

254 ஒன்றை நினைந்தேன் உள்ளம் ஒடுங்கிற்று
ஒன்றை நினைந்து என் உள்ளம் களித்தது
ஒன்றை நினைந்து என் சிந்தை உயர்ந்தது
ஒன்றை நினைந்து ஒன்றானேனே.

*ஒன்றை = ஐந்தெழுத்தில் இயங்கும் மெய்ப்பொருளை. ஒன்றானேன் = இறைவனோடு இரண்டறக் கலந்தேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255 அஞ்செழுத்தாலே ஆக்கை பிறந்தது
அஞ்செழுத்தாலே ஆன்மா சிறந்தது
அஞ்செழுத்தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத்துள்ளே அடங்கி நின்றேனே.

*ஆக்கை = உடல். அடங்கி = சமாதி நிலையில்.*

அஞ்செழுத்தாலே சஞ்சலம் அழிந்தது
அஞ்செழுத்தாலே பஞ்சம் ஒழிந்தது
அஞ்செழுத்தாலே ஆனந்த மாயிற்று
அஞ்செழுத்துள்ளே அடங்கி நின்றேனே.

*சஞ்சலம் = துன்பம்.*

அஞ்செழுத்தாலே அரன் அடி காணலாம்
அஞ்செழுத்தாலே அகிலத்தை ஆளலாம்
அஞ்செழுத்தாலே அகவினை தீர்க்கலாம்
அஞ்செழுத்தும் என் நெஞ்சம் புகுந்ததே.

*அரன் அடி = கருவில் மிதித்த கமலப் பாதம். அகிலம் = உலகம்.*

255 ஆறாறுக்கு அப்பால் ஆனந்தக் கூத்து
ஆறாறுக்கு அப்பால் ஆனந்த வீடு
ஆறாறுக்கு அப்பால் ஆர்தான் ஈடு
ஆறாறுக்கு அப்பால் சென்றோரைக் கூடு.

*திருமந்திரம் 1608 = வைச்சன ஆறாறும் மாற்றி எனை வைத்து பார்க்கவும்.*

ஒருவனே தெய்வம் என்னும் உண்மையைக் கண்டோம் இந்த
உலகமெல்லாம் நமக்கு உறவாகவே கொண்டோம்
தருமநெறி சறறும் பிசக மாட்டோம்
தாய்தந்தை சொல்லை இனித் தட்டமாட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதையும் போவதையும் எண்ணமாட்டோம்
வாழ்நாளில் ஆசையைப் பேண மாட்டோம்
சற்குரு பாதத்தை இனி மறவோம்
வீணிலே காலத்தைக் கழிக்க மாட்டோம்.

*வருவதையும் போவதையும் = வரப்போகும் காலத்தையும் போனகாலத்தையும்.*

256 பொய்ச் சமய நெறி சொல்லும் போதனை கேளோம்
பஞ்சப் புலன் வழியிற் செல்ல மாட்டோம்
உழுது உண்ணுவோம் இனிப் பழுதெண்ணிடோம்
ஊரெங்குஞ் செல்லுவோம் நல்ல வேதங்கள் சொல்லுவோம்.

*வேதங்கள் சொல்லுவோம் = வேதப்பொருளாய் நிற்கும் உடல், உயிரைப் பற்றி உலக மக்களுக்குச் சொல்லுவோம்.*

ஆன்மா நித்தியம் என்று அறிந்தவர்
அங்கும் இங்குமாய் அலைந்திடார்.

*நித்தியம் = மெய்ப்பொருள்.*

இல்லை உண்டென எடுத்துச் சொல்லொணா
இறைவன் இதயத்தில் என்றும் உள்ளவன்.

*தோற்றம் இல்லை தோற்றம் உண்டு என்று சொல்ல முடியாத.*

ஈசன் திருவடி என்றும் ஏத்துவார்
இறந்து பிறந்திடார் இவர்கள் முத்தரே

*ஈசன் திருவடி = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

உலகமே கோயிலாய் உணர்ந்து கொண்டவர்
உண்மை முழுவதும் என்று காண்பரே.

*ஆத்மா எங்குந் தோற்றங்களாய் நிற்பதால் உலகம் அதன் இல்லம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகமாகிய இறைவன் பாதத்தை
எண்ணுவார் தினம் நண்ணுவாரவர்.

*எண்ணுவார் = நினைத்து ஓதுபவர்.*

259 உள்ளமே கோயில் உயிரே சிவலிங்கம்
வள்ளலுக்கென்றே வழுத்து.

*கோயில்= கோ இல். ஆத்மாவின் இல்லம். உயிரே = ஆத்ம தண்டே.*

ஒன்பது வாயில் உடைய இக் கோவினிலே
அன்புடனே நிற்பான் அரன்.

*கோவினிலே = ஆத்மாவிலே. அரன் = இறைவன்.*

ஔவை உறுவை அரிய திருவள்ளுவரைத்
தெய்வமெனப் போற்றுதலே சீர்.

260 அன்றும் இன்றும் என்றும் உள்ளவன்
என்றும் எங்கள் அகத்துள் நிறையுமே.

*அகத்துள் = நெஞ்சத்துள்.*

ஆக்கையே கோவில் அகஞ் சிவலிங்கம்
பூக்கை கொண்டு பொன் அடி போற்றுதும்.

*ஆக்கை = உடம்பு. கோவில் = ஆத்மாவின் இல்லம். பூக்கை கொண்டு = ஓம் என்னும் பூவால். அடி = அகார எழுத்து.*

உம்பர் தலைவன் உயர் கைலாயன்
செம்பொன்னம்பலத்தே திருநடனம் புரியுமே.

*கைலாயன் = விண்ணவன். பொன்னம்பலம் = சித்தாகாசப் பரவெளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் எழுத்துமாய் நின்றிடும் எந்தை
கண்ணுக்குக் கண்ணாய்க் கலந்து நிற்குமே.

*எந்தை = என்னைப் படைத்த அப்பன் ஆத்மா. கண்ணாய் = நெற்றிக் கண்ணாய்.*

ஓங்காரத்தில் உதித்த உலகெலாம்
ஓங்காரத்தில் ஒடுங்கும் உண்மையே.

*அகார உகார ஓங்காரம் கருவில் மிதித்த கமலப் பாதத்துள் அடங்கி சமாதி நிலை அடையும்.*

கட்டுப்படாத மனத்தைக் கட்டினால்
எட்டுணையேனும் இடுக்கண் இல்லையே.

*இடுக்கண்= இடும்பை, துன்பம்.*

ஞான யோகம் நாங்கள் புரிந்தால்
மோன வீடு அடைவோம் முழுதும் உண்மையே.

*ஞான யோகம் = தவம். மோன வீடு = சமாதி.*

261 தன்னைத் தன்னால் அறிந்த ஞானிகள்
விண்ணில் விளங்கும் வெய்யவன் போல்வார்

*தன்னைத் தன்னால் = தன் ஆத்மாவை அவன் இயங்கும் ஐந்தெழுத்தை ஓதி.*

மணிவாசகந் தரும் மந்திரம் ஓதினால்
பிணி மூப்பில்லாப் பிரமமாகுதும்.

*மணிவாசகம் = ஐந்தெழுத்துள் ஓம் என்னும் மணி வாசகம்.*

அரவார் செஞ்சடை அண்ணல் தன்பாதம்
விரவி நிற்பவர் வீடு பெற்றனரே.

*அரவம் போல் இயங்கும் எங்கும் ஒளியாய் சடைத்து நிற்கும் ஆத்மாவின் கழல் மேவி நிற்பவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்ச நெஞ்சினர் காணா வள்ளலை
அஞ்செழுத்து ஓதி அர்ச்சிப்போமே.

*காணா வள்ளலை = கண்ணுக்குத் தெரியாத கொடை வள்ளலான ஆத்மாவை.*

இளமை மூப்பிலான் எம்பிரானெனத்
தொழுதிட நின்றவன் சோதி சொரூபனே.

*எம்பிரான்= எம்மை படைத்து காத்து நிற்கும் ஆத்மாவை.*

268 அன்னை பிதாக்குரு தெய்வம் தன்னை
அறிந்தேனடி – தங்கமே சற்குருவின் அருளாலே.

*சக்தி, சிவன் குரு, ஆத்மாவாகிய தன்னை.*

இம்மையிலும் மறுமையிலும்
எம்மைவிட்டு நீங்கானடி – தங்கமே
இறப்புப் பிறப்பில்லையடி
ஏத்தி ஏத்தித் தோத்திரஞ் செய்
சூத்திரத்தைக் கண்டு தொழு.

*இம்மை = இப்பிறப்பு. மறுமை = மறுபிறப்பு. ஏத்தி = அகாரத்திலிருந்து உகாரத்துக்கு ஏத்தி.*

ஈயாத புல்லரை நீ
வாயாரப் பாடாதே – தங்கமே
வாழ்நாளை நீ பேணாதே.

*புல்லர் = கீழ்மக்கள்.*

உண்மை முழுதுமென்ற கண்ணைத் திறந்துவிடு = தங்கமே
ஊனாய் உயிராய்க் கலந்த
கோனாரை நீ கொண்டாடு – தங்கமே
கூவிக்கூவி அழைத்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டுக் கொள் நம்பிக்கை வை
கூடாத கூட்டம் கூடாதே.

*கண்ணை = நெற்றிக் கண்ணை. கோனாரை = அரசாளும் ஆத்மாவை.*

269 எண்ணுவார் நெஞ்சில் ஈசன்
நண்ணுவான் நீ அறிந்து கொள் – தங்கமே
நானுமில்லை நீயுமில்லை நாடிக்கொள் தேடிக்கொள்
கூடிக்கூடிப் பாடிக்கொள்.

*எண்ணுவார் = நினைப்பவர். நானும் நீயும் ஒரேபொருள் இறைவனோடு இரண்டறக் கலக்கும்.*

ஏகன் அநேகன் என்று
மோகம் அறச் சொன்ன சொல்லைத் – தங்கமே
மொழியாமல் மொழிந்துகொள் மூட்டிக்கொள் அங்கி
கூட்டிக்கொள் அருள்.

*மோகம் = ஆசை. சொல்லை = ஐந்தெழுத்தை. அங்கி = ஆத்மசுடர்.*

ஐம்பூதம் நீயில்லை
ஐம்பொறி நீயில்லையடி – தங்கமே
அந்தி சந்தி கும்பிட்டி
ஆதாரம் அவன் ஆதேயம் அவன்
நிராதாரமாய் ஆராதனை செய்.

*ஆராதனை = வணக்கம்.*

270 நாதாந்தமென்று நாடிட்டடி நந்தா விளக்கது சிந்தாமணி
நொந்தாரை வந்து ஆதரிக்கும்.

*நாதம் = ஓமெனும் ஒலி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவித்துச் சீவன் முத்தி அடைந்திடு
சிந்தித்திடு தினம் வந்தித்திடு
பந்த பாசம் வெந்துவிடும்.

*முத்தி = ஆணவம், கர்மம், மாயை அற்ற நிலை.*

அஞ்சாதே சென்று கெஞ்சாதே
அஞ்செழுத்தை நெஞ்சிற் கொஞ்சிடடி.

*கொஞ்சிடடி = இடைவிடாமல் ஓதிடடி.*

அன்பு சிவமென்ற ஆன்றோர் திருவாக்கை
இன்பமுடன் போற்றி இருப்பதுவும் எக்காலம்

*அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் திருமந்திரம்.*

இம்மையிலும் மறுமையிலும் எம்மைவிட்டு நீங்காத
செம்மலர்த் தாள் கண்டு சீவிப்பது எக்காலம்.

*இம்மை = இப்பிறப்பு. மறுமை = அடுத்த பிறப்பு. செம்மலர்த்தாள் = கமலப்பாதம்.*

270 ஈசன் திருவடியை என்றும் மறவாமல்
வாசமலர் கொண்டு வணங்குவதும் எக்காலம்.

*ஈசன் திருவடி = கருவில் மிதித்த கமலப் பாதம். அகார எழுத்து. வாசமலர் = ஓம்.*

271 உருகி உருகி உணர்வழிந்து நின்று
பெருகி வரும் அமிழ்தைப் பருகுவதும் எக்காலம்.

*உருகி = மனம் உருகி. உணர்வு அழிந்து = உடல் உணர்வு அற்று. அமிழ்தம் = அமிர்தம்.*

ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்கவெனும்
மோகம் அறுக்கும் மொழி கண்டு உய்வது எக்காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இறைவன் அடி = கருவில் மிதித்த கமலப்பாதம். அதிலிருந்து எழுத்த = உயிர்கள். மொழி = ஐந்தெழுத்து.*

ஓமெனும் எழுத்தினுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற
சோமசுந்தரத்தின் அடி தொழுவது எக்காலம்.

*சோமசுந்தரம் = சந்திரனின் அழகுடையவனின் பாதமே கருவில் மிதித்த இறைவனின் திருவடி.*

நாங்கள் சிவமென்று எண்ண வேண்டும்
துங்காமல் தூங்கிச் சுகிக்க வேண்டும்
ஆங்காரந் தன்னை அகற்ற வேண்டும்
நீங்காத நிட்டையில் நிலைக்க வேண்டும்.

272 எல்லாரிடத்தும் அன்பு வேண்டும்
மேலோரைக் கண்டால் வணங்க வேண்டும்
தன்னைத் தன்னால் அறிய வேண்டும்
பொன்னை மாதரைப் போக்க வேண்டும்
பின்னைப் பிறவியை நீக்க வேண்டும்.

*நாங்கள் சிவமென்று = சீவன் சிவனென்று. நிட்டை = சமாதி.*

273 காயமே கோயிலடி தங்கமே தங்கம்
கடவுள் இருப்பிடங் காண் தங்கமே தங்கம்
ஏகாந்தமாய் இரடி தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்குத் தங்கமே தங்கம்
ஒப்பற்ற வாக்கடி தங்கமே தங்கம்
உடம்பை மறந்து விடு தங்கமே தங்கம்
அப்பனும் அம்மையும் தங்கமே தங்கம்
அகத்திலே வாழ்கின்றார் தங்கமே தங்கம்
கழலடியைப் போற்றிடடி தங்கமே தங்கம்.

*காயம் = உடம்பு. கோயில் = ஆத்மாவின் இல்லம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

274 . அன்பே சிவமாகக் கண்ட பெரியோர்க்குத்
துன்பங்கள் ஏதும் உண்டோ - குதம்பாய்
ஈசன் ஒருவன் எண்ணிப் பணிவார்க்குப்
பாசந்தான் உண்டோடி - குதம்பாய்.

*ஐந்தெழுத்தை ஓதிப் பணிவோர்க்கு.*

275 எங்களை விட்டுப்பிரியாத இறைவர்க்குப்
பொங்கல் புழுக்கலென்ன - குதம்பாய்
ஒன்றாகக் கண்ட உணர்வுடையோருக்கு
மன்றாட்டம் ஏதுக்கடி - குதம்பாய்
ஓம் சிவாயநமவென்று சொல்லுவோர்
தாம் சிவமாவரடி - குதம்பாய்
ஔவியமில்லா அறிவை உடையவர்
தெய்வம் போல் வாழ்வரடி - குதம்பாய்.

*எங்கள் உடம்புக்குள் பிரியாமல் இருக்கும் ஆத்மாவுக்கு பொங்கல் பூசை என்ன. சிவாயநம = இறைவனின் நாமம். ஓம்.*

276 சிந்தித்துச் சிந்தித்துச் சிவமே நாமென்ற எண்ணத்
தந்திடுவாய் நல்ல வரம் தற்பரனே பராபரமே.

*சிந்தித்து = தியானித்து. சிவமே நாம் = சீவன் சிவன்.*

இருவினையை நீக்கி இன்பத்திலே நான் தேக்க
வருவாய் என் உள்ளத்தில் வாழ்வே பராபரமே.

*தேக்க = மூழ்க.*

ஈசனே எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் நிற்கும்
தேசனே சிந்தை தெளிய வைப்பாய் பராபரமே.

*தேசன் = எங்கும் பரந்து நிற்பவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகி உருகி உணரும் மெய்ஞ்ஞானிகளின்
திருக்கூட்டம் சேர அருள் செய்யாய் பராபரமே.

*உருகி = மனம் உருகி.*

ஒன்பது வாய்த் தோற்பைக்கு உணவளிக்க நான் திரிதல்
என்ன மதி தான் இயம்பாய் நீ பராபரமே.

*தோற்பை = உடம்பு.*

ஓங்காரக் கம்பத்தின் உச்சியிலே நிற்கும் உனை
பாங்காய்ப் பணிய அருள் பண்ணாய் பராபரமே.

*ஓங்காரக் கம்பம் = ஆத்ம தண்டு.*

277 எங்கு தேடினாய் இறைவனை நீ
இங்கு காணாமல்
அங்கும் இங்கும் ஓடியே அவதிப்படுகிறாய்
பங்கு போட்டுப்பார்க்கிறாய் பரிதவித்து வாடுகிறாய்.

*பங்கு போட்டு = பல தெய்வங்களாகப் பிரித்து.*

எங்கள் தெய்வம் உங்கள் தெய்வம் என்று வாது பேசினாய்
சாதி சமயமென்று சண்டைப் படுகிறாய்
தத்துவத்தை அறியாமல் சங்கடப்படுகிறாய்
ஓதியும் உணராமல் உண்மை அறிந்தவன் போல்
ஊரெங்கும் சென்று நீ பிரசங்கம் பண்ணுகிறாய்.

*தத்துவம் = மெய்ப்பொருள். ஓதியும் = உரைத்தும். அஞ்ஞானத்தைப் பரப்புகிறாய்.*

279 முக்குறுணிப் பிள்ளையாரை வேண்டடி
மூலமந்திரஞ் செப்பியடி
பக்குவமாய்ப் பேணடி பத்தர் இனத்தோடு கூடடி
திக்குத் திகாந்தமும் கைவசமாச்சுதடி
சீவன் சிவனென்று சிந்தித்துக் கொள்ளடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவ காலம் இத்தருணமடி
பார் ஆதி பூதம் எல்லாம் நீயடி.
துக்கஞ் சுகம் இல்லையடி
சும்மாவிருந்து பாரடி
தர்க்கம் செய்யப் போகாதேயடி
தானே தானாய் இருந்திடடி
செக்கச் சிவந்த கழற்பாதம்
சிரசிற் சுமந்து ஏத்திடடி.

*பிள்ளையார் = பிரணவப் பொருள். மூல மந்திரம் = ஓம். சும்மா இருந்து = சமாதி நிலையில் இருந்து. சிவந்த = ஒளிமயமான. பாதம் = கருவில் மிதித்த பாதம்.*

282 என் ஆருயிரே எனக்கினிய மெய்ப்பொருளே
பின் ஆர் துணையாவார் பெருமானே கண் வளராய்.

*பெருமானே = பரமாத்மாவே.*

வருத்தமற்ற மெய்யடியார் மனத்திற் குடியிருக்கும்
ஒருத்தனே உன்னையன்றி உண்டோ நீ கண்வளராய்.

*மெய்யடியார் = கருவில் மிதித்த பாதத்தை உணர்ந்தவர்.*

காமக் கடல் கடந்து காட்சி பெற்ற நல்லடியார்
சேம நிதியே சிவனே நீ கண்வளராய்.

*காட்சி பெற்ற = சித்தாகாசப் பெருவெளியில் பரமவெளியில் ஆத்ம சோதியைக் கண்ட.*

283 மண்ணாதி பூதமெல்லாம் வகித்த உனையன்றி
எண்ண வேறுண்டோ இறைவனே கண்வளராய்

*மண், நீர், நெருப்பு, வாயு, ஆகாசம் முதலிய பூதங்கள் படைத்த.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தி சந்தி உன்னடியை வந்திக்கும் மெய்யடியார்
சிந்தனையில் ஊற்றே செழுஞ்சுடர் நீ கண்வளராய்

*உன்னடி = கருவில் மிதித்த கமலப் பாதத்தில் எழும் ஐந்தெழுத்தை.*

ஆறாக்கவலையெல்லாம் நீறாக்கி அடிமையெனைப்
பேறாக்கி வைப்பாய் பிரானே நீ கண்வளராய்

*பேறாக்கி = சீவனை சிவனாக்கி. பிரானே = ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்மாவே.*

அருவாய் உருவாய் அருவுருவாய் நிற்கும்
ஒருவனே தெய்வம் உணர்.

*ஒருவனே = ஆத்மாவாகிய ஒருவனே.*

இருப்பு நெருப்புப் போல் எவ்வுயிரின் உள்ளும்
இருக்கும் இறைவன் இயம்பு.

*எல்லா உயிர்களுள் ஒளியாய் நிற்கும் இறைவன்.*

284 பிறப்பு இறப்பு இல்லாப் பெருமானே எங்கள்
சிறப்புடைத் தெய்வமெனத் தேர்.

*பிறப்பு இறப்பு இல்லாத அழியாத ஆத்மா உடம்பைப் படைக்கும் தெய்வம்.*

அறிவுக்கு அறிவாகி அங்கும் இங்கும் எங்கும்
செறியும் ஒன்றே எமக்குத் தேவு.

*எல்லா அறிவுக்கும் மூல அறிவாகி பரந்து செறிந்து நிற்கும் ஐந்தெழுத்தில் இயங்கும் பொருளே எமக்கு இறைவன்.*

285 அஞ்சும் அடக்கும் அறிஞரே இவ்வுலகிற்
சஞ்சலத்தை வென்று உயர்வார் தாம்.

*அஞ்சும் = ஐம்புலனும். உயர்வார் = உய்வார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவோ ரெனப்படுவார் ஆரென்றால் வையத்
துறவோரே யாமென்று சொல்.

*அறவோர் = அறஞ் செய்பவர். துறவோர் = உலகம் துறந்தவர்.*

எண்ணமெலாம் விட்டுவிட்டு ஏகாந்த மோனநிலை
நண்ணுமவரே துறந்தோர் நாடு.

*எண்ணம் = மனத்தில் எழும் யோசனைகள்.*

காம முதலாறுங் களைந்த பெரியோரே
சேமமுடன் வாழ்வார் சிறந்து.

*காமம் = ஆசை.*

287 கொல்லார் பொய் சொல்லார் குறிப்பறியும் இல்லறத்தார்
எல்லார்க்கும் மேலென்று இசை.

*குறிப்பு = ஆத்மா இயங்கும் ஐந்தெழுத்து.*

இன்சொற் தவறார் இழுக்கு உரையார் இல்லறத்தார்
பொன் பெற்று உயர்வார் புகழ்.

*இழுக்கு = குற்றம் குறை. இல்லறத்தார் = இல் வாழ்க்கை வாழ்பவர்.*

அரியதில் அரியது ஆன்மா.

அரியதில் அரியது ஆன்மாவது தான்
பெரியதிற் பெரியது பேதம் அற்றது
கருமை செம்மை வெண்மையைக்கலந்து நிற்பது
பிரிவறியாதது பின் முன் அற்றது
பொறி வழி போகாப் புண்ணியர்க்கு உரியது
நெறியெலாங் கடந்து நிற்கும் நெறியது
அறிவுக்கு அறிவாய் ஆனந்தந் தருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிகுணம் அற்றது கூத்தாட வல்லது
துரியா தீதத்தில் தூய்மையாய் உள்ளது
மரித்துப் பிறவா மாண்பை உடையது
திரிபுரம் எரித்தது தேவர் சிறை மீட்டது
நரியைக் குதிரையாக்கி நயந்தது
விருப்பும் வெறுப்பும் அற்றவர் பாலது
கருப்போகாது என்னைக்காத்து நிற்பது.

*அரிய பொருள்களுக்குள் மிக அரிய பொருள் ஆத்மா. துரிய நிலையில் மேலான ஆதி நிலை மிகத் தூய்மையானது.*

உற்ற துணை

288 சேவித்தும் சென்றிரந்தும் சீவன் சிவனென்று
பாவித்துக் கொண்டாடிப் பாரினிலே - ஆவிக்கே
உற்ற துணையென்று உறுதி கொண்டு நல்லூரில்
நற்றவனை நாடுவோம் நாம்.

*ஆவி = ஆத்மா. நல்லூரில் நற்றவன் = செல்லப்பா சுவாமி.*

நாம் அந்தி சந்தி தொறும் நல்ல சிவநாமம்
சேமமுறப் பாடிச் சிந்தையிலே - காமமுதல்
கட்டறுத்து நிட்டையிலே கங்குல் பகலின்றி
இட்டமுடன் வாழ்வோம் இனிது.

*சிவநாமம் = ஓம் என்னும் ஐந்தெழுத்து. நிட்டை = சமாதி. இட்டமுடன் = இன்பமாய்.*

இனியேது எனக்கு உன் அருள் வருமென்று எண்ணாது
கனிகாய் அருந்திக் கடும் பசிக்குத் - தனியே
இருந்து முத்தி சேர்வதற்கு எண்ணுவதே யல்லால்
பொருந்துவனோ பூவுலகிற் புகுந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தனியே இருந்து = தவம் செய்து ஆணவம் கர்மம் மாயையால் விலகி முத்தி அடைய.*

போது கொண்டு போற்றேன் பொறிவழியே போய் அலையேன்
தீது செயு மனத்தைச் சேர்ந்திடேன்- யாதுக்கும்
அஞ்சேன் அவரிவரை அண்டிடேன் எஞ்ஞான்றுந்
தஞ்சமென்று வாழ்வேன் தனித்து.

*போதுகொண்டு = உடம்பை.*

289 உவந்து வருவான் ஓம் என்று உருவேற்றிப்
பவம் வெந்து போக அருள் பாலிப்பான் - தவம் செய்வார்
கண்டு மகிழுவார் காதலுடன் ஆதரிப்பார்
பண்டு போல் என்றும் பரிந்து.

*ஓம் என்று ஓதி உருவேற்ற ஆத்மா உவந்து வெளிப்படுவான்.*

289 சற்குருவின் பாதத்தைப் போற்று
தன்னைத் தன்னால் அறிந்து தேற்று
நிர்க்குண நிஷ்டையிலே ஏற்று
நீ நான் என்பதை மாற்று.

290 எல்லாரிடத்தும் அன்பு காட்டு
ஏகன் அனேகன் என்று நாட்டு.

*ஐந்தெழுத்தில் இயங்கும் ஒருவனே பலவாய் நிற்கின்றான்.*

291 ஐந்தெழுத்தை நெஞ்சகத்தில் துஞ்சாமல் சொல்லும்
அவர் - தங்கம் துரியத்தில் வாழ்வாரெடி.

*துஞ்சாமல் = வருந்தாமல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதியோடு ஆகமங்கள் சொல்ல முடியாத பொருள் - தங்கம்
கருத்தில் இருத்திடெடி.

*சூக்குமமான அப்பொருளை மனத்தில் இருத்து*

292 கண்ணாலே காணொணாதது கண்ணுக்குக் கண்ணாயுள்ளது
காதாலே கேட்கொணாதது காதுக்கு காதாயுள்ளது
கையாலே எடுக்கொணாதது கைக்குக் கையாயிருப்பது
காலாலே நடக்கொணாதது காலுக்குக் காலாயுள்ளது
வாயாலே பேசொணாதது வாய்க்கு வாயாயிருப்பது
மனத்தாலே எண்ணொதாதது மனத்துள் மனதாயிருப்பது
மூக்காலே முகரொணாதது மூக்குக்கு மூக்காயிருப்பது
தாயுந் தந்தையுமான உருவது தானே தானாய்த் தழைத்து நிற்பது
நன்று தீதிற்கு நடுவாய் நிற்பது
ஞானியர் நெஞ்சில் என்றும் உள்ளது
வேதாந்தம் சித்தாந்தம் வேறொணாதது
நாதாந்த முடிவில் நடனம் புரிவது.

*கண்ணாயுள்ளது = நெற்றிக் கண்ணாய் இருப்பது. காதாயுள்ளது = நாதலோக இசை கேட்கும் காது.*

295 வையகம் முழுதுந் நீங்கள் பாங்கிமாரே
வார்த்தையொன்றும் பேசாதீர் பாங்கிமாரே
கையில் நெல்லிக்கனி போலப் பாங்கிமாரே
கடவுள் நம்மிடம் உண்டு பாங்கிமாரே.

*ஆத்மாவே பல தோற்றங்களாய் பிரபஞ்சம் முழுவதும் இயங்குகின்றது. ஆத்மாவே பரமாத்மா.*

தம்மைத் தம்மால் அறிந்த சாலப் பெரியோர்கள்
தம்மையன்றி வேறொன்றும் தாம் காணார்- பின்னை
பிறப்பும் இறப்பும் இல்லைப் பேய் பித்தர் போல்வார்
மறப்பின்றி வாழ்வார் மகிழ்ந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அறிந்திலேன் இத்தனை காலமும் என்னை அறிந்த
பின் ஏதும் அறிந்திலேன்

– *திருமந்திரம்*

தவத்திற் சிறந்தார் தமதுயிர் போல
உவப்புடனே ஓம்பி ஒரு பொல்லாப்புமில்லையென்றான்
தாள் இணையைப் போற்றிச் சகத்துடன் கூடியே
வாழக் கருதுவதே மாண்பு.

*தாள் இணை = ஆத்ம சக்கரத்தின் இணையடியான அகார எழுத்து.*

298 நாடியோர் இரண்டினாலும் நடந்திடும் வாசி தன்னை
நீடிய சுழுமுனைக்குள் நிறுவினாய் நமச்சிவாய.

*இடகலை பிங்கலையில் ஓடும் பிராண வாயுவை சுழுனை நாடியில் நிறுவினாய்.*

காலை நீ தூக்கி ஆடுங் காட்சியைக் கண்ட பேர்கள்
வேலை சூழ் நிலத்தில் வந்து வீழ்வரோ நமச்சிவாய.

*இடநாடியைத் தூக்கி சித்தாகாசப் பரவெளியில் ஆடும் ஒளியைக் கண்டவர்களுக்கு மறுபிறப்பு உண்டோ?*

காயமே கோயிலாகக் கண்டிடும் மாந்தருக்குத்
தாயகம் நீயே யன்றோ சங்கரா நமச்சிவாய.

*உடம்பே இறைவனுக்கு இல்லம். தாயகம் = பிறந்த வீடு.*

காயமே கோயில்

காயமே கோயில் கடிமனம் அடிமை
நேயமே பூசை நீ இதை அறிந்தே
உபாயமாய் நடந்தால் உனக்கொரு குறைவிலை
ஆய நான் மறையும் இப்படி அறையும்.

*நான்கு வேதங்களும் இந்த உண்மையைக் கூறுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளளவேனும் பிரியா இறைவனைக்
கள்ள மனத்தவர் காண மாட்டார்
உள்ளமே கோயில் உயிரே விளக்காம்
உள்ளே உள்ள உண்மை உதிக்கும்.

*பிரியா இறைவனை = ஆத்மாவை.*

299 சாதனை செய்வோர் தன்னை அறிவார்
பேத புத்தியைத் தவிர் பெம்மான் அருளால்
நீர்மேற் குமிழி இவ் ஆக்கை வாழ்வே
ஆதலால் அன்பர் பணியே அறமாம்.

*ஆக்கை = உடம்பு. அன்பர் = ஆத்மா. சாதனை = தவம்.*

299 பணியப் பணியப் பாவம் அகலும்
அணிமா வாதியாம் சித்திகள் எய்தும்
பிணியும் அகலும் பேரின்பம் வாய்க்கும்
துணிவுண்டாகும் சொல்லொணாச் சுகமே.

*பணிய = ஐந்தெழுத்தை ஓதிப் பணிய. சித்திகள் = வல்லமைகள்.*

எல்லா உயிரையும் சிவனென எண்ணி
நல்லறம் புரிவோர் நாடுவார் பரகதி
அல்லல் அறுப்பார் ஆனந்தம் பெறுவார்
தில்லை நடேசனைச் சேருவார் திண்ணமே.

*சீவன் சிவனென நினைத்து. நல்லறம் = தவம். தில்லை நடேசன் = விண்ணுலகில் இரண்டறச் சேருவர்.*

ஓடவும் வேண்டா உலரவும் வேண்டா
பாடவும் வேண்டா பணியவும் வேண்டா
தேடவும் வேண்டா சிந்திக்க வேண்டா
ஆடகப் பொன்னடி சூடிய காலை.

*பொன்னடி = கருவில் மிதித்த திருப்பாதம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படுமென
வழுத்திய பெரியவன் மறைமொழி தன்னை
அழுத்த அழுத்த ஆனந்த ஈஸ்வரன்
வழுத்தொணா மலரடி வாழ்த்தி வாழ்வோமே.

*மறைமொழி = ஆத்ம இயங்கும் ஐந்தெழுத்து. மலரடி = கருவில் மிதித்த கமலப்பாதம்.*

300 என்னை எனக்கு என்னாலே அறிவித்த எம்பெருமான்
அன்னையினும் மிக இனியன் ஆருயிருக்கு உறுதுணைவன்
பொன்னை நிகர் மேனியான் பூங்கமலத்திருத் தாளான்
தென்னை பனை சேரிலங்கை மாநகரிற் கண்டேனே.

*எம்பெருமான் = என் ஆத்மா. பொன்னை நிகர் = ஒளிமயமான. கமலத்திருத்தாளான் = கருவில் மிதித்த கமலத் தாளில் இருப்பவன்.*

30 பொன்னாசை மண்ணாசை அகப்பேய்
புத்தி சிதைக்குமடி
மன்னான மன்னவனை - அகப்பேய்
மனத்து நினைத்திடடி.

*மெய்ப்பொருளை உணரவிடாமல் புத்தியை சிதைக்கும். மன்னவனை= எம்மை ஆளும் ஆத்மாவை.*

கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தைக்
கொண்டு வா சித்தப்படி
அஞ்சாதே ஒருவருக்கும் - அகப்பேய்
ஆண்டவன் உன்னுள் அடி.

*இறைவன் உனது ஆத்மாவுக்கு இணையடியாய் நிற்கின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஞ்சாதே தூங்காதே அகப்பேய்
துரிய நிலை சாரடி
ஒன்றுமற நில்லடி = அகப்பேய்
ஓமென்று செபித்திடடி.

*துரிய நிலை = ஆத்ம தண்டில் மனத்தைப் பதித்து பெறும் நிலை. ஓமென்று செபி = ஐந்தெழுத்தை உணர்வால் ஓது.*

என்றும் இருந்த படி அகப்பேய்
இருந்த பொருள் நீ தாண்டி
குருநாதன் சொல்லை – அகப்பேய்
தூய்மையாய் போற்றிடடி.

*பொருள் = ஐந்தெழுத்தில் இயங்கும் மெய்ப்பொருள்.*

தானான தத்துவனை அகப்பேய்
சார்ந்து நீ வாழ்ந்திடடி
மோன நிலை நீங்காதே – அகப்பேய்
முத்தியுடன் கைவசமே.

*தானான தத்துவனை = ஆத்மாவாக நிற்கும் மெய்ப் பொருளை. மோன நிலை = சமாதி நிலை.*

302 கஞ்சா அபின் தின்னாதே அகப்பேய்
கருணை அகத்தே யடி
பஞ்சாட்சரத்தை நெஞ்சில் – அகப்பேய்
பக்குவமாய்ப் போற்றிடடி.

*பஞ்சாட்சரம் = ஐந்தெழுத்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா நீ

303 அன்பினுருகி அவனே தானென்று என்றே
இன்பக்கடலில் இளைப்பாறித் - துன்பமற்று
எந்நாளும் வாழ்வாய் இறப்பும் பிறப்புமில்லைச்
சொன்னேன் இதுவே சுகம்.

*அவனே தானென்று = சிவனே சீவனென்று. இன்பக் கடல் = சித்தாகாசம்.*

ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியு நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை ஆன்மா நீ - உண்மையிலே
செம்மையாய் வாழ்ந்து சீவன் சிவனென்ற முழு
உண்மை அறிவாய் உகந்து.

*ஆன்மாவே சிவனென்னறு உண்மை அறிந்து உலகில் வாழ்.*

உகந்து மனங்குவிந்து ஒன்றுக்கும் அஞ்சாது
அகந்தை அவா வெகுளியாற்றிச் - சகந்தனிலே
தாமரையிற் தண்ணீர் போற் சாராமற் சார்ந்து நற்
சேமமொடு வாழ்வாய் தெளிந்து.

*அகந்தை = ஆணவம். சகந்தனிலே = உலகிலே. தாமரை இலையிற் தண்ணீர் முட்டியும் முட்டாமலும் இருப்பது போல் உலகில் வாழ்.*

304 எந்நாளும் நல்லூரைவலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே
அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம்மெத்த உணடு
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே.

*ஆசான் = சற்குரு செல்லப்பா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

304 ஊனும் அவனே உயிரும் அவனே.
நானும் அவனே நீயும் அவனே
கோனும் அவனே குருவும் அவனே
மானும் வார்த்தை பிறிதறியேனே.

*அவனே = இறைவனே.*

தில்லையம்பலத்தாடுஞ் சேவடி துணை ஓம்
எல்லையில்லா அருள் அருளிய அடி துணை ஓம்
வல்லை வந்தெனை ஆண்டவன் அடிதுணை ஓம்
கல்லை நேர் மனம் கரைத்தவன் அடிதுணை ஓம்.

*தில்லையம்பலம் = சித்தாகாசம் சிற்றம்பலம்.*

அங்கிங்கு எனாமல் எங்குமான பொருள்
அறிவுடையோர் தேடி அறியும் பொருள்
பங்கிலே பாதி பெண்ணாய்த் தோன்றும் பொருள்.

*ஆத்மாவில் ஒரு பாதி பராசக்தி.*

306 நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே
இரவு பகல் காணேனெடி.

*நல்லூரான் திருவடி = ஆத்மாவின் இணையடியான அகார எழுத்து.*

ஆன்மா அழியாதென்று அன்று எனக்குச் சொன்ன மொழி
நான் மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரன் தஞ்சமெடி.

*மொழி = ஆன்மா இயங்கும் ஐந்தெழுத்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

308 நில்லென்று சொல்லி மனத்தை நிறுத்துவேன்
நேர்மையான வழியிற் செலுத்துவேன்
வல்லவம் பேசி யாரையும் வெல்லுவேன்
வாழ்நாள் ஆசை வீணெனச் சொல்லுவேன்

*வாழ்நாள் = உலக வாழ்வு*

ஆன்மா நித்தியம்

308 அநுதினம் சாதனை செய்யச் செய்ய
ஆனந்தமான மோட்ச வீட்டை
அடைவோம் இதிலோர் ஐயமும் இல்லை – ஆனால்
அடக்கமும் பொறுமையும் வேண்டுதுமே.

*சாதனை = ஐந்தெழுத்தை ஓதித் தியானம் செய்வது.*

312 ஈசன் ஒருவனென எண்ணியெண்ணியே உருகிப்
பூசை செய்ய என்பின் புறப்படுவாய் என்மனமே.

*பூசை செய்ய = ஐந்தெழுத்தை ஓத.*

ஓடும் இருநிதியும் ஒன்றாகக் காணவைத்த
கேடுபடாத் திருவடியைக் கிட்டவா என்மனமே.

*இடகலை, பிங்கலையைச் சுழுமுனையில் ஒன்றாகக் காண வைத்த திருவடி = கருவில் மிதித்த பாதம்.*

எல்லாம் நீயே

313 அப்பனும் அம்மையும் நீயே அரிய சகோதரர் நீயே
ஒப்பில் மனைவியும் நீயே ஓதரும் மைந்தரும் நீயே
செப்பில் அரசரும் நீயே தேவாதிதேவரும் நீயே
இப்புவி எல்லாம் நீயே என்னை ஆண்டதும் நீயே.

*ஐந்தெழுத்தில் இயங்கும் நீயே சகல தோற்றங்களாய் சராசரங்களாய் நின்று என்னை ஆளுகிறாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் ஆதியோர் நீயே இருடி கணங்களும் நீயே
சந்திரன் சூரியன் நீயே தாணுவாய் நின்றதும் நீயே
மந்திர தந்திரம் நீயே மறுமையும் இம்மையும் நீயே
சுந்தரமாவதும் நீயே துணையாயிருப்பதும் நீயே.

*ஐந்தெழுத்துச் சக்கரத்தில் இயங்கும் நீயே இவை எல்லாம் படைத்து நிற்கின்றது.*

உண்மையும் இன்மையும் நீயே ஊனும் உயிர்களும் நீயே
அண்மையும் சேய்மையும் நீயே அன்பாயிருப்பதும் நீயே
பண்ணும் இசையும் நீயே பாட்டிற் பொலிவதும் நீயே
எண்ணும் எழுத்தும் நீயே என் துணையாவது நீயே.

314 எல்லாப் பொருள்களும் நீயே ஏந்திழை பங்கனும் நீயே
வல்லமை உள்ளதும் நீயே வாழ்நாட்களுமாவதும் நீயே
பல்லோர் புகழ்வதும் நீயே பரிமேல் வந்ததும் நீயே
நல்லோர் உள்ளமும் நீயே நானாய் இருப்தும் நீயே.

*ஐந்தெழுத்தில் இயங்கும் நானே சகல படைப்புகளுக்கும் காரண கர்த்தா. என்னையன்றி ஈசன் வேறில்லை.*

ஏற்றில் வருவது நீயே என் புகழாவது நீயே
கூற்றை உதைத்தது நீயே குருவாய் வருவது நீயே
சாற்ற அரியது நீயே தானாய் இருப்பது நீயே
போற்ற அரியது நீயே புந்தியில் உள்ளதும் நீயே.

*ஏற்றில் அகார உகார ஏணியில் இயங்குவதும் நானே,*

ஒன்றாய் இருப்பதும் நீயே ஊர் பேர் இல்லாததும் நீயே
நன்றாய் இருப்பதும் நீயே நாளையாவதும் நீயே
குன்றுங் கடலும் நீயே குவலயமெல்லாம் நீயே
மன்றுள் நிற்பதும் நீயே மாசில்லாததும் நீயே.

*மன்று = சித்தாகாசப் பரவெளியில் ஒளியாய் ஆடும் பெருவெளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமெனும் ஒண்பொருள் நீயே உருவமற்றதும் நீயே
ஆமென நிற்பதும் நீயே அல்லவென்பதும் நீயே
தாமதமற்றதும் நீயே சத்தியம் உள்ளதும் நீயே
சேமம் உள்ளதும் நீயே சீவர்கள் எல்லாம் நீயே.

*ஓமெனும் இறைநாமத்தை ஓதும் பொருள் ஆத்மா. சத்தியம் = மெய்ப்பொருள்.*

ஔவியம் அற்றதும் நீயே ஐந்தெழுத்தானதும் நீயே
நவ்வி உடையதும் நீயே நானாய் நிற்பதும் நீயே
செவ்விய மனமெலாம் நீயே சிந்தையில் நிற்பதும் நீயே
திவ்வியமாவதும் நீயே சீடனுங் குருவும் நீயே.

*ஔவியம் = பொய். திவ்வியம் = சிவமயம்.*

316 எல்லாந் தருந் தெய்வம் எல்லாமாகுந் தெய்வம்
எல்லாந் தொழுந் தெய்வம் எந்தெய்வம் – நில்லாநீர்
செஞ்சடை சேர் தெய்வம் சிரஞ்சீவியான தெய்வம்
அஞ்செழுத்தான தெய்வமாம்.

*எந்தெய்வம் = என் ஆத்மா.*

ஓம் தத்சத்

318 சிவத்தினை வளர்க்கும் பாக்கியம் எமக்குச் சித்தித்த இனிமேலே
தெய்வம் வேறே உண்டென எண்ணும் சிந்தையும் இறந்ததுவே.
அவத்தினிற் செல்லும் மனத்தினை வெல்வோம் ஐம்பொறி
வழிச் செல்லோம்
அழியாமெய்ப்பொருளாகிய ஆன்மா அறிவோம் நாம் நன்றாய்
தவவழிச் செல்வோம் குருமொழி கொள்வோம் தன்னைத்
தான் அறிவோம்
உண்மை முழுதும் நீ ஓதுக தினமும் ஓம்தத்சத் ஓம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

319 எண்ணியெண்ணிப் பணிவார் நெஞ்சே ஈசன் உறை கோயில்
இருந்தும் கிடந்தும் நடந்துந் தொடர்ந்தும் ஏத்திப் பணிவோமே
மண்ணில் வந்து பிறந்ததும் வாழ்ந்ததும் மாயை இதனை
மாதவர் அறிவார் மற்றவர் அறியார் மதியாதே இதனை
இயைந்த படி நீ நடந்துகொள் என்றும் ஏத்துக ஓம் தத்சத் ஓம்

*சிவத்தினை = ஆத்மாவை. அவம் = அஞ்ஞானம். குருமொழி = ஐந்தெழுத்து. தத்சத் = நானே மெய்ப்பொருள். ஓம் = ஆத்மா உணர்வால் உரைக்கும் இறைநாமம்.*

## கிளிக்கண்ணி

321 ஊன் பொருளும் ஒழியுமடி – கிளியே
உலகமெலாம் அழியுமடி
சேண்பொலியுந் திருவடியைக் – கிளியே
சிந்தையிலே போற்றிடடி.

*சேண் = மெய்யான பலாபலன்கள்.*

சங்கோசை கேட்குதடி – கிளியே
தாளமேளம் முழங்குதடி
எங்கெங்கும் வெளிச்சமடி – கிளியே
ஏந்திழாய் நடந்து வாடி.

*ஆத்மாவைத் தியானம் செய்தால் அவன் விண்ணுலகம் ஏறி சங்கொலி தாளமேளம் கேட்பான்.*

322 மாறிப் பொறிவழி போய்க் – கிளியே
மாறாட்டம் கொள்ளாதே
ஆறி நடந்து வாடி – கிளியே
அதிசயங்கள் மெத்தவடி.

*மாறாட்டம் = மனக்குழப்பம். அதிசயங்கள் = காணாத காட்சிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்முட்டிப் படிமேலே - கிளியே
செல்லப்பன் என்ற சீமான்
ஆர்வமுடன் இருக்கிறான்டி - கிளியே
அங்கு போவோம் வந்திடடி.

322 கிட்ட நெருங்கையிலே - கிளியே
கிடுகிடென்று நடுங்குதடி
முட்டாளைப் போலே அவன் - கிளியே
முகமும் விளங்குதடி.

*விண்ணுலகில் பரஞ்சோதியை அணுக கிடுகிடென்று நடுங்கும். முகம் = சோதி வடிவம்.*

பித்தனெனப் பலபேரும் - கிளியே
பேசிப் பேசி இகழ்வார்கள்
எத்தினாலும் அவன் மனமோ - கிளியே
எள்ளளவுங் கலங்காதே.

*உடல் உலகத்தோடு ஒட்டி வாழாதவனை பித்தனென்று பேசுவார்.*

பத்தியுடன் வந்திடடி - கிளியே
பார்த்தவுடன் அஞ்சாதே
வித்தகஞ் சேர் திருவடியில் - கிளியே
விழுந்து நீ கும்பிடடி.

*வித்தகம் = ஞானம். திருவடி = கருவில் மிதித்த கமலப் பாதம். குருபாதம்.*

323 ஆரறிவாரென்று சொல்லிக் - கிளியே
அதட்டுவான் அஞ்சாதே
பார் அறிந்த பித்தனடி - கிளியே
பட்சமுடன் பணிந்து நட.

*தனது குரு செல்லப்பா சுவாமியைப் பற்றிக் கூறுகின்றார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் பசுங் கிளியே – கிளியே
பார்த்தாயோ கதவுகளை
அச்சமின்றி மூடிவிட்டார் – கிளியே
அபிடேகம் ஆகுதடி.

*அபிடேகம் = கண்ணை மூடி பிரணவத் தண்டுக்கு ஓம் என்னும் பொருளால் அபிசேகம் செய்தல்.*

324 ஏக மனதாகிக் – கிளியே
எல்லாரும் நிற்கையிலே
வேகமுடன் கதவுகளைக் கிளியே
வேதியர்கள் திறந்து விட்டார்

*வேதியர் = வேதப்பொருளான ஆத்மாவை உணர்ந்தவர்கள்.*

324 அஞ்சடுக்குத் தீப முதல்– கிளியே
அடுக்கடுக்காய்த் தீபமெல்லாம்
அந்தணர்கள் காட்டுகிறார் – கிளியே
அன்புடனே கும்பிடடி.

*சித்தாகாசத்தில் ஆத்ம சோதி பலவித தீபங்களாய் வெளிப்படும்.*

அத்தசாமப் பூசைக்கு நாம் – கிளியே
ஆரணங்கே நிற்பமென்றால்
மெத்த நேரமாகுமடி – கிளியே
வீட்டிலே ஆளில்லையடி.

*அத்தசாமம் = நடுச்சாமம். பூசை = தியானம்.*

ஓடாதே வழுக்குமடி – கிளியே
உரைத்திடடி ஐந்தெழுத்தை
வாடாதே வீட்டு வாசல்– கிளியே
வந்தோமே திறந்திடடி.

*வீட்டுவாசல் = மோட்சவாயில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திநெறி

325 நல்லூர்ப் பதியிலே ஞானநெறி காட்டச்
செல்லப்பன் என்னும் திருப்பெயரான் பொல்லாப்பிங்கு
ஒன்றுமே இல்லையென ஓதினான் ஓதயான்
கண்டு மெய் தேறினேன் காண்.

*ஞான நெறி =ஆத்ம ஞானம். மெய் தேறினேன் = மெய்ப்பொருள் உணர்ந்தேன்.*

காண்பதெலாம் பொய்யென்று காட்டினான் காட்ட யான்
வீண்பாவனையெல்லாம் விட்டொழிந்தேன் - மாண்புடனே
நீயும் மனத்தில் நினைத்தால் வினையெல்லாம்
மாயும் இதை நீ மதி.

*காண்பதெல்லாம் = தோற்றங்களெல்லாம் அழியும் பொருட்கள். நினைத்தால் = ஐந்தெழுத்தை ஓதினால்.*

மதிக்கும் மதிகொடுக்கும் மாநிலத்தை ஆள
விதிக்கும் விமலன் அடி சேர்க்கும் - துதிக்கும்
அடியவர்கள் துன்பம் அகற்றி அருளுங்
கடிமலராற் பூசித்துக் காண்.

*விமலன்= மலமற்றவன். அடி = கருவில் மிதித்த கமலப் பாதம். அடியவர்கள் =அடியை அறிந்து உணர்ந்தவர்கள். கடிமலர் = ஓம் என்னும் அழியாத பூ.*

325 காணுவார் தொண்டர் கருதுவார் சொன்ன சொற்
பேணுவார் பேணிப் பெரிதுவப்பார் - சாணு
வளர்க்க வழி தேடி வையத்து அலையார்
கலக்கம் அறக் கண்டு களி.

*தொண்டர் = ஐந்தெழுத்து ஓதுபவர். சாணு = சாண் வயிறு. கண்டு களி = ஆத்மாவைக் கண்டுகளி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களி பெருகுங்காமக் குரோதமெலாங் குன்றும்
தெளிவுண்டாஞ் சித்தத்தில் தீமை - விளியுமே
ஆர் அறிவார் என்று அதனை அந்தி சந்தி சிந்தித்தாற்
பேர் அறிவு தான் வருமே பின்.

*களி பெருகும் = இன்பம் பெருகும். பேர் அறிவு = இறை ஞானம்.*

பின்னும் முன்னும் இல்லைப் பிரமமே உள்ள பொருள்
என்னும் மொழி தம் இதயத்தில் - மன்னுபவர்
சாந்தம் அடக்கம் தயவுடனே வாழ்ந்து இனிது
சேர்ந்திடுவார் முத்தி தெரி.

*பிரமமே ஆத்மாவாய் எங்கும் வியாபித்து நிற்கின்றான். மொழி = ஐந்தெழுத்து. தெரி = தெரிந்துகொள்.*

### அறிவை அறிவாலே அறி

326 அறிவை அறிவாலே அறியெனப் பெரியோர் தாம்
அன்று சொன்னார் அதை ஐயையோ மறந்து
பொறிவழிப் புகுத்துதேபொல்லாத மனம் ஐயோ
போக்குவரவில்லாப் புண்ணியனே கண்பாராய்
கிறியும் கீழ்மையும் செய்து கீழும் மேலும் சென்று
நெறிவழிச் செல்லாமல் நெஞ்சு கலங்குதே
நீயே நானென எண்ணி நேசிக்க எனக்கு உன்றன்
நிச சொரூபங் காட்டி நேரில் முன் வாராயோ.

*அறிவை அறிவான ஐந்தெழுத்தை ஓதி அறி. போக்கு வரவு = இறப்பு பிறப்பு. கீழும் மேலும் = பிராண வாயு இறங்குவதும் ஏறுவதுமாய் இயங்குகிறது. நிச சொரூபம் = நிலையான அழியாத சோதி ரூபம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சற்குரு தரிசனம்

327 சற்குரு தரிசனம் சகல பாக்கிய சுகம்
தாள் இணை பணி நீ தினம்
தாம் தன்னை அறியுமே சாந்தமும் செறியுமே
பேரன்பு பெருகிவிடும் பேதைமை கருகிடும்
பிரியாப் பிரிய மெல்லாம் பேசாமல் அகன்றிடும்
ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசா பாசம் அகலும் நேசானுபூதி வரும்
தேவாதி தேவர்களும் செய்வார் பணி வந்து
சீவன் சிவனென்னும் தெளிவும் உண்டாகுமே.

*தாள் இணை பணி = கருவில் மிதித்த ஆத்ம சக்கரத்தோடு இணை அடியான கமலப்பபாதத்தை வணங்கு. இதுவே ஐந்தெழுத்தாய் விரிந்த அகார எழுத்து.*

### வந்தனை செய்

329 உண்ணாதே உறங்காதே ஊருராய்த் திரியாதே
பெண்ணாசை வையாதே – தம்பி பிரமத்தை அறிந்திடடா.

*பிரமம் = எம்மைப் படைத்த ஆத்மா.*

கண்ணாரக் கண்டிடடா காலை மேல் ஏற்றிடடா
விண்ணாணம் பேசாதே – தம்பி வேறு பொருள் இல்லையடா.

*ஆத்ம சோதியை நெற்றிக் கண்ணால் காண். காலை = பிராணவாயுவை. இது ஒன்றே மெய்ப்பொருள்.*

மண்ணாசை வையாதே தம்பி மலரடியைப் போற்றிடடா
அன்னை பிதாக் குருவை – தம்பி அன்புடனே போற்றிடடா.

*மலரடி = கமலப்பாதம்.*

வலம் இடமாய்ச் செல்லுகின்ற வாயுவை நீ தம்பியடா
பலம் உனக்கு வந்து விடும் – தம்பி பற்றற்று நின்றிடடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம் இடம் = பிங்கலை இடகலை. தம்பியடா = சுழுனைக்குமாற்று.

குலநலம் பாராதே கோபம் நெஞ்சில் வையாதே
தலமாறும் தாண்டிடடா தம்பி தனிமையை நீ நாடிடடா.

தலமாறு = ஆறுமுகங்களான மூலாதாரம். சிவஸ்தித் தானம், மணிப்புரம், அனகத்த, விசுத்த அஞ்ஞை. இவற்றைத் தாண்டி சகஸ்றாறவில் தற்பரமாய் நில்லடா.

233 அவனே நானென்று சொல்லித் தியானஞ் செய்வாய் தினமும்
ஆசைசெயலலாம் ஒழியும் ஈசன் அருள் பொழியும்.

அவனே = இறைவனே. ஓமெனும் சிவநாமத்தை ஓதித் தியானி.

அஞ்சாதே அஞ்சாதே பஞ்சாய்ப் பறக்கும் பாவம்
பஞ்சாட்சரத்தை நெஞ்சில் துஞ்சாமலே செபி.

பஞ்சாட்சரம் = பஞ்ச + அக்சரம் = ஐந்தெழுத்து.

கொஞ்சங் கொஞ்சமாய் மனத்தை கூடுமட்டும் அடக்கு
குருநாதன் திருவடியைக் கும்பிட்டு நீ தொடக்கு
கோபம் பொறாமை தள்ளு கொலை களவை எள்ளு
கூடிப்பாடி ஆடு சிவனடியாரோடு.

தொடக்கு = ஐந்தெழுத்தை ஓதி ஆத்ம தியானத்தை தொடக்கு.

பலபலவான சித்தி பாரினிற் கைகூடும்
பத்திநெறி விட்டிடாதே பத்தர் சொல்லைத் தட்டிடாதே.

பத்திநெறி = பக்திபுரியும் மார்க்கம் ஐந்தெழுத்தை ஓதுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கலம் அடைக்கலம் அப்பனே.

342 அளவிலா ஒன்றே அன்பர்கள் அன்பே
உலகெலாம் நிறைந்த ஒண்சுடர் ஒளியே
மலமிலா முதலே மாசிலா மணியே
நிலம் நீர் தீ கால் வானாய் நின்ற
பொன்போல் மதியம் பொதிந்த சடையாய்
அடைக்கலம் அடைக்கலம் அப்பனே
படைக்கலம் நின் திருப் பஞ்சாக்சரமே.

*அளவிலா = நீளம் அகலம் காணாத. ஒன்றே = ஓமென்று உரைக்கும் ஆத்மாவே. கால் = வாயு. சடையாய்= எங்கும் சடைத்து நிற்பவனே. நின் திருப்பஞ்சாக்கரம் = ஆத்மா இயக்கும் ஐந்தெழுத்து.*

தன்னை அறிந்தேன் தான் அவனானேன்.

342 அகண்ட வெளியிலே அப்பனும் அம்மையும்
அகண்ட வெளியிலே ஆருயிர் எல்லாம்
அகண்ட வெளியிலே அஞ்சு பூதங்களும்
அகண்ட வெளியிலே யான் இருந்தேனே.

*அகண்ட வெளி = சித்தாகாசப்பரவெளி. அப்பனும் அம்மையும் = சிவனும் சக்தியும் அகாரமும் உகாரமும்.*

அண்டமும் பிண்டமும் அகத்திற் கண்டேன்
அண்டமும் பிண்டமும் அகமாய்க் கண்டேன்
அண்டமும் பிண்டமும் அகத்திற் கண்டிலேன்
அண்டமும் பிண்டமுமாய் இருந்தேனே.

*பிண்டம் = தூல உடம்பு. தானே சகல அண்டங்களையும் பிண்டங்களையும் படைத்து கலந்து இருக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

343 அன்னை பிதாக் குருவாகிய அமலன்
என்னை வளர்த்தான் என்னோடு இருந்தான்
முன்னை வினையெலாம் முடித்த முதல்வன்
தன்னை அறிந்தேன் தான் அவனானேன்.

*தான் அவனானேன் = என் சீவன் சீவனாயிற்று.*

அருந்தவர் நெஞ்சில் இருக்கும் அமிர்தம்
இருந்தபடியே இருக்கும் இன்பம்
பொருந்திய வல்வினை போக்கும் மருந்து
அருந்துயர் நீக்கி அறிந்தேன் யானே.

*அமிர்தம் = யோகிகள் பெறும் தேனூறல். மருந்து = ஓம் என்னும் இறைநாமம்.*

அச்சந் தீர்த்தெனை ஆண்ட சோதி
பொய்த்தவர் நெஞ்சிற் போகா நீதி
மெய்ச் சமயத்தில் விளங்கும் ஆதி
வைச்சனன் திருவடி வாழ்ந்தேன் யானே.

*சோதி = சித்தாகாசத்தில் தோன்றும் ஆத்மசோதி. போகா நீதி = இயங்காத "ஓம்" என்னும் திருநாமம், திருமந்திரம்.*

## தாளம்போடு

344 தாளம் போடு தாளம் போடு தாளம் போடு
தன்னை அறிந்தோமென்று சொல்லித் தாளம் போடு.

*தாளம் போடு = பிராண வாயு அகாரத்திலிருந்து உகாரத்துக்கு எழுந்து இயங்கும் தாளம்.*

ஆழம் நீளம் இல்லையென்று தாளம் போடு
அவனே நாமென்று சொல்லித் தாளம் போடு.

*ஆத்மாவுக்கு ஆழம் நீளம் இல்லை. அவனே நாம் = சிவனே சீவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நாம் நாம் என்று சொல்லித் தாளம் போடு
நம்மை அறிந்தோமென்று தாளம் போடு.

*நம்மை = ஆத்மாவை. அறிந்தோம் = உணர்ந்தோம்.*

ஓம் ஓம் என்று சொல்லித் தாளம் போடு
உள் பொருள் நாம் என்று சொல்லித் தாளம் போடு.

*ஆத்மா ஐந்தெழுத்தில் நின்று அறையும் ஓம் என்னும் இறை நாமம் உள்பொருள் = உடம்புள் இயங்கும் மெய்ப்பொருள்.*

**உண்மை முழுதும் அறிந்திடடா**

345 ஒரு பொல்லாப்புமில்லையெடா தம்பி
உண்மை முழுதும் அறிந்திடடா
வருவது வந்து போகட்டும் - சாட்சியாய்
வையகத்தில் நீ வாழுவாய் மாட்சியாய்.

*ஆத்மாவுக்கு ஒரு பொல்லாப்புமில்லை. அவனே சகல தோற்றங்களையும் படைத்த ஒரே மெய்ப்பொருள்.*

சர்வம் பிரம மயமெடா தம்பி
சந்தேகமில்லை நம்பு நீ தம்பி
மர்மம் இது பெரும் மர்மமெடா
மகத்துக்கள் கண்ட மர்மமெடா.

*பிரமனே ஆத்மாவாக நின்று சகல படைப்புளாய் நிற்கின்றான். மர்மம் = அதிசயம்.*

அப்படியே யுள்ள பொருளெடா தம்பி
ஆசையை நீக்கி அறிவாய் நீ நம்பி
ஒப்புவமையும் இல்லாப்பொருளெடா
உள்ளும் புறம்பும் உள்ள தெடா.

*ஒப்புவமை = சமமான, ஒப்பான.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

345 எல்லாச் சமயமும் சொல்லுமெடா – தம்பி
ஏத்தி ஏத்தி வணங்கிடெடா
உல்லாசமாகத் திரிந்திடெடா தம்பி
ஓம் சிவாயநம வென்று ஓதெடா.

*ஏத்தி = அகார உகாரத்தில் ஓம் ஓம் என்று ஏத்தி. சிவாயநம = ஐந்தெழுத்தே இறைநாமம்.*

கூறும் நாமுதல் எல்லாம் அதுவெடா
கூர்ந்து பார்த்துக் கும்பிடெடா
ஆறுமுகமும் ஐந்து முகமும்
ஐம்பெரும் பூதமும் அதன் வடிவே.

*ஆறுமுகம்= மூலாதாரம் சிவஸ்தித்தானம். மணிப்புரம், அனகத்த, விசுத்த அஞ்ஞை ஆகிய ஆறு முகங்களும். ஐந்து முகம் = அகாரம் இகாரம் உகாரம் ஓங்காரம் மகாரமாகிய ஐந்து எழுத்துகளும். அதன் வடிவு = ஆத்மாவின் தோற்றம்.*

அப்படியே உள்ளது.

346 அப்படியே உள்ளதென அத்துவிதப் பொருளைச்
செப்பினான் செல்லப்பன் தேர்.

*அத்துவிதப்பொருள் = ஐந்தெழுத்துப் பொருள்.*

நீறணியான் காவி உடை அணியான் நீணிலத்தில்
தேறவைத்தான் என்முன் சிரித்து.

*நீணிலத்தில் = நீள் நிலம், விண்ணுலகம் ஏறும் சுழுனை.*

பாசத்தால் வெந்து நொந்து பாழாகப் போகாமல்
நேசத்தால் ஆக்கினான் என்னை நினை.

*என்னை நினை = ஆத்மாவை நினை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தனென்றும் பேசுவார் பேயனென்றும் சொல்லுவார்
சித்தனென்றும் சொல்லுவார் சிலர்.

*சித்தன் = ஞான அறிவுள்ளவன்.*

346 நரிபோல் உழலுவான் நாய் போல் திரிவான்
பெரியவன் என்னும் பேர் படையான் பித்தன்

திருக்குறள்–

140 உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்.
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமை.

மாறாட்டமாகவே வந்தபடி பிதற்றித்
தேறாமல் செய்வான் சிரித்து.

*மாறாட்டம் = மனக்குழப்பம்.*

## தன்னை அறிந்தோர் தலையானோர்

347 தன்னை அறிதல் தலையானோர் தங்கடமை
என்னப் பெரியோர் இயம்புவரால் – மின்னனைய
பொய்யான வாழ்வைப் புதுமையென எண்ணுவரோ
கைமேற் கனியாகக் காண்.

*தன்னை அறிதல் = ஆத்மாவை அறிதல்.*

நானென நீயென வேறில்லையென நகையால்
தானெனைச் செய்தபிரான் அவன் சமர்த்து ஆரறிவார்
கோனெனை ஆண்டு கொண்டான் ஒன்றுங் குறைவில்லைத
தேனெனச் சிந்தையுள்ளே எந்நாளும் தித்திக்குமே.

*பிரான் = ஆத்மா. கோன் = என்னை அரசாளும் ஆத்மா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கொடு வரவுமில்லை பூமி வானம் இங்கில்லை
நீக்கற ஒங்கி நிற்கும் நின்மலன் தன்னையன்றிக்
காக்குமோர் தேவுமில்லை காலமும் நேரம் இல்லை
நோக்குவார் தங்கட்கெல்லாம் நுணுக்கமாய்த் தெரியுமன்றே.

*சமாதி நிலை அடைந்தவர்களின் அனுபவம்.*

தன்னை அறிந்தோமே.

349 தன்னை அறிந்தோமே - கிளியே தவத்தில் உயர்ந்தோமே
பின்னம் இறந்தோமே - கிளியே பெருமான் அருளாலே
எம்மை நிகராவார் - கிளியே எவரும் உலகில் இல்லை
செம்மை மனத்துடனே - கிளியே சிவன் பாதம் நினைப்போமே
இம்மை மறுமைக்கும் கிளியே எவரும் இணையில்லை
அம்மையும் அப்பனுமே - கிளியே ஆம் துணை நீ அறியே.

*தன்னை = ஆத்மாவை. எம்மை = ஆத்ம ஞானிகளை.*
*சிவன் பாதம் = கருவில் மிதித்த கமலப் பாதம்.*

உனைக் கூறும் வகையென்னே.

350 மண்ணானாய் விண்ணானாய் மதியானாய் ரவியானாய்
கண்ணானாய் ஒளியானாய் காட்சியெல்லாம் நீயானாய்
பெண்ணானாய் ஆணானாய் பேதம் என்றும் நீயானாய்
எண்ணானாய் என்னானாய் என்பதல்லால் என்சொல்கேன்.

*என்னானாய் = எனக்குள் இயங்கும் ஆத்மாவானாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்படாதிருக்கத் தயவு

352 எந்நேரமும் உந்தன் பொன்னாரடி
ஏத்தித் தொழ ஏழைக்கே அருள்
அன்னே உன்னை அல்லால் துணை
இம்மா நிலம் எவரும் இல்லையே.

*பொன்னாரடி = ஒளிமயமான கருவில் அகார எழுத்தாய் நிற்கும் கமலப் பாதம். உன்னை = ஆத்மாவை.*

353 முத்திக்கு வழி காட்டும் – எந்தன் மூட புத்தியை ஓட்டும்
எத்திக்குமாகி இருக்குந் தெய்வமே
ஏழை அடியார்க்கு இரங்கும் உய்யவே
சித்தத்துட் தித்திக்கும் தீங்கரும்பே
பக்தர் உள்ளத்தில் பாக்கியவானே
பாவம் அனைத்தும் நீக்கியாள் கோனே.

*முத்தி = ஆணவம் கர்மம் மாயை அற்ற நிலை. கோனே = என்னை ஆளும் ஆத்மாவே*

ஓங்கார நாதம்

353 ஓங்கார நாதமே ஓதவொண்ணாப் பிரமாதமே
ஓதிடவே அருள் பாலிக்குமே நன்மை
பூரிக்குமே மனம் சேவிக்குமே அருள் (ஓங்கார)
உயிரை எழுப்பிச் சிவத்திலே மனம்
பயிலப் பயிலச் சுவைக்குமே தினம்.

*ஓங்கார நாதம் = ஓம் என்னும் ஓசையை உணர்வாலேயே ஓதலாம். சிவத்திலே ஆத்ம தண்டிலே சீவன் சிவலிங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தா்மமெங்குந் தங்க அருளையா.

355 ஐம்பொறி மாட்டு மனசு போய் அலைந்திடிலோ பழிபழி
சர்வதியாகம் தந்தேன் தாளைத் தலையில் சூட்டிடு.

*தாளை = கருவில் மிதித்த கமலப் பாதம். அகாரம் தலையில் சூட்டிடு = அகாரத்தை எழுப்பி உகாரத்தில் சென்னியில் சூட்டு.*

உன் அடிமை நான் ஐயனே

358 உன்னடிமை நான் ஐயனே உள் மகிழ்ந்து பார் மெய்யனே
பொன்னடி மாதவர் சேர் பெருமுத்தனே பூங்கொடியாள் பங்கா
உன்அடி என்முடி வைத்தினி ஆளுவாய் ஓங்காரத்துட் பொருளே
ஓயாமல் பொய் பேசி உழைக்கின்ற உலுத்தரை உறவென்று
இருந்துவிட்டேன்
வாயார வாழ்த்தி வணங்கும் அடியாரை மனசார போற்ற
வைப்போய்

359 இனி உத்தமரோடு பிரியாமல் வாழ உன்னருள் தாருமையா
நீயே நானென்று நினைக்கும் மெய்யடியாரை நேயத்தோடு
வணங்கிடுவார்
தாயே அனைய சங்கரனே வந்து அருள் தாரும் ஐயா.

*பூங்கொடியாள் = சத்தி. பங்கா = ஒரு பாதி. நேயத்தோடு வணங்கிடுவார் = அன்போடு துதிப்பார்.*

அப்பா பரமசிவம்

359 அன்று தொட்டு இன்று மட்டும் அடியேனும் தேவரீரும்
அத்துவித மாயிருந்த வித்தை தனை ஆரறிவார்
ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒரு பொருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பேது யான் செயினும் அப்பா பொறுத்தருள்வாய்
அப்பாலுக்கப்பாலாய் ஆரும் அறியாத வண்ணம்
ஆடுந் திருநடனம் காண அருள்புரிவாய்.

*தேவரீர்= ஆத்மா. அத்துவிதம் = ஒரு பொருளாக*

சிவசிவ வென்று சொல்லி

360 தில்லையம்பலத்தைக் கண்ணாற் காணேனோ
சிவ சிவ என்று சொல்லிப் பேணேனோ
நல்லவர் கூட்டத்தைத் தேடி நாடேனோ
அல்லும் பகலும் பாடி ஆடேனோ
எல்லையில்லாத இன்பம் பெருகாதோ
ஏழைகள் மேல் இரக்கம் வாராதோ
நீயே நானென்று சொல்லி நில்லேனோ.

*தில்லையம்பலம் = விண்ணுலக வெளி.*

362 பாதி மேனியில் பாவையை வைத்தவன்

எல்லாஞ் சிவன் செயல்

363 தோன்றாத் துணையை என்றுந் துதிப்போம்
தூய திருப்பாதத்தைப் பதிப்போம்
ஈன்றாளையும் அப்பனையும் மதிப்போம்
எல்லாஞ் சிவன் செயலென்று இருப்போம்
ஆன்றோர் விதித்தபடி நடப்போம்
அந்தி சந்தி மந்திரத்தைப் படிப்போம்
நான் தானெனும் இரண்டுந் தடுப்போம்
நாதன் அடியிணைக் கீழ்க் கிடப்போம்
வஞ்சம் பொறாமை நெஞ்சில் வையேம்
சஞ்சலத்தால் மிஞ்சி நாங்கள் நையேம்
கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தை வெல்வோம்
கூடாத கூட்டத்தில் நாங்கள் செல்லோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் = பஞ்சாட்சர மந்திரமான ஐந்தெழுத்து.
அடியிணை = கருவில் மிதித்த இறை அடிக்கு கீழ் சமாதி நிலையில் இருப்போம்.

இறைவா உனக்கபயம்

366 என்னை எனக்கு என்னாலே காட்டி வைத்த இறைவா
எல்லாம் செய வல்லவனே எந்தன் பெருமானே
அன்னையினும் அப்பனினும் அன்புமிக்க அரனே
ஆன்மாவுக்கு ஆன்மாவே ஆதி அந்தம் இல்லானே
தென்னை பனை சேர் இலங்கைத் திருவே என் செல்வமே
தேவாதி தேவனே சிறியேன் உனக்கு அபயம்
ஆன்மாவுக்கு ஆன்மாவே தலைவன்.

மங்களம்

366 அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில் குருநாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னால் அறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட்டு உணபவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி அந்தமில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
எங்குத் தங்கும் உயிர்களுக்கு மங்களம்.
*அத்துவிதம் = தானே தனிப்பொருளான ஒன்று.*

குருநாதன் அருள் வாசகம்

367 நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே
ஆகையால் நாம் அவருடைய உடைமை
அவருடைய அடிமை
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே
நாம் அவரை ஒரு போதும் மறந்திருக்க முடியாது.
நமக்கு ஒரு குறைவுமில்லை
நாம் என்றும் உள்ளோம்
எங்கும் இருக்கிறோம்
எல்லாம் அறிவோம்.
இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக.

367 "சந்தமும் எனது செயல் நினது செயல் யானெனுந்
தன்மை நினையன்றி யில்லாத
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே".
*என்னும் தாயுமானவர் அருமைத் திருவாக்கே இதற்கு போதிய சான்று.*

சிவனடியார்

368 நாங்கள் சிவனடியார்
ஆதியும் அந்தமும், இறப்பும் பிறப்பும்
இரவும் பகலும், சுகமும் துக்கமும் எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையென்னும் திருமந்திரத்தை எவனொருவன்
மறவாமல் தியானஞ் செய்கிறானோ
அவனுக்கு ஒரு குறையும் வராது.

*சிவனடியார் = கருவில் மிதித்த கமலப்பாதத்தை அறிந்துணர்ந்த சிவனடியார்.*

*காரிய சித்தி எய்தும் வரையும் விடாமுயற்சி செய். நீ ஏன் ஓயாமல் கெட்ட காரியங்களைச் சிந்திக்கிறாய்? அச்சிந்தனையை விட்டு முழு மனத்தோடு தெய்வத்தை வணங்கு. உனக்கு விதிவசத்தாற் பொருந்துவனவற்றை உவகையோடு ஏற்று நடத்து. இறுதியில் யாவும் ஜெயமாகும்.*

*தெய்வம் = ஆத்மா.*

உபதேசம்

369 எல்லாம் என்னிடத்தே உண்டாகின்றன.
எல்லாம் என்னிடத்தே நிலைத்திருக்கின்றன.
எல்லாம் என்னிடத்தே ஒடுங்குகின்றன.
என்ற தூய்மையான எண்ணம் உடையவராய்
இருத்தல் வேண்டும். மேலும் எனக்கொரு குறைவுமில்லை.

*என்னிடத்தே = என் ஆத்மாவில்.*

369 என்னிடத்திலே எல்லோரும் அன்பாய் இருக்கிறார்கள்.
நானும் எல்லாரிடத்திலும் அன்பாய் இருக்கிறேனென்று
அடிக்கடி நினைந்து நினைந்து சாதிக்க வேண்டும்
இப்படியே இடைவிடாமற் பழகி வந்தால் எல்லாம்
அறியும் ஆற்றலும் எல்லாஞ் செய்யும் வல்லமையும்
எளிதிற் கைவரும். "ஓம் தத் சத் ஓம்"

*ஓம் என்னும் நானே மெய்ப்பொருள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவதொண்டு

370 நாங்கள் சிவனடியார்கள். சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழு கின்றோம்.

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு மரணம் பிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசை இல்லை. மனமான பேய் இல்லை. காலதேச வர்த்தமானம் நமக்கில்லை. நாம் அனைத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றோம்.

371 நாங்கள் சிவனடியார். இது சரியை,இது கிரியை, இது யோகம், இது ஞானம், இது மந்திரம், இது தந்திரம், இது மருந்து.

இந்தத் தியானத்தில் நிலைத்தலே நிஷ்டை. இந்த நிஷ்டையுடையோர்க்குச் சீலமில்லை. தவமில்லை. விரதமில்லை. ஆச்சிரமச் செயலில்லை.

இவர்கள் தாம் விரும்பிய வண்ணம் மண்ணில் வாழ்ந்தார்கள், வாழுகிறார்கள், வாழ்வார்கள். இவர்கள் பெருமை யாவரும் அறியார். கற்கண்டின் இனிமை கற்கண்டை உமிபவர்க்கே தெரியும்.

ஒரு பொல்லாப்புமில்லை. எப்பவோ முடிந்த காரியம். நாம் அறியோம். முழுதும் உண்மை.

## தவம்

372 நாங்கள் எங்கள் சிறுமைக் குணத்தினால் இயல்பு அழிந்து தரும வழியினின்று தவறுகிறோம். தவறுதல் நீங்கித் திடமுண்டாகச் சிவத்தியானமே சிறந்த கருவியாகும். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் மிகுந்த செல்வம் இருப்பினும் நாங்கள் புலன்களை அடக்கி ஆளுதல் முடியாது. ஆதலால் திருவருளை முன்னிட்டு மனத்தைப் புலன் வழி செல்லாமல் அடக்கி ஆள். இதுதான் தவமென்று பெரியோர் சொல்வர். அதை விடுத்து இடம்பபான வேள்வி முதலியவை செய்வதால் திடமுண்டாக மாட்டாது.

*(ஐந்தெழுத்தை ஓதித்தியானம் செய்வதே சிவத்தியானம்)*

373 சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார். அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான்.

*சீவனே சிவன்*

ஆகையால் "நான் அவனே" என்று தியானம் செய். அப்போது உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கை யேயாகும். அவனைத் தவிர வேறு பொருள் இல்லை. அவனே அனைத்தும். அப்படியான அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகிறான்.

*நான் அவனே = சீவன் சிவனே.*

373 தேடித் திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை,
வாடித் திரிந்து வருந்த வேண்டாம்.
தேடிய பூடு காலுக்குள்ளே என்ற தெவிட்டா
வாசகமொன்றுண்டு. நூதனமான காரணமொன்றும்
பூதலம் மீதில் இல்லவே இல்லை.

*என்னுள் விசுவநாதனை, இறைவனைக் கண்டேன். நூதனமான செயல்கள் ஒன்றும் உலகில் நடப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்மார்க்கம்

374 குரங்கு போல் மனம் கூத்தாடுகின்றதே. இதன் கூத்தை எப்படி அடக்குவதென்று தெரியவில்லையே. நன்று சொன்னாய். இதற்கு நல்ல மருந்து உன்னிடம் உண்டு. நீ அதை மறந்து போனாய். சொல்லுகிறேன் கேள்.

சிவத்தியானம் என்னும் மருந்தைத் தினந்தோறுஞ் சாப்பிட்டு வா. மனக்குரங்கின் பிணி மாறும்.

*(ஐந்தெழுத்தை ஓதுதலே சிவத்தியானம்)*

ஆன்ம லாபத்தின் பொருட்டு இதைச் செய். படிப்படியாக அவன் மனம் ஒடுங்கி வருவதை அவன் கண்கூடாகக் காணுவான்.

கை விளக்கை ஒருவன் கொண்டு செல்வானானால் இராக் காலத்தில் அவன் மனங் கலங்குவானோ கலங்கான். அப்படியே சிவத்தியானத்தைச் செய்து வருவானானால் மாய இருள் அவனை அடையுமா? அடையா.

போதனையிலுஞ் சாதனை சிறந்தது ஒரு பொல்லாப்பும் இல்லை.

ஆன்ம லாபமே பொருளெனக் கண்ட அறிஞர் அநித்தியமான இந்த உலக இன்ப துன்பத்தின் மயங்காது தாமரை இலையில் நீர் போற் சகத்துடன் கூடி வாழ்வார். ஆன்மலாபத்தைப் பெற நினையாதவர் இந்த உலகத் துன்ப இன்பத்தினாற் கலங்கித் தயங்கித் திரிவார்கள். ஆன்ம லாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு நன்மை தீமையை வென்று, நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களைக் களைந்த அறிஞர், இறைவன் திருவடி நிழலில் பிறப்பு இறப்பு அற்றுப் பேரின்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வார். அஃதறியா அறிவிலிகளே துன்பக் கடலிலே வீழ்ந்து எரிவாய் நரகத்துக்கு ஆளாவர்.

சிவத்தியானம்

377 ஓ மனிதனே! நீ உண்மைப் பொருள் கேடற்றவன். உனக்கு ஒருவருங் கேடு விளைக்க முடியாது. நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். நித்தியன் உறுதியுடனே சிங்கம் கானகத்தில் திரிவது போல் உலகமாகிய கானகத்தில் திரி. எந்த விதத்திலும் தளர் வடையாதே. ஒரு நூதனமும் இங்கில்லை. முழுதும் உண்மை. நீ பரமாத்மா.

ஓம் தத் சத் ஓம்

ஓ மனிதனே! சற்றுப் பொறுமையாய் இருந்து பார். நீ யாரெனத் தெரிந்து கொள்வாய். துன்பமும் இன்பமும் உலக நடவடிக்கைகள். நீ சித்துப் பொருள்.

உன்னை ஒன்றும் தாக்க மாட்டாது. எழுந்திரு. விழித்துக் கொள். சிவத்தியானமென்னுந் திறவுகோலால் மோஷ்ஷ வீட்டின் கதவைத் திறந்து பார். எல்லாம் வெளியாகும்.

378 ஓ நண்பனே! உன்னை யார்தான் பாவியென்று சொல்ல வல்லான். ஏன்?

நீ சிவத்தின் அம்சமல்லவா? மறந்து போனாய். ஓம் தத் சத் ஓம் என்று ஓயாமற் சொல்லு. உன் முழு மனத்தோடும் இறைவனுக்கு உன்னை ஒப்புக்கொடு. சிவத்தியானத்தை அசட்டை பண்ணாதே. ஈற்றில் யாவும் நன்மையாய் முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் சிவபெருமானென்ற நூலிலே கோக்கப்பட்ட பல நிறமுள்ள மணிகளை ஒப்பவர். நாங்கள் சிதறிப் போவதுமில்லை. நூல் அறுவதுமில்லை. ஓ சிநேகிதா! நீ சிவனடியானென்று முழுமனத்தோடும் நினை. எல்லா வெற்றியும் உன்னிடம் உண்டு. அதற்கு மேல் வேறொன்றுமில்லை. யாவும் உன்காலடியில்.

சிவபக்தி

379 சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக்கிய வானாக்கும். மற்றைய அனைத்தும் பிரயோசனமற்றவை. ஆகையால் இடைவிடாமற் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே. வெற்றி உன் சொந்தம். எத்தனை முறை தவறினாலும் தைரியத்தைக் கைவிடாதே. நீயோ சித்துப் பொருள் (அதாவது அறிவுப் பொருள்) நீயொருநாளும் அழிய மாட்டாய். எழுந்திரு. விழித்துக் கொள்! காரியங் கைகூடு மட்டும் வழியிலே தங்கிவிடாதே. உற்சாகத்தோடு முன்னேறிச் செல். உனக்குச் சகல சத்தியுங் கட்டுப்படுவதைக் காண். வீண் வாத தர்க்கத்திலே நாளைப் போக்காதே. நீ எங்கே போகிறாயோ அங்கே உன்னுடன் பகவான் வருவார்.

உடல் பொருள் ஆவி முன்றையும் பகவானுக்கு ஒப்படை. அதன் பின் உன்னைப் பற்றிய காரியங்களைக் கைவிட்டு விடு. அனைத்தும் அவனே பார்.

குருவாசகம்

379 ஆத்துமா நித்தியமானது. பிரிவில்லாதது. பூரண மானது. சரீரமோ அழியுந் தன்மையுள்ளது. பிரிவுள்ளது. இப்படி இருக்கையில் நாங்கள் இவ்விரண்டையும் சரி யென்று சொல்ல முடியுமா? அப்படி நாங்கள் சொன்னால் இதிலும் பெரிய பாவமும் பழியும் வேறுண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மா எல்லாத்துக்கும் ஆதியாயுள்ளது. யாவையும் ஆளுகின்றது. (ஆதிப்பிரான்)

*ஆத்மாவே ஆதிப்பிரான்.*

380 ஆத்துமா பிரகாசமுடையது. சரீரமோ இயற்கையில் இருள் மயமானது. யார் ஒருவன் தன்னைச் சரீரியென்று நினைக்கிறானோ, ஐயோ, அவனிலுங் கீழ் மகன் யார்? யார் ஒருவன் தன்னைப் பூரணன் என்றும் நித்தியன் என்றும், இயற்கை அறிவுடையவனென்றும் நினைக்கி றானோ அவன் உண்மை அறிவாளி. அவனுக்கு இணையாக ஒரு தெய்வமு மில்லை.

வேதம் ஆகமம் யாவும் இந்த உலகம் முழுவதும் தெய்வமே நிறைந்திருக்கின்றதென்றும் அதை விட வேறு யாதுமில்லையென்றும் முறையிட நாங்கள் எப்படி உலகம் இருக்கிறது, சரீரம் இருக்கிறதென்று நினைக்கலாகும். அப்படி உலகம் சரீரம் வேறாய் இருக்கிறதென்றால் இதை விடப் பழி பிறிதுண்டோ? ஆன்றோரும் "நின்னாவார் பிறரன்றி நீயே ஆனாய்" என்ற சொல்லியிருக்கிறார்கள்.

*இன்னோரன்ன பல காரணங்களாலும் கடவுளைத் தவிர வேறொன்றுமில்லை. யாவும் அவன் செயல்.*

382 நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கின்றோம். நாம் அவருடைய தாய். நமக்கும் அவருக்கும் ஒரு குறைவுமில்லை. நம்மை அவர் பிரிய முடியாது. முழுதும் உண்மை.

யோகசுவாமி அருளிச் செய்த நற்சிந்தனையும் பதஞ்சலி அருளிச் செய்த யோகசூத்திரமும் திருமூலர் அருளிச் செய்த திருமந்திரமும் ஒரு மெய்ப்பொருளையே விளக்குகின்றன. வேறுபாடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன் யோகசுவாமி

குருசீடப் பரம்பரைக் கொள்கையின்படி குரு நாதனின் பெயரை பெயர் அற்ற ஆத்மாவுக்குக் சூட்டி வணங்குவது அரன் நெறியாகும். திருமூலரும் தன் குரு நந்தியின் பெயரையே தன் ஆத்மாவுக்குச் சூட்டி 3000 திருமந்திரங்களையும் இயற்றியுள்ளார். பிரம்மா விஷ்ணு ருத்திரன் ஆகிய மூவருங் கூட ஆத்ம சொரூபத்தை அறியார்கள்.

நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்

ஆத்மாவாக நின்று இயங்கும் எங்கள் குருநாதன் ஒரு சூக்குமமான மெய்ப்பொருள். அதற்கு பிறப்பு இறப்பு இல்லை. நன்மை தீமையென்று அறியாதவன். அவரவர் செய்த பாவ புண்ணியங்களின்படி கருவில் விழுந்து உடம்பைப் படைத்து உள் நிற்பான். அப்பர் தேவாரம் விளக்குகின்றது.

முன்னை என் வினையினாலே மூர்த்தியை நினையமாட்டேன்
பின்னை நான் பித்தனாகிப் பிதற்றுவேன் பேதையேன் நான்
என்னுள்ளே மன்னி நின்ற சீர்மய தாயினானை
என்னுள்ளே நினைய மாட்டேன் என் செய்வான் தோன்றினேனே.

திருமந்திரம்

நான் முன்னம் செய்த விதிவழி தானல்லால்
வான் முன்னம் செய்தங்கு வைத்ததோர் மாட்டில்லை
கோன் முன்னஞ் சென்னி குறிவழியே சென்று
நான் முன்னம் செய்ததே நன்நிலமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்

ஆத்மாவாக இயங்கும் நான் இறைவனாய் நிற்கும் தானாய் ஒளிமயமாய் விளங்குகின்றான். கீழ்க்காணும் திருமந்திரம் விளக்குகின்றது.

2596 எல்லாம் அறியும் அறிவு தனை விட்டு
எல்லாம் அறிந்தும் இலாபம் அங்கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானெனில்
எல்லாம் அறிந்த இறையெனலாமே.

சீவன் சிவனென்றும் என்னையன்றி ஈசன் வேறில்லையென்று திருமந்திரமும் எல்லா யோகிகளும் கூறியுள்ளார்கள்.

104 ஆதிப்பிரானும் மணிமணிவண்ணனும்
ஆதிக்கமலத்து அலர்மிசை ஆயனும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின்றாரே.

ஐந்தெழுத்துச் சக்கரத்தில் ஆத்மாவாக இயங்கும் மெய்ப்பொருளே
அத்வைதப் பொருளான இறைவன்.

*
* *
* * *
* *
*
* *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY J & S SERVICES (PVT) LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org